கல்கி

KALKI 11.12.83 ரூ1.20




இன்பப் பூரிப்பில் இதயம் நெகிழ்ந்திடும்...
சாதனா®
ஃபேப்ரிக்ஸ்
ஷர்ட்டிங்கள் • சூட்டிங்கள் • புடவைகள்
MIRAT ST 831-T.
Sadhana TEXTILE MILLS PVT. LTD., BOMBAY 400 018

சென்னை வரும் கங்கை

பாரதம் முழுவதும் ''ஏகாத்மதா யக்ஞம்'' என்கிற பெயரில் இப்போது பவனி வருகிற புனித நீர்ப் பயணம் சென்னைக்கு இந்த டிசம்பர் பதினோராம் தேதி வருகிறது.

அழகாக ஜோடிக்கப்பட்ட ரதத்தில் ஐந்தடி உயரக் கும்பத்தில் கங்கை நீர் வருகிறது. ஆறு அடி உயரத்துக்கு நம்முடைய சுவாமிமலையில் தேவ சேனாபதி ஸ்தபதியால் உருவாக்கப்பட்ட பாரத மாதாவின் வெண்கலச்சிலை மற்றொரு ரதத்தில் பிரிவினை செய்யப்படாத அகண்ட பாரதத்தின் படத்துடன் யாத்திரை வருகிறது.

ஆன்மநேய ஒருமைப்பாடு ஹிந்துக்களிடையே மட்டுமின்றி இந்தியாவில் அனைத்து மதத்தவரிடையே மட்டுமின்றி இன்றைக்கு அண்டை நாட்டினராகப் பிரிந்து நிற்போருடனும் நமக்கு ஏற்பட வேண்டும் என்று இந்த அகண்ட பாரதப் படம் வலியுறுத்துவதாகக் கொள்ளலாம்.

கங்கா மாதா என்று வடபகுதியிலும், கங்கையம்மன் என்று நம்முடைய பாமர ஜனங்களிடையேயும் வழங்கப்படுகிற தத்துவம் ஒருமைப்பாடு என்கிற ''புதுக்கவிதை''யின் புராதனமான வடிவம் தான். ஜாதி, மதம், மொழி எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவை கங்கை நதியும், பாரதமும்.

இந்த உணர்வை மக்களிடையே பரப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் தீர்த்த யாத்திரைக்கு நாடு தழுவிய அளவில் 'விஸ்வ ஹிந்து பரிஷத்' ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.

ஹரித்வாரத்திலிருந்து புறப்பட்டு ஒரு கங்கை தீர்த்த கலசம் கன்னியாகுமரி வருகிறது. காட்மண்டுவிலிருந்து புறப்படும் இன்னொரு ரதம் பதினாறும் தேதி இராமேஸ்வரம் வருகிறது. இதேபோல் கங்காஸாகரிலிருந்து புறப்படுகிற மூன்றாவது ரதம் குஜராத்தில் உள்ள ஸோமநாதபுரம் சென்றடைகிறது. இந்த மூன்று ரத யாத்திரைகளும் பாரதத்தின் மையப்பகுதியான நாக்பூரில் நவம்பர் 29-ஆம் தேதி சந்தித்துக் கொள்கின்றன. வெண்கலச் சிலையை உருவாக்கிய தேவஸேனாபதி ஸ்தபதிக்கு நாக்பூர் விழாவில் பாராட்டு.

இதே நேரத்தில் சின்னச் சின்னதாக நூறு 'மினி' யாத்திரைகளும் இந்த மகாயக்ஞத்தின் இரத்தநாளங்களாய்ப் பாரதத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கங்கா ஜலத்தை எடுத்துச் சென்று ஆங்காங்கு உள்ள நீர்நிலைகளைப் புனிதமாக்குகின்றன.

அரசியல் கண்ணோட்டத்தில் சிலர் இது ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் என்று 'கண்டுபிடித்து'க் கண்டனம் செய்திருக்கிறார்கள். எந்தப் பிற மதத்தவர்களை நினைத்து இவர்கள் பயப்படுகிறார்களோ, அவர்களில் ஒருவரே இந்த மகத்தான வேள்வியை வரவேற்று ஹிந்துவில் கடிதம் எழுதியிருப்பதைக் கவனித்தால் எதிர்ப்பின் அரசியல் தன்மை புரியும். ''இந்துக்களை மட்டும் இந்த யக்ஞம் ஒன்றுபடுத்துகிறது என்று கருத வேண்டாம். இந்தியர்கள் அனைவருமே ஒன்றுபடுவதற்கு ஏற்றதாக இதை அமைப்போம்...'' என்று எழுதுகிறார் அப்துல் ஸத்தார் என்கிற அந்த அன்பர்.

கல்கி தீபாவளி மலரில் காஞ்சி முனிவர் அறிவுறுத்தியது போல ஒருபக்கம் ஸயன்ஸும் டெக்னாலஜியும் ஸர்வ தேசங்களை ஒன்றுக்கொன்று கிட்டத்தில் கொண்டு வந்துவிட்டது என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டே இன்னொருபக்கம் கட்சி, பாஷை, பிரதேச அபிமானங்களை வளர்த்து ராஜ்யத்துக்கு ராஜ்யம் ஏன் ஜில்லாவுக்கு ஜில்லா, கிராமத்துக்குக்கிராமம் கூட எல்லைச்சண்டை, ஜலப் பங்கீட்டுச் சண்டை, ஜாதிச் சண்டை என்று உருவாக்காமலிருப்போம்... வருங்கால சந்ததியினர் நம்மை எள்ளி நகையாட இடம் கொடாதிருப்போம்.

-வெண்

O புதுதில்லியில் வரவேற்பு

X பாரத மாதா ரதம்





உடைந்து போகுமா ஒருமைப்பாடு?

ராஜாஜி பிறந்தநாள் டிசம்பர் 10. இந்த நன்னாளில் அவரைப் போற்றி அஞ்சலி செலுத்துவதோடு உயிருக்குயிராய் அவர் நேசித்த பாரத நாட்டை எதிர்கொண்டுள்ள பல பிரச்னைகளுள் ஒன்றினை எடுத்து அலசுவதையே அவரும் விரும்புவார் என்று கருதி தேசிய ஒருமைப்பாடு குறித்து ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தோம்.

பங்கேற்பவர்கள்:

திரு பி. எஸ். கைலாசம்
சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி.

திரு நா. பார்த்தசாரதி
தீபம் ஆசிரியர்.

மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்
சுவாமி கமலாத்மானந்தா

நீதிபதி கைலாசம் உரையாடலைத் தொடங்கி வைத்தார்.

கைலாசம்: மூதறிஞர் ராஜாஜி எத்தனையோ பெரிய பதவிகளை வகித்தார். ஆனால் அவருடைய வாழ்க்கையிலேயே சிகரமான கட்டம் கவர்னர் ஜெனரலாக அவர் பணியாற்றிய தருணமல்ல; சேலத்தில் தாராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருந்த கிரிமினல் லாயர் ராஜகோபாலாச்சாரி, சொத்து, வருமானம் எல்லாவற்றையும் துறந்து விட்டு காந்தி ஆசிரமம் நிறுவி ஏழை எளியோருக்குத் தொண்டாற்ற வந்தாரே அதுதான் அவர் வாழ்நாளில் உச்சக்கட்டம் என்று நான் நினைக்கிறேன். அம்மாதிரியான தியாக உணர்வு, சுயநலமின்றி மக்கள் நலனையே கருதுகிற மனப்பான்மை, இன்றைய தலைவர்களுக்கு இருந்தால், ஒருமைப்பாடு பிரச்சினை என்ன, வேறு எந்தப் பிரச்சினையுமே நாட்டில் இராது; ஓடிப்போகும்! புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் ஸ்தாபித்த போது அங்கே ஹரிஜனங்களுக்குக் குடிக்க நீர் கூடக் கிடைக்காது. அவரவர் கப்பலேறி இலங்கைக்குத் தோட்டத் தொழிலாளியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் ராஜாஜி வந்து அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்தார்; ஒவ்வொரு இல்லத்திலும் ராட்டை சுழல வைத்து அதன் மூலம் சாப்பாட்டுக்கு வழி செய்தார்; மதுவிலக்குப் பிரசாரம் செய்து எத்தனையோ குடும்பங்களைக் காப்பாற்றினார். இதற்கெல்லாம் அவருக்கு அரசாங்க உதவி, ஒத்துழைப்பு கிடையாது. அதிகார பலம், பண பலம் ஒன்றும் இல்லை. மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் மட்டும்தான் இருந்தது. இந்தச் சேவை மனப்பான்மை இன்றுள்ள தலைவர்களிடம் இருந்து சுயநலம், பணத்தாசை, பதவி மோகம் எல்லாம் நீங்கினாலொழிய நம்மை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளுக்கு விமோசனம் இல்லை. சரி, இன்று நாம் எடுத்

பி. எஸ். கைலாசம்





...துக் கொண்டுள்ள பிரச்னைக்கு வருவோம். ஒருமைப்பாடு என்றதுமே அதற்கு இடையூறாக நிற்கிற மொழிப் பிரச்னை தான் முதலில் நினைவுக்கு வருகிறது. ராஜன்பாபுவின் ஒரே ஒரு வோட்டினால் ஹிந்தி சாசனத்தில் முக்கியத்துவம் பெற்றது. ராஜேந்திரபிரசாத் பாவம், நல்ல எண்ணத்தில் தான் செய்தார். ஆனால் அந்த ஒருவோட்டு எத்தனை பின்விளைவுகளை வேண்டாத தலைவலிகளை ஏற்படுத்தி விட்டது! விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் தன்மையும் இருந்தால் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து வராது. சுதந்திரம் வந்த பிறகு மொழி வாரி மாநிலங்களாகப் பிரித்து விட்டோம். இதுவே ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் தான். இந்தியாவில் பல்வேறுபட்ட மொழி பேசுகிறவர்கள், மதத்தினர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாருக்கும் இந்தியா சொந்தம். நாம் எல்லோரும் இந்தியர்கள்' என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் பார்க்கப் போனால் இந்துக்களுக்குள்ளேயே ஆயிரம் வேறுபாடுகள்! 'கோயில் யானைக்கு தென்கலை நாமமா, வடகலை நாமமா' என்று வழக்கு நடக்கிறது! இதனால் தான் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் நம் செயலால் பிறர் உள்ளத்தைப் புண்படுத்தாது நடந்து கொள்ளும் பண்பும் வளர வேண்டும் என்கிறேன்.

நா. பா: எந்த விஷயத்தைப் பற்றியும் ராஜாஜி தீர்க்கமான ஒரு கருத்தைக் கொண்டிருந்தார். அதுதான் அவருடைய தனிச் சிறப்பு. நீங்கள் சொன்ன மாதிரி சுயநலம் என்பது அவரிடம் துளியும்

நா. பார்த்தசாரதி



இல்லாததால் அவரால் நாட்டு நலனை மட்டுமே தெளிவாகச் சிந்திக்க முடிந்தது. அதைத் தைரியமாக வெளிப்படுத்தவும் முடிந்தது. அவ்வாறு அவர் வெளியிட்ட போது ஒவ்வொரு முறையும் பல திக்குகளிலிருந்து அவர் கண்டனத்துக்கும், எதிர்ப்புக்கும் உள்ளானார். அப்படி அவர் பலத்த எதிர்ப்புக்கு ஆளானதே அவர் ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் சுயநலமின்றி தெளிவாகச் சிந்தித்தார் என்பதற்கு நிரூபணமாகக்கொள்ளலாம்! 'சுதந்திரத்துக்கு முன் இந்த நாட்டை ஆங்கிலேயர் தான் ஆங்கிலத்தின் மூலம் ஒன்றுபடுத்தி வைத்திருந்தார்கள்; அதைக் கைவிட வேண்டாம்; நாட்டுக்குள் பேசப்படுகிற எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்தை அளிப்போம்; ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகக் கொள்வோம்; அப்போது நமக்குள் ஏற்றத்தாழ்வு பிரச்னை எழாது; அதே நேரத்தில் அயல் நாட்டுத் தொடர்புக்கும் ஆங்கிலம் உதவும்' என்ற சீரான யோசனை கூறினார். கேட்பாரில்லை. ஹிந்தியை மறைமுகமாகத் திணிக்கிறார்கள். இங்கே ஹிந்தியை எதிர்த்து வீராவேசமாகப் பேசும் நமது தலைவர்கள் கூட, பேச வேண்டிய இடத்தில் அந்தத் துணிவைக் காட்டுவதில்லை! அதேபோல் வட இந்திய தலைவர்கள் இங்கே வரும்போது 'ஹிந்தி திணிப்பு கூடாது, இராது' என்று பேசி விட்டுத் திரும்பச் சென்று மறைமுகத் திணிப்புக்கு வழி செய்கிறார்கள். எல்லாம் மோசடியாகப் போய் விட்டது. ராஜாஜி ஒருபடி இறங்கி வந்து ஒரு சமரசத் திட்டத்தைக் கூட அறிவித்தார். 'நாட்டுக்குத் தேசிய மொழி ஒரு கௌரவப் பிரச்சினை என்றால் ஹிந்தியைத் தேசிய மொழியாக அறிவித்து விடுங்கள்; ஆட்சேபணையில்லை; ஆனால் நாட்டுக்குள் அறிஞர்களிடையே இணைப்பு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் ஆங்கிலமே இருக்கட்டும்' என்றார். இதுகூட ஏற்கப்படவில்லை. இப்படி ஒருமைப்பாட்டுக்கு விரோதமான காரியங்களைத் தலைவர்களே செய்துவிட்டு அதே தலைவர்கள் 'ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு' என்று ஜபிப்பதால் என்ன பயன்?



''முன்பிருந்த பல மொழி மாகாணங்கள் அனைத்திந்திய ஒற்றுமைக்கு வழிவகுத்தன. ஆனால் இன்று மொழிவாரி மாநிலப் பிரிவினை நாட்டைத் துண்டாடி வருகிறது. மறுபடி மக்களை ஒருமைப்படுத்த வேண்டும் என்னும் போது கஷ்டத்தை உணர்வோம். ஒவ்வொரு மாநிலமும் ஒரு தனித் தீவாகி, மொழிப்பற்று மிகுந்து, அண்டை மாநிலத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு விளங்குகிறது. அனைத்திந்திய ஒற்றுமை இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

''அனைத்து மாநிலங்களையும் ஒன்றிணைப்பது மத்திய ஆட்சி என்று நினைத்து அதனால் அதற்கு அதிக அதிகாரங்கள் தர வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். இது நோய்க்கு மருந்தல்ல. நோயை அதிகரிக்கவே செய்யும். மத்திய அரசு ஒரு மாநிலத்துக்குச் சலுகை காட்டுவதாகவும் இன்னொன்றை அலட்சியப்படுத்துவதாகவும் எண்ணி எதிர்ப்புணர்ச்சியும் புரட்சி மனப்பான்மையுமே உருவாகும். மத்தியில் அதிகாரங்களைக் குறைத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதே ஒற்றுமையைப் பலப்படுத்தும்.''



காலாநந்பானந்தா: இன்றுள்ள அரசியல் வாதிகளுக்கு மொழிப் பற்று என்பது செயற்கையாக இருக்கிறது. பாரதிக்குத் தமிழ் மொழிப் பற்று இருந்ததால் நாட்டுப் பற்று குறைந்து விடவில்லை. தாய்மொழிப் பற்று தேசப் பற்றுக்கு விரோதமாகச் செயல்பட அவசியமேயில்லை. ஆழ்வார்கள், நாயன்மார்கள் செய்யாத தமிழ்த் தொண்டையா இன்றைய நமது தமிழகத் தலைவர்கள் செய்துவிடப் போகிறார்கள்? பல மொழிகளைக் கற்றுக் கொள்வது தனி நபருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. ஆனால் மக்கள் தாமாகவே விரும்பி ஒன்றைப் பயில வேண்டுமே தவிர திணிக்கப்பட்டால் எதிர்மறை விளைவுகள்தான் ஏற்படும்... கைலாசம் அவர்கள் தன்னலமற்ற சேவை பற்றிக் குறிப்பிட்டார்கள். விவேகானந்தர் அப்படி மக்கள் பணியே கடவுள் பணி என்று கருதிச் செயல்பட்டவர்தான். நமது முன்னோர்கள் ஆன்மீக ரீதியில் இந்தப் பாரத தேசத்தை ஒருமைப்படுத்தினார்கள். காஷ்மீரத்தில் இருந்தாலும் கன்யாகுமரியில் வாழ்ந்தாலும் ராமாயணக் கதையைக் குழந்தைப் பருவத்திலேயே கேட்டு மகிழாதவர் யார்? வங்காளியானாலும் மராட்டியரானாலும் மகாபாரதம் பற்றியும் கீதை பற்றியும் அறியாதவர் உண்டா? பல்வேறு மொழிகள், கலைகள் வெவ்வேறு பிரதேசங்களில் வளர்ந்தாலும் அவையெல்லாவற்றுக்குமே அடிநாதமாக மகாபாரதமோ ராமாயணமோ ஒலிப்பதைக் கேட்கிறோமில்லையா? கங்காஸ்நானம் வாழ்நாளில் ஒருமுறையாவது கிட்டவேண்டும், புனிதமடைய வேண்டும் என்று எண்ணாதவன் இருக்கிறானா? இப்படி மகத்தான ஒரு ஆன்மீக சாம்ராஜ்யத்தை ஒருமைப்பாடு உணர்வை உருவாக்கினார்கள் நமது ரிஷிகளும் மற்றும் ஆதி சங்கரர், ராமகிருஷ்ண பரமஹம்சர் முதலானோரும். அரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட இந்தச் சகோதர உணர்வுடன் கூடிய ஆன்மீக சாம்ராஜ்யத்தைத் துண்டு துண்டாக வெகு எளிதாக உடைத்து விட முன்வருகிறார்கள் இன்றைய நமது அரசியல் தலைவர்கள்!

காளாநந்தபானந்தர்





கைலாசம்: 'ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் வாங்கினோம்; அரசியல் வாதிகளிடமிருந்து எப்போது சுதந்திரம் பெறப் போகிறோம்?' என்று ஒருவர் எழுதியது தான் எனக்கு ஞாபகம் வருகிறது. மக்கள் ஒற்றுமையாக வாழத்தான் விரும்புகிறார்கள். அரசியல் தலைவர்கள் தான் சுயநலம் காரணமாகப் பிரிவினையை வளர்க்கிறார்கள். உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். மதமாற்றங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தனி மனிதன் நன்கு யோசித்து மதம் மாற விரும்பினால் அவன் சுதந்திரத்தில் யாருக்கும் தலையிட உரிமை இல்லை. ஆனால் ஒரு கிராமத்தில் உள்ள ஏழை மக்கள் ஆயிரக்கணக்கில் ஏதோ ஒருவிதமாக ஆசை காட்டப்பட்டு மதம் மாற்றப்படுகிறார்கள் என்றால் இதைத்தடுக்க சட்டம் வரவேண்டியதுதான். ஒரு வேடிக்கையைக் கேளுங்கள். ஜனதா அரசில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வர இருந்தார்கள். ஆனால் பம்பாயைச் சேர்ந்த ஒரு ஜனதா நாடாளுமன்ற உறுப்பினர் தமது செல்வாக்கைப் பிரயோகித்து அதை நிறுத்தி விட்டார்! ஏன் தெரியுமா? அவர் தொகுதியில் இந்துக்கள் அல்லாத வேறு ஒரு மதத்தினர் அதிகம்! ஆக, ஒருவரது சுயநலம் நாட்டையே எப்படிப் பாதிக்கிறது பாருங்கள்! இந்த மதமாற்று முயற்சிகளுக்கு அயல்நாடுகளிலிருந்து வேறு பணம் வருகிறது! எத்தகைய இழி நிலை இது!



நா. பா: அயல்நாட்டுப் பணம் இதற்கு மட்டுமா வருகிறது? தேர்தல் நடத்த வருகிறது! பஞ்சாபுக்கு வருகிறது....!

கைலாசம்: சீக்கியர்களை விட அதிகமான தேசப் பற்று உள்ளவர்களைச் சில காலம்

"நமது மொழிகள் எல்லாமே நல்லவை, புனிதமானவை. ஒன்றை இன்னொன்றை விட உயர் நிலையில் வைக்கப் பார்க்காதீர்கள். ஆட்சிப் பணி தொடர்ந்து இப்போதுள்ளது போலவே ஆங்கிலத்தில் நடக்கட்டும். தலையெடுத்துள்ள பிரச்சினை தீர இதுவே எளிய வழி. மக்களின் உணர்ச்சிகள் மிக முக்கியமானவை. அவற்றைப் புண்படுத்தாதீர்கள். நமது மொழிச் சண்டைகள் கூட ஆங்கிலத்தில் நடக்கின்றன! ஆங்கிலம் இப்போதுபோலவே இணைப்பு மொழியாக எப்போதும் நீடிக்கும் என்று உத்தரவாதம் அளித்தால் எல்லாம் சரியாகிப் போகும்."





முன்னர் வரை யாரும் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. அங்கே இப்படி ஒரு நிலைமை எதனால் ஏற்பட்டது? தீர்க்கதரிசனமில்லாத தலைவர்கள்தானே காரணம்!

நா. பா: பஞ்சாபைப் பொறுத்தமட்டில் பிரதமர் கூறுவதை நம்பத்தான் வேண்டியிருக்கிறது. தனியாகப் பிரிய வேண்டும் என்ற எண்ணத்தை அந்நிய சக்திகள் தூண்டி விட்டுக் கொண்டிருப்பதாக அவர் கூறுவதில் உண்மையில்லாமல் போகவில்லை. பாரதம் சுதந்திரம் பெற்று இந்து முஸ்லிம் கலவரம் நடந்த போதெல்லாம் கூட சீக்கியரும் ஹிந்துக்களும் எவ்வளவு ஒற்றுமையாக இருந்தார்கள்! பார்க்கப் போனால் அமிர்தசரஸ் பொற்கோயிலைக் கூட சீக்கியரும் இந்துக்களும் சேர்ந்துதான் கட்டினார்கள். ஆனால் சில காலத்துக்குப் பிறகு இந்துக்கள் சீக்கியரால் அலட்சியப்படுத்தப்படவே பொற்கோயிலைப் போன்றே இன்னொருகோயிலை இந்துக்கள் அமிர்தசரஸ் அருகே கட்டியிருக்கிறார்கள்.



சுமலாத்மானந்தா: இவை எல்லாமே செயற்கையான பிளவுகள் என்றும் இதற்கெல்லாம் மறுபடி அரசியல் தலைவர்களின் சுயநலம் தான் காரணம் என்றும் சொல்லலாம். ஏகாத்மதாயக்கருத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ராமலிங்கர் சொன்ன ஆன்மநேய ஒருமைப்பாடு தானே அது? அவருக்கும் முன்பாகப் பல்வேறு மதங்களைச் சேர்ந்த எத்தனையோ ஆன்மீகத் தலைவர்கள் வலியுறுத்தி வந்துள்ள விஷயம்தானே? ஒருமைப்பாடுக்கு உரமிடுவதற்கென்றே நடத்தப்படும் யாத்திரைக்குப் போய் எதற்கு அரசியல் ரீதியான காரணம் கற்பித்து எதிர்ப்பும் தெரிவிக்க வேண்டும்?

கைலாசம்: நீங்கள் சொல்வது ரொம்பசரி, எப்படிப் பார்த்தாலும் நாம் திரும்பத் திரும்ப ஒரே முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. அஸ்ஸாம் பிரச்னையோ பஞ்சாப் பிரச்னையோ எதுவானாலும் இருதரப்பிலும் சுயநலமற்ற தலைவர்கள் வரவேண்டும், தேச நலனையே எண்ண வேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தோன்ற வேண்டும். இத்தகைய தலைவர்கள் இல்லாததுதான் துரதிர்ஷ்டம். இன்றைக்கு ஒருவன் எம். எல். ஏ. ஆக ஒரு கட்சியைச் சார்ந்திருக்க வேண்டும். அவன் அந்தக் கட்சித் தலைவன் கூறுவதைத்தான் கேட்பானே தவிர, கீதையிலும் பதஞ்சலி யோக சாஸ்திரத்திலும் என்ன சொல்லியிருக்கிறது என்று யோசிப்பான்?

நா. பா: அரசியல்வாதிகள் கீதை பக்கம் போக மாட்டார்கள்! அதில் பலனை எதிர்பாராமல் காரியம் செய் என்று சொல்லியிருக்கிறதே! நீங்கள் அஸ்ஸாம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். அதிலேயும் அரசியல் தலைவர்களிடம் உள்ள முரண்பாடான போக்கைப் பார்க்கலாம். இலங்கையில் நாலைந்து தலைமுறையாக உள்ள தமிழர்களுக்கு வோட்டு கிடையாது என்ற ஒப்பந்தத்தில் பாரத அரசு சார்பில் கையெழுத்துப் போடப்பட்டது. அஸ்ஸாமிலோ ஏழு வருடங்களுக்கு முன் வந்து குடியேறியவர்களுக்கும் வோட்டு உண்டு என்று கூறித் தேர்தலை நடத்தி விட்டது பாரத அரசு! ஆக எல்லாமே போலி சந்தர்ப்பவாதமாகி விட்டது!

கைலாசம்: நீங்கள் முரண்பாடு பற்றிச் சொன்னீர்கள். அது மட்டுமின்றி மூன்று தாரணமும் தவறான காரியம் செய்யவே பயன்படுகிறதை நினைத்தால் வேதனையாக இருக்கிறது. ஜனதா ஆட்சி மத்தியில் ஏற்பட்டபோது மாநிலங்களில் இருந்த இ. காங்கிரஸ் ஆட்சிகளைக் கலைத்தது. இ. காங்கிரஸ் ஆட்சி திரும்பவும் மத்தியில் உருவான போது மாநில ஜனதா ஆட்சிகள் கலைக்கப்பட்டன....

நா. பா: இதையெல்லாம் பார்க்க மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது நல்லது. 'மொழிவாரியாக மாநிலங்களைப் பிரித்ததால் ஏற்படக் கூடிய வேண்டாத பின் விளைவுகள் சிலவற்றை மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதால் நீக்க முடியும்' என்றார் ராஜாஜி.


கைலாசம்: அது சரிதான். ஆனால் மறுபடியும் எத்தகைய மாநிலத் தலைவர்களிடம் இந்த அதிக அதிகாரங்கள் போய்க் குவியப் போகின்றன என்ற அடிப்படைக் கேள்விதான் எழுகிறது. நமக்கு ராஜாஜி, நேருஜி, காந்திஜி போன்றோருக்கு விழா எடுத்து மலர்வலையம் சமர்ப்பிக்கிற தலைவர்கள் போதாது. அவர்களைப் போல் நடந்து கொள்கிற தலைவர்கள் தேவை.

உரையாடல் தொகுப்பு: பிரியன்

புகைப்படங்கள்: ஏ. வி. பாஸ்கர்



"மத்தியில் எல்லா அதிகாரங்களும் குவிகிற அதே நேரத்தில் தேசிய ஒருமைப்பாடும் சிதைந்து வருகிறது. நாட்டின் கல்வி அமைப்பும் பல்கலைக்கழகங்களும்மொழி அடிப்படையில் உடைபட்டு வருகின்றன. மக்கள் பிளவுபட்டு வருகையில் ஆட்சி ஒரே இடத்தில் மையப்பட்டு சர்வாதிகாரப் போக்கும் வளர்கிறது. பல்கலைக் கழகங்கள் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடுகையில் தனித்தனி தீவுகளாய் உள்ளன. நாட்டின் அறிஞர்கள் ஒருவரோடு ஒருவர் உறவாட முடியாமல் மொழிப்பற்று என்ற முட்டாள்தனம் தடை செய்து வருகிறது."



காமன்வெல்த் மகாநாட்டிலிருந்து...
இலங்கை
கட்சி உள்பூசல்கள்
எங்கிட்ட வாலாட்டாதே! சுட்டுடுவேன்!.. ஜாக்கிரதை!
எர்ஷத்
பங்களா தேஷில் ஜனநாயக எழுச்சி
டாக்டர் பட்டம் புகழ் மாலை
தெலுங்கு கங்கை போற்றி! காவிரி நீர் போற்றி!
ராமராவ் போற்றி! கிருஷ்ணா நதி நீர் போற்றி!
இந்திரா போற்றி! மத்திய அரசு போற்றி!



கல்கி
1983 டிசம்பர் 11
ருத்ரோத்காரி கார்த்திகை 25
மலர் : 42 இதழ் : 19



அலைகள் ஓய்வதில்லை!

''விலைவாசி உயர்வு அச்சப்படும்படியாக இல்லை'' என்று அபய மளித்து விட்டார் நிதி அமைச்சர். கன்யூட் என்ற அரசன் கதைதான் நினைவுக்கு வருகிறது. கடற்கரைக்குப் போய்ச் சிம்மாசனத்தில் அமர்ந்து, ''அலைகளே அப்படியே நில்லுங்கள்!'' என்று உத்தரவு போட்டான். பெரிதாக ஓர் அலை எழும்பி மன்னனையும் அவனது சிம்மாசனம் செங்கோல் எல்லாவற்றையும் நனைத்துவிட்டது! அலை பொங்குவதும் அடங்குவதும் ஓர் இயற்கை நியதிக்கு உட்பட்டது. மன்னன் உத்தரவுக்குக் கட்டுப்படாது. அதேபோல் விலைவாசி உயர்வு என்பது பொருளாதார நியதிக்கு உட்பட்டது. அமைச்சர் அபயமளிப்பதால் மட்டும் குறையவோ அல்லது இப்போதுள்ள நிலையில் ஸ்திரப்படவோ செய்யாது.

82–83–ம் ஆண்டினை விடவும் 83–84–ம் ஆண்டின் விவசாய உற்பத்தி பருவமழை பொய்க்காததால் 10 மிலியன் டன் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. ஆயினும் இதே நேரத்தில் தொழிலபிவிருத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 1982–ன் முதல் ஆறு மாதங்களில் தொழில் உற்பத்தி 6.2 சதம் அதிகரித்தது எனில் 1983–ன் முதல் ஆறு மாதங்களில் 3.8 சதம் தான் உயர்ந்தது. இதற்கு மின்சாரத் தட்டுப்பாடு முக்கிய காரணம். தேச முன்னேற்றத்துக்கு அடிப்படைத் தேவையான மின் உற்பத்தியில் கூடப் போதிய கவனம் செலுத்தாமல் 'நாம்' மகாநாடும் 'சோகம்' மகாநாடும் நடத்துவதால் கைத்தட்டல்களும் உபசார மொழிகளும்தான் நிகர லாபமாயிருக்கக் கூடும்.

மொத்த வியாபாரத்தில் விலைவாசி உயர்வு சென்ற 1982 அக்டோபர் 9 முடிய ஓராண்டில் 0.7 சதம் எனில் இந்த ஆண்டு அக்டோபர் 8 முடிய ஓராண்டில் 10.2 சதம்! இதிலும் அத்தியாவசியப் பண்டங்களான அரிசி (19 சதம்), எண்ணெய் (18 சதம்) காய்கறி (31 சதம்) ஆகியவற்றின் விலை உயர்வு சாமானிய மக்களைக் கசக்கிப் பிழிவதாக உள்ளது. தொழிலாளர்களுக்கான விலைவாசிப் புள்ளி தொடர்ந்து ஏழு மாதங்களாக உயர்ந்து 83 ஆகஸ்டில் 510 ஆக இருந்தது. செப்டம்பரில் 512 ஆக உயரும். இதே நேரத்தில் ரூபாயின் மதிப்பு 14.4 பைசாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. புதிதாக வந்துள்ள ஒரு ரூபாய் நாணயத்தைப் பார்த்தாலே போதும், நிரூபணம் கிடைத்து விடும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகக் கூறித் தொழிலகங்கள் கடன் பெறுவதை பாங்குகள் கடினமாக்கியுள்ளன. இதேநேரத்தில் பாங்குகளின் பணம் ரிஸர்வ் பாங்க் மூலமாக அரசாங்கத்தின் உற்பத்திக்கு உதவாத செலவினங்களுக்குப் பயனாகிறது. இவ்வாறு உற்பத்திக்கு உதவாத அரசுச் செலவினங்கள் மென்மேலும் அதிகரிக்கும் போதும், போனஸ் என்ற சொல்லின் அர்த்தத்தையே மாற்றி அரசு ஊழியர் உள்பட சகலருக்கும் கட்டாய போனஸ் என்று அறிவிக்கும் போதும், கோடிக்கணக்கான முதலீட்டில் தொடங்கப்பட்ட அரசு நிறுவனங்கள் நஷ்டத்தில் நடக்கும்போதும், நாட்டின் தொழிலுற்பத்தி அதிகரிக்க முடியாமல் பர்மிட்–லைசென்ஸ்–அபரிமித வரி கொள்கைகள் கடைப்பிடிக்கப்படும் போதும், இதன் ஓர் உடன்விளைவாக ஏற்றுமதி வர்த்தகம் இதர நாடுகளின் மலிவு விலை போட்டாபோட்டியைச் சமாளிக்க முடியாமல் திணறும்போதும் விலைவாசி உயரும். நம் நாட்டிலோ இவை எல்லாமே காரணங்களாகி விலைவாசியை விண்ணளாவச் செய்துள்ளன.

பொருளாதாரக் கொள்கையைப் பரிசீலித்துத் திருத்திக் கொள்ளாமல் ''கவலைப்பட வேண்டாம்'' என்று அமைச்சர் ஆறுதல் கூறுவதால் ஒவ்வொரு நாளும் கடைக்குப் போய்ப் பண்டங்கள் வாங்குகிற நமக்கு அவதி தீர்ந்து விடப் போவதில்லை.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



அத்தியாயம் 6

தப்பிய கைதி

முன்னிருட்டுக் காலமாதலால் மாலை சீக்கிரமே விளக்கேற்றி விட்டார்கள். கூரையில் தெரிந்த வெளிச்சக் கீற்று படிப்படியாக அதிகரித்துத் தீப்பிழம்பின் ஒளி கதவின் நீள அகலத்துக்குப் படர்ந்தது. கயிற்று நுனியில் கட்டப்பெற்றிருந்த மண்பாண்டம் மெல்லக் கீழிறங்கியது. ''அடேய் விக்கியண்ணா! உடனே கஞ்சிக் கலயத்தை எடுத்துக்கொள். இல்லையென்றால் தரையில் மோதி உடைத்து விடுவேன்! அப்புறம் நீ இராப்பட்டினிதான்!'' என்று குரல் கேட்டது. 'நேற்று வரை கைகட்டி, வாய் புதைத்து நின்றவர்கள் இன்று 'அடேய்' போடலாயிற்று!' என்று குமைந்தான் விக்கியண்ணன்.

கயிற்றின் முனை பற்றிக் கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு முறை சொடுக்கி இழுத்தான். இதைச் சற்றும் எதிர்பாராததால் மறுமுனையில் பிடித்திருந்தவன் ''ஐயோ'' என்று அலறியபடியே கதவுத் துவாரம் வழியே பாதாளச் சிறைக்குள் விழுந்தான். நான்கு நாட்களாக நடக்க வேண்டியனவற்றையெல்லாம் மனத்துக்குள் ஒத்திகை பார்த்திருந்த விக்கியண்ணன், அந்தக் காவலன் உடல் தரையைத் தாக்குமுன் தடுத்தாட்கொள்ள முன் வந்தான். அவன் எட்டடி ஆழத்தில் கருங்கல் தளத்தில் மோதிக் கொண்டு சிரத்தையோ கைக் காலையோ ஒடித்துக் கொள்வதை விக்கியண்ணன் விரும்பவில்லை. அதற்குக் காரணமும் இருந்தது. காவலனின் உடைகளைக் களைவது, அவன் கையைக் காலை முறித்துக் கொண்டால் எளிதாயிராது!

பாறையாக விழுந்து விக்கியண்ணனை வீழ்த்தியவன், ஆதித்தன் ஆட்சியில் மக்கள் வயிற்றுக்கு வஞ்சனை இன்றிச் சாப்பிடமுடியும் என்பதை நிரூபிப்பான் போலக் கொழுத்திருந்தான். ஒரு சதை மலை தன்னைக் கீழே தள்ளிய போதிலும் சமாளித்துக் கொண்டு உருண்ட விக்கியண்ணன் சரேலென்று அவன் கழுத்தைச் சுற்றி வளைத்து நெரித்து, கூச்சலிடவோ ஏன் முனகவோ கூட முடியாத படிக்குச் செய்தான். கூடவே அவன் இடுப்பைத் துழாவி இடையில் இருந்த கத்தியை உருவிக் கொண்டான். அது நீண்ட வாளுமல்ல, சிறிய குத்தீட்டியுமல்ல. இடைப்பட்ட அளவினதாய் வசதியாகவே இருந்தது.

சற்று நேரம் அமைதி காத்து உயரே ஏதும் சந்தேகம் எழுந்து நடமாட்டம் தெரிகிறதா என்று கவனித்தான். ஒன்றுமில்லை. நல்ல காலம்! இவன் 'ஐயோ' சத்தம் யார் காதிலும் விழாமல்போயிற்று. ''கோவிந்தா! நான் சொல்கிறபடி கேட்டு நடந்து கொண்டால் இந்தக் கத்தியை உன் உடலில் இறக்க வேண்டிய அவசியம் எனக்கு நேராது'' என்றான் விக்கியண்ணன். பயத்தில்கோவிந்தனின் விழிகள் பிதுங்கியதை விக்கியண்ணனால் பார்க்க முடியாத இருள் சூழ்ந்த பகுதியில் அவர்கள் இருந்தார்கள். கோவிந்தனால் பதில் கூற முடியாதாதலால் விக்கியண்ணன் தொடர்ந்து பேசினான்: ''காவலனுக்குரிய உன் சீருடையைக் கழற்றி என் தோள் மீது போடு!''

விக்கியண்ணனின் இடக்கரத்தில் தன் கழுத்து சிறைப்பட்டிருக்க அந்த நிலையிலேயே முயன்று அந்த உத்தரவை நிறைவேற்றிய கோவிந்தன் கோவணத்துடன் நின்றான். ''சத்தம் எழாமல் தரையில் மல்லாந்து படு'' என்று ஆணையிட்ட விக்கியண்ணன், அவன் மர்மப்பகுதியில் தன் காலை வைத்து அழுத்திக் கொண்டான். 'சற்றே அசைந்தாலும் உயிர் போகும் வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கும்' என்று எச்சரித்த பின் கரத்தில் இருந்த வாளை வாயால் கவ்விக் கொண்டு, அழுக்கேறி நாற்றமடித்த கந்தல்களைக் கழற்றிப் போட்டுவிட்டு, தோளில் தொங்கிய காவலர் உடைகளை அணிந்தான். பத்து தினங்களுக்கு முன் என்றால் அந்த உடை ஓரளவேனும் பொருந்தியிருக்கும். இப்போது பாதாளச் சிறைவாசத்தில் கால் வயிற்றுக் கஞ்சி கூடக் கிட்டாத நிலையில் விக்கியண்ணன் மிகவும் மெலிந்திருந்தான். மேலங்கியை மடித்து வைத்து இழுத்துக் கட்ட வேண்டியதாயிருந்தது. 'அந்தக் கந்தலுக்கு இது தேவலாம்' என்று எண்ணியவனாக விக்கியண்ணன் தன் கைதியிடம் அந்த அழுக்கேறிய ஆடையை இடையைச் சுற்றி அணியச் சொன்னான். இப்போது வாள் மீண்டும் அவன் கரத்துக்கு இடம் மாறித் தன் கூர்மையைக் கோவிந்தன் உணரச் செய்து கொண்டிருந்தது. ''கோவிந்தா! இப்போது நீ கூச்சலிட்டு உதவிக்கு உன் தோழர்களில் ஒருவனை அழைக்க வேண்டும்; ஆனால் இங்கே நீ என்னிடம் சிக்கியிருப்பது பற்றி மூச்சுவிடக் கூடாது! மேலே நீ ஏறிச் செல்ல நூலேணியை இறக்கச் சொல்லு'' என்று கட்டளை இட்ட விக்கியண்ணன், கழுத்தைச் சுற்றியிருந்த கரத்தின் இறுக்கத்தைச் சற்றே தளர்த்தினான்.

''ரணதீரா! ரணதீரா!'' என்றுகோவிந்தன் உரத்த குரலில் கூப்பிடவும் சிலநொடி

அபிமானவல்லி

கி.ராஜேந்திரன்



களில், "என்ன கோவிந்தா! என்ன நடந்தது?" என்று கேட்டபடியே ஒரு கரிய நிழலுருவம் மேலேயிருந்து எட்டிப்பார்த்தது.

"ரணதீரா! தவறிப் போய்க் கீழே விழுந்து விட்டேன். நல்லவேளை கைகால் எதுவும் முறியவில்லை. நூலேணியை இறக்கு" என்றான் கோவிந்தன். ரணதீரன் இடிஇடியென்று சிரித்தான்.

"ஏனப்பா! பாதாளச் சிறையை அனுபவித்துப் பார்க்க ஆசையா? ஒரு ராத்திரி இருந்து விட்டுத்தான் வாயேன். விக்கிரமண்ணனுக்கும் பேச்சுத் துணையாக இருக்கும்!"

"விளையாடாதே ரணதீரா! சீக்கிரம் நூலேணியுடன் வா!"

"நானும் எத்தனையோ புத்திசாலிகளைப் பார்த்திருக்கிறேன்: ஆனால் பாதாளச்சிறையில் வழுக்கி விழுந்து தன்னைத் தானே சிறைப் படுத்திக் கொண்ட மேதாவியை இன்றுதான் பார்க்கிறேன்! இதை அரண்மனை விகடகவியிடம் சொல்ல வேண்டியதுதான். மன்னரின் செவிக்கு எட்டுமானால் சிரிக்கிற சிரிப்பில் பொற்காசுகளும் கலகலக்கும். எனக்கும் பங்கு கிடைக்கும். எதற்கும் ஓர் இரவு இருந்து விட்டே வா. எலிகளுடன் நீ நடத்திய போராட்டம் பற்றியும் கதை கதையாகக் கூறலாம்!" கதவைச் சாத்த ஆரம்பித்தான் ரணதீரன்.

கத்தி முனை கொடுத்த உந்துதலில் கோவிந்தன் அலறினான்: "ரணதீரா! ரணதீரா! என்னை விட்டுவிட்டுப்போகாதே! இதோ பார்! தயவு செய் ரணதீரா!"

ரணதீரன் மறுபடி எட்டிப் பார்த்தான். "இருட்டிலே நீ எங்கே இருக்கிறாய் என்றே தெரியவில்லை. வெளிச்சத்துக்கு வரக்கூடாதா? சரி, நூலேணி கொண்டு வந்தால் எனக்கு என்ன தருவாய்?"

"நேற்று தாயமுருட்டிய போது நீ தோற்ற பணத்துக்குக் கடன் சொல்லியிருக்கிறாய். அதைத் தர வேண்டாம். சரிதானே?"

"வாக்கு மாற மாட்டாயே!" என்று உறுதிப் படுத்திக் கொண்டு "இதோ வருகிறேன்" என்று கூறி ரணதீரன் நூலேணி கொண்டு வரச் சென்றான். கதவு திறந்தே இருந்தது.

ரணதீரன் தலை மறைந்ததும், கோவிந்தன் உடுத்தியிருந்த கந்தலை மேலும் கிழித்துப் பந்தாக்கி கோவிந்தன் வாயில் திணித்தான் விக்கிரமண்ணன். நாராகக் கிழிந்த துணியால் தலையைச் சுற்றி வாயைக் கட்டினான். "கோவிந்தா கவலைப்படாதே! நாளைக்காலை எப்படியும் ஆள் மாறாட்டம் நடந்திருப்பது தெரிந்து உன்னை விடுவித்து விடுவார்கள்" என்று ஆறுதல் கூறித் தோளில் தட்டினான். சற்று நேரத்தில் நூலேணி இரட்டைப்பாம்பாக நெளிந்து இறங்கியது.

வாளை உறையிலிடாமல் வாயில் இடுக்கிக் கொண்டு வேகமாகவும் அன்றைந்து பாராமலும் ஏறினான் விக்கிரமண்ணன். கதவு அமைந்திருந்த சதுரத் துவாரத்தை கடக்கும் போது வாள் கைக்கு இடம் மாறியது. தலையை இலேசாகக் குனிந்தவாறே ரணதீரனைக் கண்காணித்தான். சுற்றுமுற்றும் நோட்டம் விட்டான். சற்றுத் தொலைவில் வேறு இரு காவலர்கள் தீப்பந்த ஒளியில் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தனர். இரவுக் காவலர் பலமாக இல்லாததோடு கவனமாகவும் இல்லை என்று புரிந்து கொண்டான். கதவை மூடியபடியே ரணதீரன், "என்னப்பா கழுத்து சுளுக்கா?" என்று

கலை விழாவுக்கு வரவேற்பு



அட்டைப் படத்தில் கலைவிழாவுக்கு வரவேற்பு கூறுபவர் குமாரி உமாராவ்.

இளம் வயதிலேயே நாட்டியக் கலையில் ஆர்வம் கொண்டிருந்த குமாரி உமாராவ் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். டில்லியில் சில காலம் கதக் நாட்டியத்தில் பயிற்சி பெற்றார். பிறகு பரத நாட்டியக்கலை பயிலும் ஆர்வத்தால் கலாக்ஷேத்திரத்துக்கு வந்து சேர்ந்தார். திருமதி ருக்மிணிதேவியின் சிறந்த மாணவிகளில் ஒருவராக விளங்குகிறார். கலாக்ஷேத்திர நாட்டிய நாடகங்கள் பலவற்றில் பங்குபெற்றுப்புகழ்பெற்றவர். கலாக்ஷேத்திரக் குழுவினருடன் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று ஆடியிருக்கிறார். ராமாயணத்தில் உமாராவ் கைகேயியாக நடிக்கும்போது அவரது முழுத் திறமையையும் காண முடியும். கர்நாடக மாநிலத்தில் சிறந்த இசைக் கலைஞர்களாக விளங்கும் ஸ்ரீமதி ராதா, ரமாதேவி (பேலூர் சகோதரிகள்) இருவரும் உமாவின் சகோதரிகள். தந்தை ஸ்ரீ பி. எஸ். எஸ். ராவ் அவர்கள் மைசூரில் உள்ள ஸ்ரீலலித கலா அகாடமியின் ஆலோசகர். புகழ்மிக்கக் கலைக்குடும்பம். வண்ணப்படம்: **யோகா.**

என்ன சொல்லி வாழ்த்துவோம்

தேசக்கவி எனச் சொலப் போமோ? — வெறும்
தேசக் கவி எனச் சொலப் போமோ? — இவன்
வையம் பாடியவன் — வையம்
வாழப் பாடியவன்!

'உலகக் கவிஞன்' என்றே சொலின் இவன்
விண்ணைப் பாடுகிறான்!

'விண்ணோர் பாணன்' என்றே சொலுமுன்
பாப்பா — பா தருவான்!

'குழந்தைக் கவிஞன்' பட்டம் தருமுன்
பக்தியில் உருகிடுவான்!

பக்திக் கவிஞன் சொல்லுக் கெட்டா
சித்திகள் தொட முனையும்

புதுமைக் கவிஞன்,
புரட்சிக் கவிஞன்,
மக்கள் கவிஞன்
எல்லாம் ஆனவனை, எம்
இதயத் துள்ளவனை,

என்ன சொல்லி வாழ்த்துவோம்!
என்ன சொல்லி வாழ்த்துவோம்!



-தம்பி சீனிவாசன்

வினவ "ஆமாம்" என்று பதிலுரைத்து விட்டு விடுவிடென்று நடந்தான். "எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறாய்?" என்று ரணதீரன் மறுபடி வினவ, "கிணற்றடியில் குளித்து உடையையும் துவைத்து உலர்த்தப் போகிறேன். இல்லையேல் இரவெல்லாம் துர்நாற்றம் வீசும்" என்று இயன்றமட்டில் குரலை கோவிந்தனுடையது போல் மாற்றிக் கொண்டு சொன்னவாறே விரைந்தான் விக்கியண்ணன். "ஓஹோஹோ" என்று ரணதீரன் நகைத்த ஒலி அவனைப் பின் தொடர்ந்தது.

அந்தப் பெரிய சிறைச்சாலையின் பல பகுதிகளும் விக்கியண்ணனுக்கு அத்துப்படி. பல்வேறு குற்றங்களுக்கு ஏற்பக் கொடிய அல்லது குறைந்த தண்டனைகளைப் பெற்றவர்களின் தகுதிக்கேற்ற விதமாகச் சிறைக் கொட்டடிகள் அமைந்திருந்தன. ஆங்காங்கே காவலர்கள் நின்றனர். உறுதியான நடையில் அவன் வெளிவாசலை நோக்கிச் சென்றான். அவன் உடையும் நடையும் அதிகார பாவனையும் காரணமாக அவனைத் தடுத்து நிறுத்த யாருக்கும் தோன்றவில்லை. கூடிய வரை அவன் தன் முகத்தில் நிழல் விழுகிற மாதிரி தீப்பந்தங்களுக்கு எதிர்ப் பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

பிரதான வாசலை நெருங்கிய போது தான் சிக்கல் ஏற்பட்டது. முன்கூடத்தில் சிறைக்காவலர் சிலர் தவிர சிறை அதிகாரியும் இருந்தான். விக்கியண்ணனோ யாரையுமே பொருட்படுத்தாமல் வெளியேறி நந்தவனத்தைக் கடந்து சுற்றுச் சுவரில் அமைந்திருந்த கதவங்களையும் திறக்க ஆரம்பித்தான். சாளரத்தின் வழியே இதைக்கவனித்த தலைமை அதிகாரி, "யாரடா அவன்? எதற்கு மதில் கதவைத் திறக்கிறாய்?" என்று அதட்டினான்.

"தவறிப் போய்ப் பாதாளச் சிறையில் விழுந்து விட்டேன் ஐயா! உடம்பெல்லாம் துர்நாற்றம் வீசுகிறது. வீட்டுக்குப் போய்க் குளித்து விட்டு நாழிகை நேரத்தில் திரும்பி விடுகிறேன்" என்று கூறியபடியே விக்கியண்ணன் வரிசையாக மதில் ஓரம் உட்புறமாகக் கட்டியிருந்த குதிரைகளுள் ஒன்றின் மீது சேணத்தைத் தூக்கிப் போட்டுப் பூட்டவாரம்பித்தான்.

"அடேய் உன் துர்நாற்ற உடம்பைச் சுமக்க உனக்கு என் குதிரைதானா கிடைத்தது?" என்று கேட்டவாறே ஒருவன் தீவட்டியுடன் ஓடி வந்தான்.

"கடமையாற்ற வேண்டிய நேரத்தில் வீடு சென்று வர முன் அனுமதி பெறவேண்டாமா?" என்று கேட்டுக் கொண்டே சிறை அதிகாரியும் பின் தொடர்ந்தான்.

"பொய் சொல்கிறான் வீட்டில் புதுப் பெண்டாட்டி தனியே இருக்கிறாளே என்ற கவலையாயிருக்கும்" என்று மூன்றாமவன் குரல் கொடுக்க, எல்லோரும் கொல்லென்று சிரிக்க, அதேசமயம் முன்னால் ஓடிச்சென்றவன் கரத்தில் இருந்த தீப்பந்த ஒளியில்

விக்கியண்ணன் முகத்தைப் பார்த்து விட்டான் பின்னாலேயே வந்த சிறை அதிகாரி.

''அடேய் முட்டாள்களா! இவன் விக்கியண்ணன்! விக்கியண்ணன்! நம்மைஏமாற்றிவிட்டுத் தப்ப முயல்கிறான்! பிடியுங்கள்! பிடியுங்கள்!'' என்று அலறியதோடு தானே விக்கியண்ணன் ஆரோகணித்த குதிரைக்கு முன் ஓடிச் சென்று நின்று அதைத் தடுத்து நிறுத்தவும் முயன்றான்.

குதிரையின் விலாப்புறத்தைக் குதிகால்களால் அழுத்தி வாரினைச் சொடுக்கவும் குதிரை முன்னால் பாய்ந்தது. குறுக்கிட்டவனைக் காண, முன் கால்களை உயர்த்திக் கனைத்தது. அதேசமயம் சிறை அதிகாரியும் சற்றே அஞ்சி நகர, கிடைத்த இடைவெளியில் புகுந்து விரைந்தது குதிரை. பக்கவாட்டில் ஓடிவந்த வேறு சிலரை இடித்துத் தள்ளிக் கொண்டு போயிற்று!

''மதில் கதவைச் சாத்துங்கள்'' என்று அலறல் ஒலித்து அடங்கு முன்னரே அந்த வாசலைக் கடந்து சாலையில் விரைந்தது குதிரை.

''பிடியுங்கள்! பின் துரத்துங்கள்! மன்னருக்குத் தெரிந்தால் நம் தலைகள் எல்லாம் தரையில் உருளும்'' என்று தொண்டை கிழியக் கத்தினான் சிறை அதிகாரி.

குதிரையால் இடித்துத் தள்ளப்பட்டு 'ஐயோ' என்று அலறி விழுந்தவர்களும், திகைப்பிலே வாய் பிளந்து நின்றவர்களும் சுயநிலைக்குத் திரும்பிச் செயல்படுமுன் விக்கியண்ணன் ஏறியிருந்த குதிரை வெகுதூரம் சென்றுவிட்டது.

குதிரைகளுக்கு ஓய்வு தர சேணங்கள் கழற்றப்பட்டிருந்தன. அவற்றை அவசரம் அவசரமாகப் பூட்டிய வீரர்கள், புரவிகள் மீது தாவி ஏறித் தொலைவில் தெரிந்த கருநிழல் வடிவைப் பின்தொடர்ந்து பறந்தனர். காவலர்கள் பலர் குதிரைகளைத்தட்டிவிட்டுக் கொண்டு பின்துரத்தி வருகிற ஒலி விக்கியண்ணன் செவிகளுக்கும் எட்டியது.

'இப்போது எங்கே செல்வது?' என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கவில்லை. நாலு நாட்கள் சிந்தித்ததில் பல சாத்தியக் கூறுகளை அவன் எண்ணிப் பார்த்திருந்தான். தன் வீட்டுக்கே செல்லலாம். நிச்சயம் அடைக்கலம் தருவார்கள். ஆனால் அவர்களுக்குத் தன்னால் துன்பம் நேர்வது உறுதி. முதல் காரியமாகத் தன்னை அங்கே தான்



செய்தி வெடிகள்

★ இந்த ஆண்டு பசுத்தோல் ஏற்றுமதி குறைந்துள்ளது. —சென்னைச் செய்தி.

● பசுத்தோல் போர்த்திய புலிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டதாலா?

★ ஒரு தேங்காயின் விலை ரூ. 3.50. —செய்தித் தலைப்பு.

● இனி தேங்காய் மூடிக் கச்சேரி கூடக் கிடைக்காதோ?' என்கிறார் சங்கீதசீசனில் 'சான்ஸ்' கிடைக்காத ஒரு பாகவதர்.

★ தமிழகத்தில் ராணுவ தளவாட உற்பத்தித் தொழிற்சாலை அமைக்க வேண்டும். —அமைச்சர் திருநாவுக்கரசு.

● இப்போது விளையாட்டுத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்துகிறவர்கள், இந்தத் தளவாடங்களைக் கைப்பற்றி ஏதாவது படையெடுப்பு நடத்தவா?

★ வரதட்சிணையை எதிர்த்துப் பெண்கள் மௌன ஊர்வலம். —ஒரு செய்தித் தலைப்பு.

● 'பெண்கள் ஊர்வலம்' — சரி. மௌன ஊர்வலமா? நம்ப முடியாது.

★ 'உள்நாட்டிலேயே எல்லாக் கடிகாரங்களும் செய்ய வேண்டும்' என்று மத்திய தொழில் துணை மந்திரி கிருஷ்ணா கூறினார். —புதுடில்லி செய்தி.

● அதற்கு இன்னும் 'காலம் கைகூட'வில்லையே!

★ சென்னையில் 'சொத்து வரி' உயர்த்தப்படும். —ஒரு செய்தி.

● நம் நாட்டில் வரிகளும், விலைவாசிகளும் உயர்வதைத் தவிர வாழ்க்கைத்தரமா உயரப் போகிறது?

★ நடிகை ரீனாராயைத் திருமணம் செய்ய இருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் மோஷின்கான் அவர் நடித்த படம் ஒன்று கூடப் பார்த்ததில்லை. —ஒரு செய்தி.

● அதனால் தான் அவர் ரீனாராயைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்.

★ வாத நோய்க்கு மருந்து கண்ட டாக்டரே வாத நோயால் அவதிப்படுகிறார். —வாஷிங்டன் செய்தி.

● அவருக்கு இத்தகைய அப'வாதம்' நேர்ந்தது கேட்டு வருந்துகிறோம்.

-மகரம்

அத்யாத்ம ராமாயணம்

"மோட்சம் எனும் அயோத்தியில் பிரும்மம் எனும் தசரத மன்னன் இருந்தார். அவருக்கு ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி எனும் மூன்று மனைவியர் இருந்தனர். ஞான சக்தி எனும் கௌசல்யா தேவியிடம் ஜீவாத்மன் என்ற இராமன் பிறந்தார். அவர் சிரவணம் எனும் வசிஷ்டரிடம் பயிற்சி பெற்றார். மனனம் எனும் விசுவாமித்திரரைத் தொடர்ந்தார். வைராக்கியம் எனும் லக்ஷ்மணனுடன் வாழ்க்கை நடத்தினர். ஆணவம் எனும் தாடகையை அழித்தார். பொறுமை எனும் வில்லை ஒடித்தார். ஆனந்தம் எனும் சீதையை மணந்தார். மதம் எனும் பரசுராமரை அடக்கினர். சித்தம் எனும் சரயூ நதியைக் கடந்தார். தவம் எனும் சித்திர கூடத்தில் தங்கினார். அகங்காரம் எனும் விராதனைக் கொன்றார். காமம் எனும் சூர்ப்பநகையை தண்டித்தார். சுபவாசன் எனும் வானரங்களை தம்முடன் சேர்த்துக் கொண்டு போகம் எனும் சமுத்திரத்தை தாண்டி அசுபவாசன் எனும் அசுரர்களை அழித்தார். சாத்விகம் எனும் விபீஷணனுக்கு அடைக்கலம் தந்து தாமஸம் எனும் கும்பகர்ணனையும் ராஜஸம் எனும் ராவணனையும் ஞானம் எனும் பாணத்தை தொடுத்து அழித்தார். மோட்சம் எனும் அயோத்திக்கு அரசனாகி கைவல்ய பிராம்மானந்த சொரூப சாக்ஷாத்காரம் பெற்றவர்.


"தர்ம சக்கரம்"

தேடுவார்கள். ஆகவே வேண்டாம். அபிமானவல்லியைப் பார்க்கப் போவதும் உசிதமில்லை. அங்கே காவல் முன்னிலும் மிக அதிகமாகிப் பலப் பட்டிருக்கும். தஞ்சைக் கோட்டையைக் கடந்து செல்வதென்பது நடக்காத காரியம். மாலை மயங்கியதும் கோட்டைக் கதவுகளை இழுத்து மூடி இருப்பார்கள். விசையை இயக்கி அகழிப் பாலத்தை இறக்கச் செய்வதென்பது அசாத்தியம். சிறைச்சாலையில் நடந்தது போல் அங்கேயும் காவலர்களை ஏய்த்து விடலாம் என்று நினைப்பது முட்டாள்தனம். 'வந்தது வரட்டும்' என்று அரண்மனைக்கே போய் மன்னரையே சந்தித்தால் என்ன?' என்று கூட யோசித்து அது அசட்டுத் துணிச்சல் என்ற தீர்மானத்துக்கு வந்திருந்தான் விக்கியண்ணன். அந்த அடாவடித்தனம் ஆதித்தனின் சினம் அதிகரிக்கவே வழி வகுக்கும்.

பலவாறாக மூளையைக் குடைந்துகொண்டு கடைசியில் நம்பியாண்டார் நம்பியைத்தஞ்சமடைவது என்று முடிவு கட்டியிருந்தான் விக்கியண்ணன். தஞ்சைப் பெருநகரின் பிரதான வீதியொன்றில் ஒரு மாளிகை நம்பியாண்டார் நம்பியின் தமிழ்ப் பள்ளிக்கென மான்யமாக வழங்கப்பட்டிருந்தது. அங்கே அவருடைய பல மாணவர்கள் தங்கி இருந்து தமிழ் பயின்றதுடன் ஓலைச் சுவடிகளைப் பிரதி எடுத்து திருமுறைகளைத் தொகுத்து வகைப்படுத்தும் பணியில் நம்பிக்கு உதவியும் வந்தனர். அங்குபோய் நம்பியைச் சந்தித்து அன்று இரவேனும் அடைக்கலம் தந்து அருளுமாறு கேட்பது என்ற கருத்தில் இருந்தான் விக்கியண்ணன்.

கடலில் உள்ள ஒரு வகை மீனினம் முட்டையிட்டு அவற்றைத் தன் வாய்க்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்கிறது. முட்டையினின்றுகுஞ்சுகள் வெளி வரப் பன்னிரண்டு நாட்களாகும். அது வரை அந்த மீன் வாயைத் திறப்பதில்லை. பட்டினியோடுதான் இருந்து வரும். இந்த வகை மீனினம் கரிபியன் கடல் பகுதிகளில் மட்டுமே காணப்படுகிறது. இது தாய்ப் பாசத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. இவ்வகை மீனின் பெயர்: 'செடோட் ரோ பெஸ் ஆராட்டஸ்'.

தேவகோட்டை. பி. நாராயணன்



'தஞ்சம்' என்று வந்தவனை வஞ்சிக்க அந்த மனிதருள் சிறந்த மாணிக்கத்துக்கு மனம் வராது, நிச்சயம். அண்மையில்தான் தல யாத்திரை செய்து தஞ்சை திரும்பியிருந்தார் அவர் என்பதும், இன்னும் சில காலம் தலைநகரில் தான் இருப்பார் என்பதும் அன்று அரங்கூரவையிலேயே தெரிய வந்திருந்தது. எனவே நம்பிக்கையோடு குதிரையை நாலு கால் பாய்ச்சலில் செலுத்தினன். இருள் கவிந்து சாலைகளில் நடமாட்டம் குறைவாயிருந்ததால் தங்கு தடையின்றி வாயு வேகத்தில் விரைவது சுலபமாயிருந்தது. ஆனல் தமிழ்ப் பள்ளியை நெருங்கவும் அவன் எதிர்பாராத தடைகள் தோன்றின!

வெளி மதிலையொட்டி வாசலில் ஒரு பல்லக்கு வந்து இறங்க, அதனை முன்புறம் சுமந்துவந்தவருள் ஒருவன்போய்க்கதவுகளைத் திறக்க முற்பட்டான். இதே நேரத்தில் தன்னைத் துரத்தி வந்த வீரர்கள் நெருங்குவதைக் குளம்பொலிகளினல் புரிந்துகொண்டான் விக்கியண்ணன். 'நடப்பது நடக்கட்டும்' என்று தனக்குள் கூறிக்கொண்டு கடிவாளவாரைச் சேணத்தின் முன் பகுதியில் இணைத்துக் கட்டினன். வேகத்தைக் குறைத்துப் பாய்ந்து இறங்கி, குதிரையின் ஓட்டத்தோடு தானும் ஓடி அதன் வாலை முறுக்கியும், பின்புறத்தை ஓங்கி அடித்தும் மறுபடி நுரை தள்ளும்படிக்கு விரையச்செய்தான். பிறகு தெரு ஓர மர நிழலில் மதி ஒளியோ, தெரு விளக்கொளியோ சற்றும் எட்டிப் பாராத கருமையில் கரைந்தான்.

ஆளின்றி, பிடரி மயிரும் வாலும் உயர ஓடும் குதிரையையும் அர்த்தமின்றி அதைத் தொடர்ந்து பாய்ந்து செல்கின்ற சில குதிரை வீரர்களையும் வியப்புடன் பார்த்துத் தங்களுக்குள் பல்லக்குத் தூக்கிகள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்ட நேரத்தில், அவர்கள் கவனம் திசை திரும்பியிருந்த அந்தச் சமயத்தில், விக்கியண்ணன் ஓசை எழுப்பாமலும் மானின் வேகத்துடனும் ஓடிச் சென்று பல்லக்கின் திரைச் சீலையை விலக்கிக் கொண்டு விருட்டென உள்ளே புகுந்தான். நுழைந்த கணத்திலேயே லாகவமாய் இயங்கி அதிலிருந்த ஒரு பெண்ணின் வாயைப் பொத்தவும் செய்தான். ''ஆண் மகனுயிருந்தால் மிரட்டுவேன்; ஆனல் மங்கலான இந்த ஒளியிலும் நீ பெண் என்பது தெரிவதால் கெஞ்சுகிறேன்! தயவு செய்து கூச்சலிடாதே!'' என்ருன்.

மென்மையான ஆனல் உறுதியான இடக்கரம் வாயைப் பொத்தியிருந்த அவன் கையைப் பற்றியது. வலக்கரமோ வானில் வழுக்கிச் செல்லும் மின்னல் போல அதன் ஒளிர் வெண்மையாலும் நளின வேகத்தாலும் பளிச்சிட்டுப் படர்ந்தது. படர்ஒளி முடிவுற்ற போது இடியாக அது தன் கன்னத்தைத் தாக்கியிருப்பதை உணர்ந்தான் விக்கியண்ணன். 'சுளீர்' என்ற விழுந்த அடியையும் நகங்கள் கீறியதால் ஏற்பட்ட எரிச்சலையும் மீறி அந்தப் பெண்ணின் துணிவும் கம்பீரமும் அவனை அதிரச் செய்தன.

(தொடரும்)

மாணவர் பக்கம்

★ மண்ணில் போட்டு மூடினுல்...
மனிதனின் கதை நிறைவு பெறுகிறது.
அதுவே விதையாக அமைந்துவிட்டால்...
அதன் கதை துவங்குகிறது!

★ டியன் பாக்ஸ்:

தன் வயிற்றை
காலி செய்து
நம் வயிற்றை
நிரப்பும் தியாகி!

★ புது மாப்பிள்ளை:

கணவனுக அவதிப்படப்போகும்
ஆயுள் தண்டனைக்கு
கடைசி ஆசைகளை
நிறைவேற்றிக்கொள்ள
இரக்கப்பட்டுத் தரப்படும்
செல்வாக்கு, அந்தஸ்து!

★ தார் களத்தில்
எனைக் கண்ட கணத்தில்
புறமுதுகு காட்டி
ஓடும் கோழையே
உனக்கு "டல்லவன்!"
என்ற பட்டப் பெயர்
ஒரு கேடா?



★ பெண்:

வெடித்துவிடுமோ
வெடித்துவிடுமோ
என்ற பயத்தில்
தூரவே இருந்து
வெடிக்காமல் போகவே
துணிந்து நெருங்கினுல்...
டபாரென வெடித்துவிடும் வெடி!

—எம். சிதம்பரம்
முதல் ஆண்டு, போஸ்ட் கிராஜுவேட்,
டிப்ளோமா இன் அகவுண்ட்ஸ் அண்டு
டாக்ஸேஷன்
சென்னை பல்கலைக் கழகம்

●

★ வாழ்க்கையின் வெயிலில் கொஞ்சம் காய்ந்தும், மழையில் கொஞ்சம் நனைந்தும், வந்ததால் எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது —லாங் பெல்லோ.

★ பெண்கள் துணையில்லாமல் ஆண்களுக்கு ஆறுதல் கிடைத்திருக்காது. பெண்களே இல்லாதிருந்தால் ஆண்களுக்கு ஆறுதல் தேவைப்பட்டிராது!

—பெர்னுட்ஷா.
தகவல்: மா. இளங்கோ,
மூன்றுமாண்டு இயற்பியல்,
ரெஹம் ஹால் அறை, 76,
அ. ஜா. கல்லூரி விடுதி, சிவகாசி,
இராமநாதபுரம் மா.வ—626124.

●

★ அன்று இலக்கியக் கழக விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புலவர் முகிலன் தலைமையேற்க ஆசிரியர்களுக்கிடையேயான பட்டி மன்றம். ஒரு பகுதிக்குத் தலைமை



சேர்ந்த ஆசிரியர் ஒருவர் எழுந்து மாணவர்களை நோக்கி "மாணவர்களே! இப்பட்டி மன்றத்தில் ஒரு பக்கத்தில் "தப்புத்தாளங்களும்" ஒரு பக்கத்தில் "அபூர்வ இராகங்களும்" வரக்கூடும். மாணவர்கள் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கும் போதே, நடுவர் புலவர் முகிலன் இடையில் குறுக்கிட்டு, "தப்புத் தாளங்களும், அபூர்வ இராகங்களும்" எங்கிருந்து வந்தாலும் "சட்டம் என் கையில்" என்றுரே பார்க்கலாம். மாணவர் கூட்டக் கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

நா. மலையப்பன்.
முதலாம் ஆண்டு,
பி. எஸ்ஸி. வேதியியல்,
ஸ்ரீ சேவுகன் அண்ணுமலை கல்லூரி,
தேவகோட்டை., இராமநாதபுர மாவட்டம்

●

★ நடிகை: நான் நடிப்பதற்காக நல்ல டைரக்டரைத் தேடிக் கொண்டிருந்தேன்.
நண்பர்: கிடைத்தாரா?
நடிகை: கிடைத்தார். ஆனல் அவர் நல்ல நடிகையைத் தேடிக் கொண்டிருக்கிருர்.

க. இராதா.
மனையியல் (இரண்டாமாண்டு),
வேளாண் கல்லூரி, மதுரை—4.




"குடும்பப் பொறுப்புக்கு
ஈடு கொடுக்க கொள்ளைத்
தெம்புதேவை...எனக்கு
அள்ளித் தருகுது நான்
பருகும் விவா"
"குடித்தனம் நடத்துகிற பொறுப்புத்
தான், நாளெல்லாம் பம்பரமாய்
ஓடியாடி உழைக்க வைக்கிறது
என்னை... அதுவும் உற்சாகத்தோடு
செய்கிறதைக் கச்சிதமாய்ச்
செய்கிறேன். நான் பருகும் விவா
எனக்கு வற்றாத தெம்பு தருகிறது.
பார்லி, கோதுமை இவற்றின்
மால்ட் சத்துக்கள், பால், வைட்டமின்கள்
அடங்கிய விவா ஜீரணிக்க எளிதானது.
பாலிலேயும் சரி, நீரிலேயும் சரி
கலக்க இலகு. சூடான பானமாகவோ,
குளிர் பானமாகவோ சுவையுடன்
அருந்தலாம். அலுக்காமல் உழைக்க
எனக்கு சளைக்காத தெம்பு—
தருகிறது விவா."
VIVA
VITAMINISED
ViVA
The Family Health Drink
BUILDS UP
STAMINA
ViVA
"தெம்பு தரும் விவா
உனக்கு நன்றி!"
*மாண்ட் (உலக) தேர்வில் வெள்ளிப்
பதக்கம் வென்றது, ஆம்ஸ்டர்டாம் 1981
JiL ஜகத்ஜீத் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ASP/JIL: V;3'2012 TM

19

"மிஸ்டர் சந்தானத்தை அப்பப்ப நீ போய் விசாரிக்கிறியா என்ன? இன்னிக்கு உன்னே ஏகத்துக்குப் புகழ்ந்து தள்ளிட்டாரே, மனுஷன்!''

''வந்து, நோயாளிங்களுக்கு எல்லாம் வசதியா இருக்கா, குறை ஒண்ணும் இல்லையேன்னு மேடம் இரண்டு வேளேயும் சுத்திப் பாப்பாங்க டாக்டர். அவங்க இல் லேன்னுலும் இந்த ரொடீனே விட வேணும்னுதான்...''

''வெரிகுட். ஏன் இதுக்கு இத்தனே தயக் கமா பதில் சொல்றே, சாந்தி? ப்ளீஸ் கீப் இட் அப்... சந்தானத்துக்கு ஏதோ பிர சாதம் வேற கொண்டு வந்து கொடுத்தி யாமே!''

விடாமல் பாலாஜி துருவ ஒருவித தயக் கத்துடன் சாந்தி பதில் கூறினள்.

''மிஸ்டர் சந்தானத்துக்கு நல்ல விதமா ஆபரேஷன் நடந்து முடியணும்னு மேடம் ரொம்ப கவலைப்பட்டுக்கிட்டு இருந்தாங்க டாக்டர். 'சின்ன தலைவலினு கூட உயில் எழுதி வைக்கிற பழக்கம் அவருக்கு உண்டு. பயந்த ஸ்வபாவம். கான்சர், அது, இதுனு எதுவும் வந்திடாம சாதாரண பெப்டிக் அல்சரா இருக்கணும்னு வேண்டிக் கிட்டு இருக்கேன். பெரிசா ஏதாவது வந்தா அவர் தாங்க மாட்டார். குழந்தை குட்டிக் காரர் வேறே... ஆபரேஷன் முடிஞ்சதும் ஞாபகப்படுத்து. ஆஞ்சனேயருக்கு அவர் பேர்ல ஒரு அர்ச்சனே பண்ணிப் பிரசாதம் கொண்டு தாணும்னு சொல்லிட்டு இருந் தாங்க... பயாப்ஸி ரிபோர்ட் மேடம் ஆசைப்பட்ட விதமா கான்சர் இல்லேனு



வந்ததும், ஆஞ்சனேயருக்கு அர்ச்சனை பண்ணித் துளசி கொண்டு வந்து தந்தேன் டாக்டர்... அதான்... வேற ஒண்ணு மில்லே... வந்து... தப்புன்னு... ஐ ஆம் ஸாரி...''

தயக்கத்துடன் பேசத் துவங்கி, நீளமாகப் பேசி முடிப்பதற்குள் பயத்தில் குரல்லேசாகக் கம்மிப் போக நின்றவளை பாலாஜி வியப்புடன் ஏறிட்டார்.

''இதுல என்ன தப்பு சாந்தி? ஐம் க்ளாட், ரியலி, வெரி க்ளாட்... கௌரி பண்ண விரும்பினதை நீ மறக்காம செஞ்சதுக்கு நான்தான் உனக்கு தாங்க்ஸ் சொல்லணும்.. அப்புறம், மேட்ரன் கூட சந்தோஷப்பட்டுக்கிட்டாங்க... ஒழிஞ்ச சமயத்தில நீ கந்தப்பனைத் தோட்டத்தைப் பெருக்கச் சொல்லிட்டுக் கிட்ட நிக்கறியாம்: அந்தோணியைக் குப்பைகளை எரிக்க வைச்சி, மேற்பார்வை பாக்கிறியாம்... மூணாவது அறை ராமன் நாயரும் நீ ரொம்ப உபகாரமா இருக்கேனு ரவுண்ட்ஸ்ல பாத்தப்போ சொன்னார். எல்லாத்துக்கும்ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் சாந்தி...''

சாந்தி அவசரமாய் 'ப்ளீஸ் டாக்டர்!' என்று முனகினாள்.

''நீங்க ஆபரேஷன் தியேட்டர்ல இருக்கற நேரத்தில, நான் சும்மாதானே இருக்கேன்? பொழுது போகாம தவிக்கறப்ப இது கூட செய்யாட்டி எப்படி டாக்டர்? இல்லேன்னா, மேடம் கிட்ட ஒண்ணரை வருஷத்துக்கும் மேலா வேலே பார்த்து, அவங்க உயர்ந்த குணத்தைக் புரிஞ்சிக்கிட்டதுக்கு அர்த்தம் இல்லாம போயிடாதா டாக்டர்?''

''ஆனாலும்? இதெல்லாம் நீ செய்ய ணும்னு அவசியம் என்ன? ராமன் நாயர் 'சாந்தி உங்க ரிஸப்ஷனிஸ்டா, இல்லே நர்ஸிங் ஹோமின் மொத்த மேற்பார்வை யாளரா'னு கேட்ட மாதிரி...''

மீண்டும் சாந்தி சங்கடத்துடன் மறுத்தாள்.

''அவர் ஒண்ணுமே இல்லாததைப் பெரிசு படுத்திஞர்னே எனக்குத் தோணுது. மிஸ்டர் ராமன் நாயருக்குச் சொந்தம்னு



மாலையில் பூக்கும் மலர்கள்

சொல்லிக்க யாருமே இல்லே. அதனால ஆபரேஷன் பண்ணிக்கிட்டுத் தனியா இருக்காரேன்ற விம்பதியோட அப்பப்ப படிக்க புஸ்தகங்கள், கான்டீன்லேந்து வெந்நீர் — இப்படி. சில்லறையா நான் உதவறதை அவர் ரொம்பப் பெரிசா எடுத்துக்கறூர் டாக்டர்...''

—இன்னிக்கு என்ன நடந்தது தெரியுமா பாலா? தெரிஞ்சா திட்டு வீங்க.

—நான் திட்டற அளவுக்கா? என்ன ஆச்சு? ஸிஸ்டர் மருந்தை மாத்திக் கொடுத்திட்டாங்களா?

—ஓ. நோ... அதெல்லாம் ஒண்ணு மில்லே... இந்த விக்ரம் எல்லார்க்கும் டிமிக்கி கொடுத்திட்டுத் தானே, தனியா என் ரூமுக்கு வந்திட்டான் பாலா...

—கடவுளே! மத்த பேஷன்ட்ஸ் அறைக்குப் போயிருந்தா என்ன ஆயிருக்கும்? ரங்கன், மத்த ஆளுங்க என்ன பண்ணிட்டிருந் தாங்க?

—தெரியலே. நல்ல வேளையா சாந்தி என் கூட இருந்தா. ஒரு நிமிஷம் என்னைக் கொஞ்ச விட்டுட்டு, 'வா விக்ரம்... அம்மாக்கு உடம்பு சரியில்லே... சாயங் காலமா வரலாம்... அப்பா வந்தா திட்டு வார்'னு ரொம்பப் பழக்கப் பட்டவ மாதிரி பேசி அழைச்சிக்கிட்டுப் போய் வீட்டுலே விட்டுட்டா...

—தேவலியே... நைஸ் ஆஃப் ஹர்....

—சாந்தியோட ஏன் முன்னுலியே நெருக் கமா பழகலேன்னு இப்ப எனக்கு வருத் தமா இருக்கு பாலா. அவ குடும்பத்தப் பத்திக் கேட்டேன் விவரமா சொன்னு ... பாவம், கஷ்டப்படற பெண்... ஆனு, புத்தி சாலி... ஸ்க்ராபிள்ஸ் கத்துக்கொடுத்தேன், நிமிஷமா பிடிச்சிக்கிட்டு என்னை விட நிறைய ஸ்கோர் எடுத்திட்டான்னு, பாருங் களேன்...

கடைசி சில நாட்களில் சாந்தியைப்பற்றி அடிக்கடி பேசி, ஒருவித அன்னியோன்னி யத்தைக் கௌரி வெளிப்படுத்தி இருந்ததற்கு ஏற்ப, பொறுப்புடன் யாரும் எதுவும் சொல்லாமல் தானே வேலைகளைத் தக்க சம யத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வது மனசுக்கு ஆறுதலாக இருக்க, வருகிற முதல் தேதியிலிருந்து சாந்திக்கு இருநூறு ரூபாய் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று பாலாஜி தீர்மானித்தார்.

அன்று இரவு அக்காவின் தொண தொணப்பு தாளாமல் பத்து நாட்களாக நாளை வருகிறேன்; நாளன்றைக்கு வரு கிறேன் என்று சாக்குச் சொன்னதை நீடிக்க முடியாமல், அவர்கள் வீட்டுக்கு பாலாஜி இரவு உணவு உண்ணச் சென்றார்.

சுந்தரியின் மூத்த பெண் சீதா ஒரு என்ஜினியரை மணந்து சென்னையிலேயே வசிக்கிறாள். அவளுக்கு இப்போது இரண்டு பிள்ளைகள். ஏழு, நாலு வயசில்.

இரண்டாவது பையன் கோபி. அமெரிக் காவில் எம். பி. ஏ. படிக்கிறான்.

மூன்றுவது சுதா... எம். ஏ. இரண்டாவது வருஷம்...

கடைக்குட்டி சுரேஷ், பி. காம். கடைசி வருஷத்தில் இருக்கிறான்.

ஒருவருமே தம்பி மாதிரி டாக்டர் படிப்பு படிக்க முன் வராததில் சுந்தரிக்கு எக்கச் சக்க வருத்தம்.

—சுரேஷ் ஸயன்ஸ் எடுத்துக்கிட்டு மெடி கல் சேருவான்னு நினைச்சேன். நடக்கலே... உனக்கப்புறம் இந்த நர்ஸிங் ஹோமைத் தொடர்ந்து நடத்த நம்ம குடும்பத்திலே ஒருத்தர் இருந்தா நல்லா இருக்கும். என்ன பாலா? ம்... பரவாயில்லே... சுதாவுக்கு வர்ற மாப்பிள்ளை ஒரு டாக்டரா இருந் திட்டாப் போவுது... அட, அதுவும் இல்லேன்னு சுரேஷுக்குக் கூடவா ஒரு டாக்டர் பெண்டாட்டியா பிடிக்க மாட் டோம்? இத்தனை வருமானம், புகழ் எல்லாத்தையும் 'அம்போ'னு விட்டுட முடியுமா என்ன?

அடிக்கடி சுந்தரி இப்படிப் பேசி ஆற் றாமைப் படும்போதெல்லாம் பாலாஜிக்கும், கௌரிக்கும் சன்னமாகச் சிரிப்பு எழும்.

எவ்வளவு ஆசை?

தான், தன்னுடையது என்று மட்டுமில் லாமல் பிள்ளை குட்டி அற்ற தம்பியின் தொழிலுக்கு வாரிசு யார் என்பதைக் கணக்குப் போட்டுச் சப்புக் கொட்டும் ஆசை.

பாலாஜி வீட்டுக்குள் நுழைந்த போது சுதா வீடியோவில் 'திட்ரங்கன் மாங்' படம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சென்ற வருஷம் ஒரு வாரம் சிங்கப்பூ ருக்கு செமினர் ஒன்றுக்காகச் சென்ற சமயத் தில் அக்காவுக்காக இவர்கள் அருமையாய் வாங்கி வந்த பரிசு.

—வீடியோ வேணுமா, கௌரி? 330 சதம் வரி போட்டுடுவாங்க... அசலும், வரியும் சேர்த்து எக்கச் சக்கத்துக்குத் தாவிடும்.

—போனுப் போகுது பாலா... நாம வாங்கிக் கொடுக்கலேன்னு, அவங்களுக்கு வேற யார் வாங்கப் போறாங்க...? நம்ம வீட்டுக்கு வர்றப்போ எல்லாம் சுதாவும், சுரேஷும் ஆசையா வீடியோ படம் பார்த்திட்டுப் போறாங்க... எப்பவோ ஒரு தரம் வர்றோம்... வாங்கித்தான் கொடுப் போமே...

இது மட்டும்தானு?

சீதாவின் கல்யாணத்தில் மாப்பிள்ளை கேட்ட வரதட்சணைப் பணத்தைக் கொடுத்து வைரப் பதக்கம் பரிசாக அளித்து, துண்டு விழுந்த செலவுகளைச் சரிக் கட்டியதிலிருந்து; கோபி அமெரிக்கா செல்ல டிக்கெட்எடுத்து, சுதாவுக்கு அந்த வருஷ பிறந்த நாளுக்குள் அவள் வெகுவாக ஆசைப்பட்ட ஸ்டீரியோ செட் வாங்கி, சுரேஷ் காலேஜ் போக வசதியாக வெஸ்பா ஒன்றைப் பரிசளித்து..

லிஸ்ட் போட்டால் எத்தனை பக்கங் களுக்கு நீளுமோ?

''வீடியோ பாக்கறீங்களா மாமா?''

''வேணும்—சுதா. நீ பாரு... அப்பா, அம்மா எங்கே?''

''இங்க தானே இருந்தாங்க!''

''சரி, நான் பாத்துக்கறேன். வு என்ஜாய் த பிலிம்...''

ஊஞ்சல் சோபாவில் அமர்ந்து இர்வின் ஷா படித்துக் கொண்டிருந்த சுரேஷ், பாலாஜியைக் கண்டதும் 'ஹாய் அங்கிள்' என்றான்.

''நாளைக்கு சாயங்காலம் என்ன பண்றே சுரேஷ்? ஜிம்கானுவுக்குப் போய் இரண்டு ஸெட், டென்னிஸ் விளையாடலாம், வறியா?''

சுரேஷ் தோளைக் குலுக்கி, உதட்டைப் பிதுக்கினான்.

''ஸாரி, அங்கிள். ப்ரெண்ட்ஸ் எல்லா ருமா சேர்ந்துக்கிட்டு மஹாப்ஸ் வரைக்கும் ஒரு ட்ரைவ் போலாம்னு இருக்கோம்.... இன்ஃபாக்ட் உங்க அம்பாஸிடரை ஒருநாள்



தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள் : ஷாந்திலால் பிரதர்ஸ்,
7, காசிச் செட்டி சந்து, 2வது மாடி, சென்னை-600 001 தொலைபேசி : 32450 & 32886

தர் நீங்களான்னு நானே உங்களுக்கு போன் பண்ண இருந்தேன்.''

''மஹாப்ஸ்?''

''யா — மஹாபலிபுரம்—''

''ஓ!'' பாலாஜி சிரித்தார். ''அதுக்கென்ன தாராளமா அம்பாஸிடரை எடுத்துக்கிட்டுப் போ... ஹாவ் எ நைஸ் டைம்...''

''தாங்க்ஸ்...''

சுந்தரியும், குருமூர்த்தியும் மாடியில் இருந்தார்கள்.

''வந்திட்டியா பாலா! நா ஸ்ரீயாகும்னு சொன்னியே; இமே போயி உட்காருவோமா?''—

''வேணும் இங்கேயே இருக்கலாம்...''

'' 'முந்தானை முடிச்சு' வீடியோ டேப் வந்திருக்கு. பாக்கறியா பாலா?''—

''வேணுங்கா .''

''சரி, சிவாஜியோட மிருதங்க சக்கரவர்த்தி?''—

''வேணும்... ப்ளீஸ்... நான் படம் பார்க்கிற மூட்ல இல்லே...''

''மூட்' எல்லாம் நாம வரவழைச்சிக்கணும் தம்பி... மனசைச் சரிப்பண்ணிக்கிட்டுப் போனது போகட்டும்... சனியன்னு விட்டுடணும்...''

வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறத் துவங்க, தொடர்ந்து என்ன பேசுவது என்று புரியாமல் பாலாஜி நிறுத்த, ஒரு நிமிஷம் மௌனத்தில் கரைந்தது.

''பழையபடி நர்ஸிங் ஹோம் ரொடீனைத் தொடங்கிட்டியா?''

''ஆல்மோஸ்ட்...''

''இன்னிக்கு ரொம்ப சுருக்க நர்ஸிங் ஹோம் போயிட்டே போல இருக்கு?''

''ஆமா... முக்கியமான ஆபரேஷன் இருந்துது. டாக்டர் பத்ரி தெரியுமில்லே, அவர் தம்பிக்கு லங் கான்சர்.. லோபோக்டமி பண்ணி, அந்தப் பகுதியை எடுத்தோம் நாலு மணி நேரம் ஆச்சு...''

''சாப்பிட வர்றியா... தட்டு வைக்கச் சொல்லவா?''

''இன்னும் கொஞ்சம் போகட்டுமே.... முக்கியமா ஒரு விஷயம் பேசலாம்னு...''

சுந்தரி கவனத்துடன் அவனை ஏறிட்டாள்.


''வர்ற .இருபத்தி ஏழாம் தேதி எங்களுக்கு இருபதாவது வெட்டிங் டே...''

தழுதழுத்த குரலை ஒரு தரம் செருமி சரி செய்து கொண்டு தொடர்ந்தார்.

''கௌரி இருக்கறப்பவே அதை எப்படிக் கொண்டாடணும்னு நாங்க தீர்மானிச்சிட்டோம். அவளும் நானுமா சேர்ந்து ரொம்ப உயர்வா செலிப்ரேட் செய்யணும்னு ஆசைப்பட்டது நிறைவேறும...''

''இப்ப இந்தப் பேச்சு எதுக்கு பாலா? ஆளே போனப்புறம் இருபதாவது வெட்டிங் டே என்ன, மண்ணாங்கட்டி! வேணும்.... போனதை நினைச்சுக் குமுறுதே... உன்னாலே தாங்க முடியாது. வேற ஏதாவது நல்ல பேச்சாப் பேசுவோம். வா, இமே போகலாம்... பசங்க என்ன பண்றாங்கன்னு பார்க்கலாம் வா...''

பேசியவன் எழுந்து நின்றான்.



புஸ்தகங்களில் உள்ள படங்கள் இப்பொழுது 'உயிர்' பெற்று இயங்குகின்றன என்பது ஒரு புதிய சாதனை. அமெரிக்காவில் வெளியாகியுள்ள ''மனித உடல்'' என்னும் புஸ்தகத்தை திறந்தால் அதிலுள்ள உடல் உறுப்புப் படங்கள் இயங்குகின்றன. தசைநார் சுருங்கி விரிகின்றன. ரத்தம் நாளங்களில் ஓடுகிறது! இந்த முன்னேற்றத்தைக் 'காகித என்ஜினியரிங்' என்று அழைக்கின்றனர்.

தகவல்: ரிஸர்ச் அண்டு ரெஃபரன்ஸ்

'வா பாலா' என்று மீண்டும் அழைத்து விட்டுக் கதவைப் பார்க்க நடந்தான்.

தான் என்ன சொல்ல விரும்புகிறோம் என்பதைக் கேட்கக் கூட விருப்பமில்லாமல் என்னமோ தனக்குத்தான் மகா அக்கறை என்பது போல சம்பாஷணையைத் துண்டித்துக் கொண்டு அக்கா கிளம்ப, பாலாஜி பட்டென்று அடிபட்டுப்போனார்.

என்னை ஏன் யாரும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்? எனக்கு எது சந்தோஷத்தைக் கொடுக்கும்! எது நிறைவைத் தரும் என்று ஒரு கணம் சிந்திக்க மறுப்பதோடு, நானாகச் சொல்ல வந்தாலும் முரட்டுத்தனமாக, கண்ணைக் கட்டிய குதிரைகளாக உங்கள் பாதையிலேயே ஏன் செல்கிறீர்கள்?

தொடர்ந்து எதுவும் பேசப் பிடிக்காமல், மௌனமாய் அமர்ந்து சாப்பிட்டேன் என்று பேர் பண்ணிவிட்டு வீட்டுக்கு வந்து, இரவு முழுவதும் உறங்காமல் அவஸ்தைப் பட்டுவிட்டு, கனத்த மனசோடு காலையில் நர்ஸிங் ஹோமுக்குச் சென்று, ஆபரேஷன்கள் ரவுண்ட்ஸ் முடிந்த பின், தாங்கமாட்டாமல் சாந்தியிடம் நவம்பர் இருபத்தியேழு கௌரியும் தானும் என்னென்ன செய்ய விரும்பினோம் என்பதைச்சொல்ல; அவள் சத்தியமாய் நெகிழ்ந்து கண்கள் அகல ''க்ரேட் டாக்டர்! மேடம் ஒருத்தராலத்தான் இத்தனை உயர்வா சிந்திக்க முடியும்'' என்று மனப்பூர்வமாகக் கூறியதும் தன் திப்பித்திப்பியாக உடைந்திருந்த மனசு கொஞ்சமாவது ஒட்டிக்கொண்ட மாதிரி பாலாஜிக்குத் தோன்றியது.

(தொடரும்)

டெட் கட்டியில் மட்டுமே உள்ளது ஸால்வெண்ட் பவர்

இது துணிகளுக்கு முற்றிலும் பளிச்சிடும் வெண்மை அளிக்கிறது



Shilpi DM/31 A/81 Tam

வேறெந்த டிடர்ஜெண்ட் கட்டியும் பாரும் இதற்கு இணையில்லை பாரும்

"ஏறுங்க தேவி... கார் இதுக்கு மேலே போவாது. இனிமேல் மாட்டு வண்டியிலே போகலாம். இல்லை பொடி நடையாக நடந்துடலாம்" என்றார் செந்தில் நாதன் டூரிஸ்ட் டாக்ஸிக்குப் பணம் தந்தவாறே.

"என்னங்க கிராமம் இது. ஒழுங்கா ரோடு கூட இல்லாத பட்டிக்காடா இல்ல இருக்குது. இங்க நடக்க நம்மாலே ஆவாதுப்பா" என்றாள் தேவி இடமாக.

"கிராமத்துலே வசதி போதாதுன்னு தெரிஞ்சுதானே ஒன்னைக் கூட வரவேணும்னேன். இப்ப ரோடு சரியில்லை. நடக்கமாட்டேன்னு, என்ன செய்யறது?" என்றார் செந்தில்.

தேவி முகத்தைச் சுளித்தவாறே இறங்கி நிற்க, அவர்களை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டமே கூடிவிட்டது. யாரோ ஒருவர், "வண்டி கட்டியாறேன்" என்று ஓடினார்.

முப்பது வருஷங்களுக்கு முன் பார்த்த அதே பசுமை. செந்தில்நாதன் நெஞ்சை நினைவு அடைத்தது. தெருவுக்கு ஒருபுறத்தில் அகலமான காவேரி, மறுபுறத்தில் மதகுநீர் அளவாய்ப் பாய்ந்திருந்தது. அருகே குலை தள்ளிய வாழை மரங்கள். தெருவின் இருபுறமும் உயர, உயரமான தென்னை.

அப்போதெல்லாம் மதகுநீர் இவ்வளவு கச்சிதமாக ஓடாது. நுரை பொங்கிக் கொப்பளித்து, ஓடும் நீரில், அவரும் அவர் நண்பர்களும் கோவணாண்டிகளாகக்குதித்து விளையாடியிருக்கிறார்கள். கொஞ்சம் விவரம் புரியும் வயதில், குருக்கள் வீட்டு சரசா வெள்ளை உடம்பில், மார்பு வரை புடவையைத் தூக்கிக் கட்டி முங்கி எழுவதை மறைந்து பார்த்து ரசித்திருக்கிறார்கள். பரிசில் கட்டி, அகண்ட காவிரியில் சுழன்று, சுழன்று அக்கரை சென்று ஆற்று மணலில் சென்று பளிஞ்சடுகுடு விளையாடியிருக்கிறார். வேலப்பன், தண்டபாணி, சுப்பிரமணியன், வின்செண்ட் என்று சில பழைய நண்பர்கள் பெயர்கள் நினைவுக்கு வந்தாலும் முகங்கள் மறந்து போச்சு.

"வண்டி வந்திடுச்சு ஏறுங்க" என்று அவசரப்படுத்தினாள் தேவி.

"மேட்டு மேல ஏறித் தெற்குத் தெரு வரை போவணும். கூலி எவ்வளவு சொல்லு?" என்று கேட்டார் செந்தில்.

வண்டிக்காரர் பொக்கைப் பல் தெரியச் சிரித்தார். "தெற்குத் தெரு கண்ணம்மா மவன்தானே. நீங்க எல்லாம் பட்டணம் போய்ப் பெரிய மனுஷன் ஆயிட்டீங்கன்னு

முதல் முறையாக!

உஷா சுப்பிரமணியன்



நாங்க நம்ம கிராமத்துவங்க கிட்டயே காசு வாங்கி வண்டி ஓட்டுவமா என்ன?''

வண்டிக்காரர் தன்னை அடையாளம் கண்டு கொண்டது செந்திலுக்கு வியப்பைத் தந்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன் உடம்பு வராமல், வற்றிச் சோனியாக அரைகுறை மீசையுடன் ஊரை விட்டுப் போன இளைஞனை, இந்த வழுக்கை, முன் தொப்பையில் முதியவர் எப்படிக் கண்டு பிடித்தார்? பல ஆண்டுகள் சேர்ந்து வளர்ந்து, கூடி விளையாடிய சின்ன வயசு நண்பர்களின் முகம் அவருக்கு மட்டும் ஏன் மறந்து போச்சு?

மண்பாட்டையில் வண்டி அதிர்ந்தபோது தேவி சிடுசிடுத்தாள். ''எம் புத்தியைச் செருப்பால அடிக்கணும். உங்க கூட வந்தேன் பாருங்க... இன்னிக்குத் தலைவலி வந்து சாகத்தான் போகிறேன்.''

முன்பு சாணி முட்டை தட்டப்பட்டிருந்த சுவர்களில் இப்போது சினிமா போஸ்டர். அடே... சில்க்கு சுமிதா... லேட்டஸ்ட் சினிமாக்கள் கூட இவ்வளவு சீக்கிரம் குக்கிராமத்துக்கு வந்து விடுகிறதா?

'ஜல் ஜல்' என்ற சத்தத்துடன் கறவை மாடுகள் மேயச் சென்று கொண்டிருந்தன. ஒல்லியான பையன் ஓட்டிவந்த மாட்டின் கொம்புகளில் கறுப்பு, சிவப்பு வண்ணம் அடிக்கப்பட்டிருந்தது. செந்தில் வியப்புத் தாங்காமல், ''தேவி, அதப்பாரு, வர, வர கிராமத்து மாடுங்களுக்குக் கூட இல்லை அரசியல் கட்சி புரியுது'' என்று குதூகலமாகச் சிரித்தார்.

''சும்மா இருங்க. தொணத் தொணன்னு... தலைவலி பொளக்குது!'' வள்ளென்று விழுந்தாள் தேவி.

''ஏங்க... நெலத்தை விக்கறதா முடிவு பண்ணிட்டீங்களாமே, காவிரிப் பாசனத்து நெலம் கெடைக்கக் கூடியதா?'' வண்டிக் காரர் மாட்டை விரட்டியபடியே திரும்பிக் கேட்டார்.

தேவிக்குக் கோபம் பொங்கியது. ''ஆல்க் ஹிம் டு ஷட் அப். இந்த ஆளுங்களுக்கு ஊர் வம்பை விட்டா வேற வேலை இல்லை?'' என்று ரகசியக் குரலில் சிடுசிடுத்தாள்.



லட்சுமண மாமா மகன் ரவி பதற்றத்துடன் இவர்களை வரவேற்றார்... ''வாங்க அண்ணா, வாங்க அண்ணி... வர்றதுகுறிச்சு ஒரு வார்த்தை எழுதியிருந்தா, ரயிலடி ஜங்ஷனுக்கே வந்திருப்பேனே'' வீட்டிலிருந்த ஒரே ஊஞ்சலில் ஆண்கள் அமரவும், வேறு நாற்காலி இல்லாதது கண்டு, எங்கு உட்காருவது என்று புரியாமல் தேவி நின்றாடியபடி சுற்றுமுற்றும் பார்த்தாள். ரவியின் மனைவி கை, கால் கழுவ நீர் எடுத்துத் தந்தாள். குமுட்டி அடுப்பை மூட்டி மளமளவெனப் பற்ற வைத்து, பருப்புப் போட்டு சாம்பார் செய்து, பாயசம் வைத்துப் பரிமாறினாள். தேவி 'தலையை வலிக்கிறது' என்று சாப்பாட்டை நிமிர்ந்து பார்க்காமல் அலட்சியமாகப் படுத்தாள்.


அம்மா பதினெட்டு வயதிலேயே கணவனை இழந்தவள். என்னதான் உறவினர் என்றாலும், அக்கம்பக்கம் இருந்தவர் ஒன்றுவிட்ட அண்ணன், தம்பிமார்தான். அத்தனை இளவயதில் ஒரு சின்னப் பேச்சு வராமல், தாயாதிக்காரர்களிடம் முகச் சுணங்கல் கூட இல்லாமல், தானே தன் நிலத்தில் உழைத்து, மகனையும் கல்லூரிப் படிப்புக்குத் திருச்சி வரை அனுப்புவது அவ்வளவு சுலபமான காரியமாக இருந்திருக்காதுதான். ஆனால், அவள் அதை வெளிக்காட்டியவள் இல்லை. செந்திலுக்குத் தாயாரிடம் மிகவும் அன்பு, மரியாதை எல்லாம் உண்டு.

1952-ல் பாகிஸ்தான் கிரிக்கெட் குழு இந்தியா வந்திருந்த சமயம் நான் கான்பூர் விமானப்படைப் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

இந்தியா வெற்றி பெறும் தருணம் நெருங்கிக் கொண்டிருந்த போது, கிரிக்கெட்டில் ஆர்வம் மிக்கவரான எங்கள் 'கமாண்டர்' ஒரு ஃபைட்டர் விமானத்தை டேக்-ஆஃப் செய்யச் சொன்னார். 'கமெண்டரி' கேட்டுக் கொண்டே, 'கன்ட்ரோல்' மூலம் உத்தரவுகள் கொடுத்தார்கள். இந்தியா வெற்றி பெற்ற அந்தக்கணம், விமானம் மைதானத்தின் மேலே தாழ்வாகப் பறந்து உடனே உயரக் கிளம்பி ஒரு 'அந்தர்' அடித்து வாழ்த்துக் கூறியது!

-ஓய்வுபெற்ற விமானப்படை ஊழியர் ஒருவர் கூறக் கேட்டவர்:

உமா.



சென்னைக்கு வேலை பார்க்கச் சென்று, முதலாளி தன் ஒரே மகளை அவருக்கு மணமுடித்து விட்டு மாப்பிள்ளையாக்கிக் கொண்ட பின்தான் அவர் வாழ்க்கை எப்படியெல்லாமோ மாறிவிட்டது. பெரிய இடத்துச் சம்பந்தம் என்றவுடன் அம்மா மகிழ்வுடன் செயல்பட்டாள். தன் பிள்ளை தலைதூக்கிவிட்டான் என்று பெருமைப்பட்டாள். ஆனால் எல்லாம் மாமனார் தயவில் என்றாகி விட்ட நிலையில் செந்திலின் தலைதான் தூக்கவே முடியாமல் புதையுண்டு சென்றது.

அம்மா செந்திலின் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு ''அவன் நன்றாயிருந்தா சரி'' என்று எதையும் எதிர்பார்க்கவில்லை. திருமணமான புதிதில் வருடம் ஒரு முறை அவரும் எப்படியாவது அம்மாவை எட்டிப் பார்த்து விடுவார். பின் அதுவும் குறைந்து, நின்றே போச்சு. அம்மா இறந்தபோது, அவர் வியாபார விஷயமாக வடக்கே சென்றிருந்தார். அம்மா மறைவு பற்றித் தேவி அவருக்குச் செய்தி எட்டிவிட்டபோது அம்மா போய்ப் பத்துநாள் முடிந்திருந்தது. ''ஆமா, காரியம் ஆன பொறவு போயி என்ன தான் செய்யப் போறீங்க'' என்று தேவி அப்போதும் தடுத்துவிட்டாள்.

அம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரர் லட்சுமண மாமா தாமாகப் பொறுப்பேற்றுக் கொண்டு, செந்திலின் நிலத்தையும், சேர்த்துக் கவனித்து, வருடம் தவறாமல் ஒழுங்காகக் கணக்கும் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு என்று பணமும், இரண்டு மூட்டை அரிசியும் அனுப்புவார். இரண்டு மாதம் முன் மாமா இறந்து போனபின் அவர் மகன் ரவி, செந்தில்நாதனுக்குக் கடிதம் எழுதினான். தான் கரூரில் தாலுகா ஆபீஸில் வேலை பார்ப்பதாகவும், தன்நிலங்களையே நேர்முகமாகக் கவனிக்க முடியாத நிலையில் குத்தகைக்கு விடப்போவதாகவும் அவரும் அப்படியே செய்யலாம் என்றும்.

''குத்தகைக்காரனை நம்பிப் பட்டிக்காட்டில் நிலம் வைத்துக் கொள்வானேன், வித்துப் போட்டால் இங்கேயே அவுட் ஹவுஸ் கட்டி வாடகைக்கு விடலாம்'' என ஐடியா கொடுத்தாள் தேவி. அத்துடன் கணவன் சாமர்த்தியத்தில் அவளுக்குத் துளியும் நம்பிக்கையில்லாததால், தானும் கூடவே கிளம்பி விட்டாள்.

நடக்கத் துவங்கினார். சென்னையில் இப்படி அகலக் கால் வைத்து நடக்க இடம் கிடையாது. அம்மாடி! எவ்வளவுதான் அணைகட்டிவிட்டாலும் இந்தக் காவிரிநீர் என்னமாய்ச் சுழன்று, சுழன்று நுரை கொப்பளிக்க ஓடுகிறது. உடல்ரோமத்தை உலுக்கி, நிற்க வைக்கும் இந்த விடிகாலைக் காற்றுத்தான் என்ன இதம்?

தூரத்தே தெரிந்த பரிசலையும் ஒரு சின்னப் பையன் தான் ஓட்டி வந்தான். அவர் பார்த்துக் கொண்டே இருக்கும் போது, அந்தப் பையன் ஒருபுறமாகக் குனிந்து சரிய, 'ஐயோ' என்ற ஒலத்தைக்

In Trust For The People...

The entire wealth gathered by the Founder of Tata Enterprises, and his sons and successors, over almost a century of industrial pioneering is bequeathed to Tata philanthropic trusts and foundations.

The whole of that wealth is held in trust for the people and used exclusively for their benefit—scholarships for education, grants for rural welfare, contributions for medical research, support for national institutions, and donations for relief from natural disasters.

The circle is thus complete: what came from the people goes back to the people many times over.



TATA ENTERPRISES

தொடர்ந்து பரிசில் கவிழ்ந்து, அந்தப் பையன் நீரில் சரிந்து விழுந்தான்!

ஒரு நிமிடம் கூட யோசியாமல் ஆற்றில் பாய்ந்து குதித்தார் செந்தில்.

செந்திலுக்கு மூச்சு முட்டியது. பழக்கமில்லாத உடற்பயிற்சியில் கை, கால் துவண்டது. அவர் கையை வீசிப்போட, சுழல்மறுபக்கம் இழுத்தது. மயங்கி விழும் நிலை. திடீரென அவர் கையில் ஒரு சின்னக்கரம் தட்டுப்பட்டது. அத்தனை சிரமமும் மறந்து பஞ்சாகிப் போன நிலையில், அவர் அந்தச் சின்னக் கையைப் பிடித்து இழுத்து நீந்தியது தான் தெரியும். தரையை அடைந்தபோது அவர் நினைவு தவறிவிட்டது.

அவர் மெல்லக் கண்விழித்த போது, அவர் காலில் சூடாக எதையோ தேய்த்துக் கொண்டிருந்தார்கள். உடம்பு முழுவதும் தவிட்டு ஒத்தட இதம். அவரைச் சுற்றி அந்தச் சின்னக் கிராமமே திரண்டிருந்தது.

''ஐயா; எங்க புண்ணியம் கண்திறந்துட்டீங்களா... புள்ளே சூடா பால் எடுத்துட்டு வா...'' ஒரு ஆணை பிறந்தது.

''பட்டணத்து ஐயா, நீங்க மனுஷனில்லே... எங்களுக்கு மடிப்பிச்சை தந்த தெய்வம்.'' யாரோ ஒரு கணவனும் மனைவியும் அவர் காலில் விழுந்தார்கள்.

தேவி புயலென வந்தாள்... ''இந்தக் கிராமம் கொள்ளி வாய்ப் பிசாசுன்னு எனக்குத் தெரியும். அதுதான் உங்களைத் தனியா அனுப்பாம நானும் கூட வந்தேன். என் தாலி பலம் நீங்க பொழைச்சிருக்கீங்க. ஆள்விட்டுக் கருரிலிருந்து ஒருடாக்ஸி கூட்டியாரச் சொல்லுங்க... நாம இப்பவே கிளம்பியாகணும்'' என்று படபடவெனப் பொரிந்து தள்ளினாள்.

''அம்மா, ஐயா இப்பத்தான் நெனைப்புக்கு வந்திருக்கார். ரெண்டு நாள்படுத்து, வழுந்து ஒடம்பைத் தேத்திக்கிட்டுப் போகலாம்மா...'' ஆளுக்கு ஒன்றாய்ப் பேசினர்.


சுற்றி நின்ற அனைவரையும் மறந்தவராக செந்தில் பலத்த குரலெடுத்துக் கத்தினார். ''நான் வர முடியாதுடீ... நீ வேணு உன் பட்டணத்துக்குப் போய்க்கோ. நான் நிலத்தை விற்கப் போவதில்லை. இந்தக் கிராமத்தை விட்டும் நகரப் போவதில்லை. உங்க அப்பனுக்கும் உனக்கும் நிறைய உழைச்சுப் போட்டாச்சு. இனிமே நான் உங்க சேவகத்திலேருந்து ரிடையர் ஆகி, இந்தக் கிராமத்திலே தான் தங்கப்போகிறேன். இந்தக் கிராமம் உன் ஸ்டைலுக்கு ஒத்துக்காதுன்னு, நீ போய்க்கோ... நான் வரப் போறதில்லே, போடீ...''

''அய்யய்யோ. அவருக்கு ஜன்னி கண்டு போச்சே தன் நினைப்பில்லாம உளர்றாரே. ஆராச்சும் டாக்டரைக் கூட்டியாங்களேன்.''

சரியாக ஏழாவது நாள் ரவி வீட்டு வாசலில் இரட்டை மாட்டு வண்டி நின்றது. நிலம் விற்ற பணம் கைப்பையில் அடக்கமாக, கல் அட்டிகையைத் துடைத்துப் பளபளப்பேற்றியபடி, வண்டியில் ஏறினாள் தேவி. அவளைப் பின் தொடர்ந்து செந்திலும் ஏறினார். அவர் மனத்தில் புரசைவாக்கம் வீட்டு அவுட் ஹவுசும், அதில் வரப் போகும் வாடகை பற்றிய கனவும் நிறைந்திருந்தது.

வண்டி கிளம்பி, அவரும் தேவியும் தனியாக விடப்பட்டபோது அன்று அவர் போட்ட சத்தத்திற்குத் தேவியிடமிருந்து கிளம்பப் போகும் எதிரொலி பற்றிய பயம் எழுந்தது. கணநேரச் சாதனைகளும், வீரத்தனங்களும் மட்டும் ஆயுளுக்கும் வாழ்வாகத் தொடராது என்ற சிந்தனை ஏன் அன்று எழவில்லை என்ற சுயஇரக்கம் தோன்றியது. ''தேவி, நா வரட்டுமான்னு சொல்லு. ஊதீர் போட்டுத் தரச் சொல்றேன்'' என்றார் சமாதான முதல் கட்டமாக. தேவி அவரைத்திரும்பிக்கூடப்பார்க்கவில்லை.

தன் முதல் முறை ஆண்மை அடிபட்டு, அதுவே கடைசியாகவும் போய்விட்டது என்று புரிந்ததைவிட, இப்போது தேவியை எப்படிச் சமாதானப் படுத்துவது என்ற பிரச்சினைதான் அவர் மனத்தின் மேல் நின்றது.



மனித இயந்திரம்

ரோபாட்டுகளைத் தயாரிக்கும் கலை இப்போது வெகு நுணுக்கமாக முன்னேற்றம் அடைந்துள்ளது. அதை மனித உணர்ச்சி மிக்க ஜந்துவாக உருவாக்கலாம். அப்படிப்பட்ட ஒரு ரோபாட்டைத் திட்டினால் அது துக்கப்படும். புகழ்ந்தால் மகிழ்ச்சியடையும். ஓர் அறிவுள்ள மனிதனைப் போல் செயல்படும். இதனால் சிந்திக்க முடியும். தான் அறியும் விஷயங்களைத் தன் நண்பனை மற்றொரு ரோபாட்டுக்கு நொடிப் பொழுதில் அறிவிக்கும். தொழிற் கூடங்களில் ஜப்பானியத் தொழிலாளிகள் ரோபாட்டை ஒரு சக தொழிலாளியாகப் பாவித்துப் பழகுகிறார்கள்.

இந்நிலையில் 'ரோபாட்டுகளுக்குச் சமூக உரிமைகள் உண்டு; அவை பாதுகாக்கப்படவேண்டும்' என்ற கோரிக்கை எழுந்துள்ளதில் வியப்பில்லை. மிருகங்களையும் குழந்தைகளையும் துன்புறுத்தக் கூடாது என்று சட்டங்கள் ஏற்பட்டது போல ரோபாட்டுக்களைத் துன்புறுத்தக் கூடாது என்ற ஒரு சட்டம் தேவையா என்பதைப் பற்றி இப்பொழுது ஹவாய் நீதித் துறையும் ஹவாய் பல்கலைக் கழகமும் இணைந்து ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளன.

தகவல்: கிளார்ச் அன்ட் ரெஃபரன்ஸ்

அன்புள்ள வாசகருக்கு,

குசலம் விசாரிக்க அவகாசமில்லாத ஓர் அவசரமாலேயில் எழுதுகிறோம். எனவே நேரடியாய் விஷயத்திற்கு வருவோம்.

தூங்காதே தம்பி தூங்காதே

குதிரையின் உரிமையாளர்: ஏ. வி. எம்.
குதிரையை இயக்கியவர்: : எஸ். பி. முத்துராமன்

மழமழவென்று தலைவாழை இலேபோட்டு வாய்க்கு ருசியானதெல்லாம் பரிமாறியிருக்கிறார்கள். இரட்டைக்குழந்தைகள் ஆஸ்பத்திரியிலேயே பிரிக்கப் பட்டு ஒன்று பணக்காரனுகவும், இன்னென்று ஏழையாகவும் வளர்கிற பழைய கதையைத் தூசிதட்டி, வேட்டி கட்டிய இடத்தில் பாண்டைப்போட்டுப் பவனி அனுப்புவதில் சமர்த்தர்களாயிருப்பவர்கள் கூடித் தயாரித்த படம்.
ஒன்றும் பெரிய வித்தியாசமில்லாத இரண்டு கமல்கள். இரண்டு பேருக்குமே டான்ஸ் ஆட வருகிறது. டிஷ்யூம், டிஷ்யூம் போடத் தெரிகிறது. ரசிகர்களே சந்தோஷப்படுத்த முடிகிறது.
வெடுக் வெடுக் என்று வருகிற சுலக்ஷணவைப் பார்க்க சந்தோஷமாயிருக்கிறது. ஆனாலும் பார்க்கில் 'சும்மா நிக்காதீங்க' நடனம் (உபயம்: புலியூர் சரோஜா) நாகரீகக் கோட்டுக்குக் கொஞ்சம் அந்தப்பக்கம். இப்படியெல்லாம் காதலித்துவிட்டு, அவரைத்தான் காதலித்தேன் இவரை இல்லே என்று முரண்டு பிடிக்கிற சுலக்ஷண சத்தம் போடாமல் கடைசியில் காதலித்தவன விட்டுவிட்டு அடுத்தவருக்குக் கழுத்தை நீட்டுவதை நம் தமிழ் சினிமாவில் ... ன் பார்க்கலாம்.
எஸ். பி. பாலசுப்பிரமணியம், இளேயராஜா சேர்ந்து வழங்கும் 'நானுக நானில்லே தாயே' காதுக்கு இனிமை என்றால் 'வானம் கீழே வந்தாலென்ன?' கண்ணுக்கு இனிமை. அவ்வளவு அருமையாகப் படமாக்கியிருக்கிறார் பாபு. டாக்டர் ஜனகராஜ் டக்டார் கஜனஜ்ரா. மனிதர் தான் குழம்புவதோடு மட்டுமல்லாமல் நம்மையும் சேர்த்தல்லவா குழப்பிவிடுகிறார்? ராதா சாதா. வினு சக்கரவர்த்தியும், கவுண்டமணியும், செந்தாமரையும் ஆறிப்போன வில்லன்கள். சமையல்கார ஶ்ரீ. சீனிவாசன் குறையில்லாமல் செய்திருக்கிறார். குட்டை பெஞ்சுகளே வைத்துக் கொண்டும், பின்னல் படுக்கையறையில் ஒரு சின்னப் புத்தகத்தை வைத்துக் கொண்டும் கமல் சுழற்றிச் சுழற்றிப் போடுகிற சண்டைகளே அலுக்காமல் இன்னும் நாலுமுறை பார்க்கலாம். என்ன சுறுசுறுப்பு, என்ன சுறுசுறுப்பு!
கமல்கள் மாற்றப்படுகிற இடம் சுத்தமாய் உப்புச் சப்பில்லாமல் படமாக்கப்பட்டிருப்பதை வேண்டுமானல் மன்னிக்கலாம். கார் சேஸிங், ஹெலிகாப்டர் துரத்திங் போன்ற கடைசிக் காட்சிகளில் கூடவா உயிரில்லாமல் செய்வார்கள்?
ஆனாலுங்கூட சுறுசுறு படங்கள் என்ற முத்திரையோடு வந்திருக்கும் படங்களில் இதற்கு மார்க் அதிகம்.

ஜெயமன்மதன் டிப்ஸ்: அனுபவமுள்ள பாட்டை. குறிப்பிசகாமல் முழு வேகத்தோடு பாய்கிற குதிரை. 'வெற்றி'யைப் பிடிக்கக் கஷ்டமாயிருக்காது.





மனைவி சொல்லே மந்திரம்

குதிரை சொந்தக்காரர்: கலைமணி
குதிரையை இயக்கியவர்: இராம. நாராயணன்

என்னதான் 'ஏ' முத்திரை குத்தியிருந்தாலும், எடுத்த எடுப்பில் நளினி—மோகன் சந்திப்பில் பேசுகிற மொழிகளில் ஆபாசம் அளவுக்கு மீறி இருக்கிறது.
கிராமத்துக்கு வருகிற டாக்டர் பையன் நாய்க்கடிபட்ட நாயகியின் நாபியைச் சுற்றிச் சுற்றி ஊசி போடுகிறபோதே (அவ்வளவு தூரம் காட்ட வேண்டுமா என்ன அந்த ஊசிபோடுகிற காட்சியை) உள்ளத்தையும் கவர்ந்து விடுகிறார். பெண் பேஷண்ட்களைத் தொடுகிற டாக்டரெல்லாம் இவரை மாதிரி கிளுகிளுக்கப்பட்டால் போதும், மருத்துவக் கல்லூரிகளுக்கு மூடுவிழா தான் நடக்கும்.
வீட்டுக்கு வருகிற மருமகன் உள்ளம் குமுறி எப்படி பழிவாங்குகிறார் என்று ஒருபக்கம்; டாக்டர் பையன் மனைவி சொல்லைக் கேட்காததால் எப்படியெல்லாம் அவதிப்படுகிறான் என்று ஒருபக்கம்; உழைத்தால் எப்படி முன்னுக்கு வரலாம் என்று சொல்லப்படுகிற கிளைக்கதை ஒருபக்கம் என்று ஏகப்பட்ட நீதிக்கதைகளைக் காது நிறையக் குத்துகிறார்கள்.
மோகனுக்குக் கையாலாகாத பாத்திரம். சுயமாகவும் தெரியாது. சொன்னாலும் புரியாது. இந்த மாதிரி இரண்டுங்கெட்டான் பாத்திரத்தில் அவர் என்னதான் ஆடட்டுமே, எப்படி எடுபடுமாம்?
நளினி நளினம்.
மண்வாசனை பாண்டியன் மதுரை பாஷையை விட்டு சென்னை பாஷையைப் பேசப்பார்க்கிறார். நம் தருமமிகு சென்னை மொழி பேசுபவருக்கெல்லாம் வந்துவிட கிள்ளுக்கீரையா என்ன?
இளவரசி இன்னும் இரண்டு வருடங்கள் கழித்து நடித்தால் பரவாயில்லையோ? முகத்தில் இன்னும் குழந்தைத்தனம் மாறவில்லை. கல்யாணம் ஆன பெண்ணைப் பார்க்கக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது.
'ஆத்தாடி அதிசயம்'—கேட்க இனிமையாயிருக்கிற இளையராஜாவின் படைப்பு. பாடல்களிலும் ஆபாச நெடி வீசாமல் இல்லை.
வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டுக் கடைசியில் நல்லா இருங்க என்று இரண்டு கைகளையும் தூக்கி வாழ்த்தும் குடிகார வினுச் சக்கரவர்த்தி—நயம் சரக்கு.

ஜெய்மன்மதன் டிப்ஸ்: குட்டியாய் இருக்கும் போது குதிரைக் குட்டி மாதிரி தெரிந்ததா... (இடைவேளைவரை) அப்புறம் பார்த்தால்... அடஃப்பூ-மூகம் வெளுத்த கழுதை!

ஒரு வழியாய் தீபாவளி ரேஸில் கலந்து கொண்ட தமிழ்க் குதிரைகளைப் பார்த்தாயிற்று. எது ஜெயிக்க வேண்டும், எது மண்ணைக் கவ்வ வேண்டும் என்று ரேஸ் முடிவுகளை நிச்சயிப்பவர்கள் நீங்கள்தான் என்பதால் அந்த வேலையில் நாங்கள் ஈடுபடவில்லை.
வந்தனங்களுடன்,
ஜெயமன்மதன்



பிருந்தா சுந்தரம்,
சென்னை-600 001.

- விரைவுப் பேருந்து என்று குறிப்பிட்டிருந்தும் அனுபவமில்லாத நடத்துனரால் தாமதமாக வேலைக்குச் செல்லநேரிடுகையில்..

எஸ். நல்லபெருமாள்,
பெங்களூர்.

- மிகவும் ஆர்வத்துடன் ஆங்கில கிரிக்கெட் காமெண்டரி கேட்டுக் கொண்டிருக்கும் போது இந்தியில் காமெண்டரி சொல்லப்படும் போது...

வித்யா ஸ்ரீதர்,
பொள்ளாச்சி.

- வீட்டுக்கு வந்த விருந்தாளிக் குழந்தை ஏகமாக அட்டகாசம் செய்யும்போது (விலையுயர்ந்த பொருள்களை உடைத்து வீசி) அதன் பெற்றோர்கள் அதைப் பார்த்தும் கண்டிக்காமல் சும்மா இருக்கும்போது..

திருமதி மணிகண்டன்,
தஞ்சாவூர்-7.

- இரு பிராந்திபாட்டில்கள் (Full) வாங்குபவர்களுக்கு 1 பாட்டில் பீர் இனாம் என்ற விளம்பரத்தைப் . பார்க்கும் பொழுது மகா எரிச்சலாக இருக்கும்.

ஆர். லோகேஸ்வரி,
சென்னை-5.

- எம். கே. ஜியில் சேர்க்கும் போது ரூபாய் ஆயிரம். இரண்டாயிரம்பணம் வாங்குவதற்காக டெஸ்ட் என்ற ஒன்றை வைத்து. சேர்ந்த பின்பும் ஒவ்வொரு வகுப்பிலும் டிராமா டிக்கெட் கட்டிட நிதி என்று ரூபாய் நூறு. இருநூறு கேட்கும் போது....

ஏ. ஆர்தர்,
மேட்டுப்பாளையம்.

- ஆறு வருஷங்களாக வீட்டின் நபராக உடனிருந்து அன்பைப் பொழிந்து வளர்த்த அருமைப்பூனை வீட்டின் வெளியே கிடைத்த பெருச்சாளியைக் கவ்விக் கொண்டு வந்து வீட்டினுள் வைத்து உண்ண ஆரம்பிக்கும் போது.

பி. தங்கவேல், திருச்சி.

- ஒரே நகரில் ஒரே மில்லின் இரண்டு விற்பனை நிலையங்களில் ஒரே சேலை வித்தியாசமான விலைகளில் விற்கப்பட்டு ரூ.20 வரை நாம் ஏமாறுவதை உணரும் போது....

குமரி அமுதன்,
நாகர்கோவில்.

- நடைபாதை, கடைபாதையாக கால் தடுக்கி விழ, அந்த நெரிசல் அன்றாட எரிச்சல்!

எ. சுதா, கும்பகோணம்.

- இரண்டு மாதங்களுக்கு முன்பே இரயிலில் தூங்கும் வசதி பதிவு செய்து விட்டு, பிரயாணத்தன்று அரைமணி நேரத்திற்கு முன்பாகத்தூங்கும் வசதி பெட்டி இணைக்கப்படவில்லை என்று சொல்லும் பொழுது...

ஆர். கல்யாணி, நாக்பூர்

- வான் பொய்ப்பினும்
தான் பொய்யா
பேலின்பிரிட்ஜ்
(மின்நிலைய)
சாம்பல் மழை
வீட்டின் தாழ்வாரத்
தில் அளவிறந்து
பெய்யும் காலை...

வே. அருள்மொழி,
சென்னை-5.

- பரீட்சை நேரத்தில்
அம்மா ஊருக்குக்
கிளம்பும் போது...

எம். முரளிதரன்,
கல்கத்தா.

- என்கொயரியில் விவரம் சொல்லாமல் கவுண்டரில் ரயிலுக்காக டிக்கெட் வாங்க நெடுநேரம் க்யூவில் நின்று நம்முறை வந்ததும் குறிப்பிட்ட தேதியில் டிக்கெட் இல்லை என்று அறியும் போது...

பி. வி. சீனிவாசன்,
சென்னை-28.

- ஆபீசுக்குச் செல்ல வெகு நேரமாகப் பல்லவன் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டு இருந்துவிட்டு, தொலைவில் பஸ் வந்து கொண்டு இருப்பதைப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் போது அது ''மகளிர்

எரிச்சல்

மட்டும்'' என்ற பல கையைத் தாங்கி வரும்போது அதைப் பார்த்து...

மீனாட்சி இராசாமணி, சென்னை-83.

எலெக்டிரிக் பில் கட்டுவதற்காக க்யூவில் அதிக நேரம் காத்திருந்து களைத்துப் போய் என் முறை வரும்போது, கவுண்டரில் இருப்பவர் என் கார்டைச் சாவகாசமாகப் பார்த்து விட்டு, ''இதற்கு 4-ம் எண் கவுண்டரில் பணம் கட்ட வேண்டும்'', என்னும் போது...

நவநீதகிருஷ்ணன் அம்மையப்பன்

ஹோட்டலில் சிறிய பிளேட்டில் பெரிய ரோஸ்ட் (ஸ்பெஷல்) சர்வர் கொண்டு வந்து, பிறகு அதை எவ்வளவு பக்குவமாகப் பிய்த்தாலும் டேபிள் மீது படும் போது எரிச்சல் வரும்.

கே. எஸ். நாகராஜன், சென்னை-23.

கோவிலில் மௌன குருவாம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் மௌனமாக ஜபிக்காமல் ஊர் வம்புகளைப் பேசுவதைக் கேட்கும் போது...

டி. எஸ். சீதாராமன், கும்பகோணம்.

நூலகத்தில் செய்தித் தாள் பார்த்துக் கொண்டிருக்கும் போது பரிசுச் சீட்டைக் கொடுத்து இதற்குப் பரிசு இருக்கான்னு பார்த்துச் சொல்லுங்கன்னு சொல்பவரைப் பார்த்து...!

திருமதி பங்கஜம் ராஜகோபால், திருச்சி.

வானொலி நிலயத்தின் குறிப்பாகத் திருச்சி நிலயத்தின் அறிவிப்பாளர்களின் தமிழ் உச்சரிப்புக் கொலை ரேடியோவையே உடைத்து விடும் அளவுக்கு எரிச்சலோ எரிச்சலை ஏற்படுத்துகிறது.

வி. ஜார்ஜ், நாகர்கோவில்

தபால் நிலயத்தில் பதிவு தபால் கவுண்டரில் கூட்டம் இருக்கும்பொழுது குமாஸ்தா கவனிக்காதது போல் தொலைபேசியில் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் பொழுது...

கி. ஜானகிராமன், ஆனந்த்.

கல்கியில் தொடர்ந்து வரும் ஒரு தரமான கதையில் — அம்மா, கண்ணம்மா, டார்லிங் என்ற சொற்கள் அடிக்கடிவரும் பொழுது....

கே. எஸ். கலைமணி, சென்னை-7.

வியாழக்கிழமை விடியல் கல்கியை எதிர்பார்த்துக் காத்திருந்து கல்கி இதழ் வந்தவுடன் நான் முந்தி நீ முந்தி எனச் சண்டை போட்டுப்படிக்கத்துவங்கி கடைசியில் நான் அன்றைய கல்கி இதழைப் படிக்காமலே அலுவலகம் செல்லும் போது ஏற்படும் எரிச்சல் மற்றெல்லா எரிச்சல்களையும் ஏப்பம் விட்டுவிடும்.

பி. ஆன்டனிசாமி, கல்பாக்கம்.

பாண்டியில் வேலை செய்யும் என் மனைவியை வாரக் கடைசியில் பார்க்கப்போகபஸ்ஸிற்குக்காத்திருக்கும் போது பஸ் வரும் நேரம் தாண்டினால், லேட்டாக வந்த பஸ் 1 கி. மீ.க்கு ஒரு தடவைநிறுத்தி நிறுத்திப் போகும் போது ஏற்படும் எரிச்சல் இருக்கிறதே...


திருமதி சரோஜா மகாதேவன், சென்னை-33.

''நவராத்திரி சமயங்களில் நம்மைப் பாடச் சொல்லிவிட்டு, பாட்டை யாரும் கேட்காமல் வம்படிக்கும்போது....''

வி. துளசிதாஸ், சேலம்.

அரசு பொது மருத்துவமனையில் நீண்ட நேரம் காத்திருந்து ''வரிசையாய்'' நகருகையில் மருத்துவமனை ஊழியர்களே தங்களுக்கு வேண்டியவர்களை 'நேரடியாக' டாக்டரிடம் அழைத்துச் செல்லுகையில் எனக்கு ஏற்படும் எரிச்சலுக்கு எது மருந்து?

எரிச்சலைக் கொட்டித் தீர்த்துக் கொண்ட இவர்கள் தலா ரூ. 10 பரிசு பெறுகின்றனர். எரிச்சல் அடுத்த இதழில் மட்டும் தொடரும்.







ராஜ் முதலில் அதிர்ச்சியடைந்தான். பின் ஆச்சரியமும் பயமும்.

ராமராவ் அவனைக் கூப்பிடுகிறாரென்றால்...?

அவன் பிறவிக் கலைஞன் — திருடுவதும் கலையென்றால். நிறையக் கொள்ளைகளில் போலீஸ் அவன் அடிச்சுவட்டைத்தொடர்ந்து ஆதாரம் கிட்டாமல் தோற்றிருக்கிறது.

ராவ் அப்படியில்லை.

பெரிய ஜுவல்லரி டிசைனர்.

அவர் அவனைக் கூப்பிடுவதென்றால்.... இது போலீசின் வலை விரிப்பா?

நிறைய யோசித்தான்.

வாடகை பாக்கியும் சில்லறைக் கடன்களும் சிந்தனை வேண்டாம் என்றன.

புறப்பட்டான்.

ராவின் வீட்டுக்கு முன்னாலிருந்த பார்க்குக்கு வந்தான். பெஞ்சில் உட்கார்ந்தான். சிகரெட் பிடித்தான். சுற்றிலும் பார்த்தான்.

பார்க்குக்கு வெளியே தெருவின் நடமாட்டம் தேய்ந்து கொண்டிருந்தது.

யாரும் பார்க்க (சட்டென்று ராவின் வீட்டிற்குள் நுழைந்தான்)வில்லை.

ஹாலில் ராவ் ஈஸிசேரில் சாய்ந்திருந்தார்.

''வாப்பா, ராஜ், உன்னைத் தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன்.''

''என்ன சார், விசேஷம்?''

''அமிர்தலிங்கம்னு ஒரு பணக்காரன் எங்க ஜுவல்லரியில வைர நெக்லஸ் வாங்கியிருக்கான். அதோட மதிப்பு....''



கூட்டுச் சேரக் கூடாது!

எஸ். குமார்

ராஜ் ஒருமுறை கண்ணாடி பார்த்துக் கொண்டான்.

அதுவரை அவன் உபயோகிக்காத நேரோ ஜீன்சும் ஒட்டப்பட்ட தூங்குமீசையும் முகமடர்ந்த தாடியும் கோகோ கண்ணாடியும் அவன் பிம்பத்தை அவனுக்கே அன்னியப்படுத்தின.

பாக்கெட்டிலிருந்தரிவால்வரைத்தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

வெளியே யாரோ ஓர் அவசரக்காரக் கூர்க்கா கதவுகளைத் தட்டி நடந்து கொண்டிருந்தான். அவன் தட்டலும் அதைத் தொடரும் நாய்க் குரைப்பும் ஓயும் வரை ராஜ் காத்திருந்தான்.

பின் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

தெருமுனையில் காலியாக வந்து கொண்டிருந்த ரிக்ஷா இடைமறித்தது.

''வர்றியா, சார்.''

வேட்டைஸ்தலத்தின் அருகாமையிலுள்ள தியேட்டரின் பெயரைச் சொன்னான்.

ரிக்ஷா புறப்பட்டது.

ராஜ் ரிக்ஷாக்காரனை நோட்டமிட்டான். அந்த ஏரியா ஆசாமி இல்லையென்று தோன்றியது.

ரிக்ஷா தியேட்டரின் முன்னால் நின்றது.

ராஜ் பணத்தைக் கொடுத்து விட்டு நடந்தான். ரிக்ஷா திரும்பிப் போய்விட்டது.

பங்களா காம்பவுண்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தான். கட்டிடத்தின் பின்புறம் போய் நின்றான். கட்டிட அமைப்பை ஆராய்ந்தான். ஆர்க்கிடெக்ட் நல்ல நண்பன். மாடிக்கு ஏறிச் செல்ல வசதியாக அமைத்திருந்தான்.

ராஜ் மாடியை அடைந்தான்.

ஹாலில் தூங்கிக் கொண்டிருந்தார், அமிர்தலிங்கம். போர்வைக்குள் அவரை அணைத்துக் கொண்டிருந்தாள் மனைவி.

ராஜ் கொஞ்சம் பயந்தான்.

பின்.

அவர்கள் முகத்தை அணுகி கர்சீஃபால் மயக்க மருந்தை முகர வைத்தான்.

கொஞ்சம் திமிறி மயங்கினார்கள்.

உள்ளேயிருந்த நகைகளனைத்தையும் சுருட்டினான்.

ராய் அடையாளம் சொன்ன நீலவைரம் பதித்த நெக்லஸையும் எடுத்துக் கொண்டான்.

அதுதான் பங்கிட வேண்டிய பொருள். ராயின் குறி. மற்றவை அவனுக்குக் கிடைத்த இன்செண்ட்டிவ்.

வாசற்கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான்.

மறுநாள்.

ராய் அவன் கொடுத்த நெக்லஸைப் பார்த்தார். அதன் நீலக்கல்லை அருவருத்தார்.

''நீ என்னை ஏமாத்தப் பார்க்கிறே!'' என்றார். ''மரியாதையா அந்த நெக்லஸை எடு.''

''இதுதான் அந்த நெக்லஸ்.''

அவர் ஆத்திரமாக அவன் கழுத்தைப் பற்றினார். ஓங்கி அறைந்தார்.

ராஜ் ரிவால்வரை எடுத்து நீட்டினான். பயமுறுத்தினான்.

ராய் அசுர வேகத்தில் அவன் மீது பாய்ந்தார். அவன் லாகவமாக விலகி ரிவால்வரைத் தக்க வைத்துக்கொண்டான்.

''மிஸ்டர் ராய். என்னை நம்புங்க. நான் உங்களை ஏமாத்தலே.''

ராயின் கோபம் அடங்கவில்லை. ''துரோகிப் பயலே, உன்னைக் கொலை பண்ணித் தான்டா என் ஆத்திரம் அடங்கும்.''

அவன் ரிவால்வரை அவரிடம் வீசினான்.

''நீங்க சொன்னதை நான் செஞ்சிட்டேன். என் வேலை முடிஞ்சிப் போச்சி. நீங்க நடந்துக்கிறதைப் பார்க்கும்போது பணத்தை முழுக்க நீங்களே அனுபவிக்க ஆசைப்படறீங்கன்னு தோணுது. ஒழுங்கா என் பங்கை எடுத்து வைங்க. நாளைக்கு காலை வந்து பார்க்கறேன்.''

ராயின் ஆத்திரம் எல்லை மீறியது. கையிலிருந்த ரிவால்வரால் சுட்டார். அவன்....

துடிக்கவில்லை. திரும்பினான்.

''மிஸ்டர் ராய், நான் அஹிம்சா முறையில் கொள்ளை அடிக்கறவன். அந்த ரிவால்வர் பயமுறுத்தப் பயன்படறது. கொலை செய்யறதுக்கில்லே. பத்திரமா வச்சிருங்க. வரேன்.''

வெளியேறினான்.

ராய் துரத்திக் கொண்டு வெளியே வந்தார்.

''ஏய், ராஜ். மரியாதையா அந்த நெக்லஸைக் கொடுத்துடு'' என்று அவர் கத்திய போது.

ஒரு மப்டி போலீஸ்காரர் அவர்களுக்கு நேசக்கரம் நீட்டினார்.

ஸ்டேஷனில்,

ராய் பதறி அழுதார். விஷயம் உளறினார்.

சிறையில் ராய் ராஜைச் சபிக்க;

ராஜ் ராயைத் திட்ட;

ராஜ் கொள்ளையடித்த இமிடேஷன் நெக்லஸையும் பிற போலி நகைகளையும் போலீஸ் கைப்பற்ற. பிரச்னைக்குரிய அசல் நீலக்கல் நெக்லஸூம் தங்க நகைகளும் பாங்கின் ஸேஃப்டி லாக்கருக்குள் வியர்த்துக் கொண்டிருந்தன.


கூட்டுச் சேராக் கொள்கையே நல்லது என்று புரிந்து கொண்டனர் ராய், ராஜ்.





ஹார்லிக்ஸ் எங்களுடைய குடும்ப நண்பன். ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிவரும் என் கணவருக்கு, காலேஜ் மற்றும் டான்ஸ் கிளாஸை முடித்துக் கொண்டு வரும் என் பெண்ணிற்கு, ஸ்கூல் முடிந்து திரும்பும் புட்பால் வீரனான என் பையனிற்கு—ஏன், தினமும் கடைகண்ணி போய் திரும்பும் எனக்கும்தான்—ஹார்லிக்ஸின் துணை ரொம்ப முக்கியம். எங்கள் குடும்பத்தின் நலனிற்காக நான் ஹார்லிக்ஸையே நம்பறேன்.

மால்ட்டட் பார்லி, முழு ஆடைப்-பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையைப்பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை,



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்



போட்டிக்கதை 14

"பகல் கொள்ளைக்காரன் பஞ்சரத்னம் ஒழிக!" வெவ்வேறு வண்ண, வடிவமைப்புக்களில் கொடிகளை ஏந்தி, பிரதான சாலையை அடைத்துக் கொண்டு ஊர்ந்து வந்த அந்த ஊர்வலத்தில், பல்வேறு தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர் இருந்தாலும், பஞ்சரத்னம் ஒழிய வேண்டும் என்பதில் அவர்கள் அனைவரும் ஒரே கருத்தை உறுதியாகக் கொண்டிருந்தனர் என்பதை அவர்கள் எழுப்பிய கோஷம் விசுவரூபம் செய்து காட்டியது!

ஓர் ஓரமாக நின்று கொண்டான் சுகுமார். தான் பஞ்சரத்னத்தைப் பார்க்கச் சென்று கொண்டிருப்பது அக்கூட்டத்திற்குத் தெரிந்து விட்டால், முதலில் தன்னை அக்கூட்டம் ஒழித்து விடுமோ என்ற பயம் அவனுக்கு! பஞ்சரத்னம் ஒழிவதற்கு முன் அவரைப் பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு வேறு!

பஞ்சரத்னத்தின் 'ரத்னு டெக்ஸ்டைல்ஸ்' கடந்த இரு மாதங்களாகக் கனத்த பூட்டுக்களுடன் 'கம்' என்று இருந்து வருகிறது.

போனஸ் தகராறு என்று ஆரம்பமாகி தொழிற்சங்கத் தலைவர்களிடம் போய்விட்டால் பிறகு வேலை நிறுத்தத்தில் தொடங்கி, கதவடைப்பில் 'நிற்கும் தொடர் நிகழ்ச்சி' பிரவாகத்திலிருந்து ரத்னு மில் மட்டும் தப்பித்து விட முடியுமா? இருதரப்புப் பேச்சுவார்த்தைகள், முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் என்ற இழுபறி நிலையிலிருந்து, தொழிற்கமிஷனர், டிரிப்யூனல்கள், அமைச்சர் வரை வந்து, ஏதும் ஆகவில்லை. சட்டமன்றத்தில் மட்டும் சம்பந்தப்பட்ட அமைச்சர், ரத்னு மில் குறித்துக் கவன ஈர்ப்புத்தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்படும் போதெல்லாம், எவ்வளவு முறைகள் அவர் ஆலை அதிபரையும், தொழிலாளர் சங்கத் தலைவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறார் என்பதற்குப் புள்ளி விவரங்களைத் தந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சி புரிந்த காலத்தில் மாநிலத்தில் ஆண்டுதோறும் நிகழ்ந்து வந்த கொலை, கொள்ளை கற்பழிப்பு குற்றங்களைக் காட்டிலும் இப்போது ஒவ்வொன்றிலும் ஐந்தைந்து குறைவாகத்தான் உள்ளது என்று புள்ளி விவரங்களுடன் எதிர்க்கட்சித் தலைவருக்கு முதலமைச்சர் சவால் விட்டுக் கொண்டிருந்தார்.

ரத்னு மில் அதிபர் பஞ்சரத்னம் தம் ஆலையின் கணக்கு, வழக்குகளை விரைவில் முடித்து, எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்த எண்ணி, அதற்காகத் தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு எழுத்தர்கள், கணக்கர்கள் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார்.



ஆறுண்டுகட்கு முன்பே பி. காம். பட்டம் வாங்கி, வாங்கிய பட்டத்தால் வயிற்றைக் கழுவ முடியாது என்றறிந்து, வயது முப்பதை நெருங்க, இனி வழியில்லை என்று ஏமாந்த அவனுடைய வயோதிகத் தந்தை வற்றி யுதிர்ந்துவிட, அவன் தாய் படுக்கையில் வற்றிக் கொண்டுவர, நெற்றியில் ரேகைகளுடனும், காதோரநரையுடனும், பின்மண்டையில் அரை ரூபாய் அளவில் பளபளப்பான வழுக்கையுடனும் வளைய வந்து கொண்டிருந்தசுகுமார், பஞ்சரத்னம் கொடுத்த

விளம்பரத்தினைப் பார்த்து, ஒரு மாதத்திற்கு இருநூறாவது கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் பஞ்சரத்னத்தின் பங்களாவை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

அப்போதுதான், 'அவர் ஒழிக' என்ற கோஷத்தால் அவன் நம்பிக்கையை ஒழிக்கப் பார்த்துக் கொண்டிருந்தது அக்கூட்டம்!

குறுக்குச் சந்தில் புகுந்து, விரைந்து பஞ்சரத்னத்தின் பங்களாவை அடைந்தான் சுகுமார்.

அங்கே... ஏற்கெனவே ஒரு கூட்டம் வெளிக் கேட்டருகே இருந்தது.

''தம்பி, உன்னைப் பார்த்தால் சாதுவாத் தெரியுது. பேசாம வந்த வழியே திரும்பிப் போயிரு! உனக்கு முன்னாடி இங்கே வந்தவங்க எல்லாம் நாங்க சொன்னதைக் கேட்டுத் திரும்பிட்டாங்க! மீறி... இப்போ உள்ளார நீ போகணும்னாலும் போகலாம்!. ஆனால் வெளியே வந்ததும் நீ உன் வீட்டுக்குப் போக முடியாது!'' வான் நோக்கிய இருகூர் மீசை ஒன்று ஓசையெழுப்பியது.

எச்சிலை விழுங்கிக் கொண்டான் சுகுமார்.

''ஏங்க, நான் தப்புத் தண்டா ஏதும் செய்ய இங்கே வரல்லியே? நீங்க உழைச்சுக்கிட்டு இருந்ததைப் போல, நானும் உழைக்கச் சந்தர்ப்பம் கேட்கத்தானே உங்க முதலாளியைப் பார்க்க வந்திருக்கேன்?''

''ரைட்! நீ ஒருத்தன் தான் துணிஞ்சு பதில் பேசியிருக்கே! உழைக்க வந்திருக்கியா இங்கே? கல்யாணம் மண்டபம் கட்டறதும் உழைப்புத்தான், சமாதி கட்டறதும் உழைப்புத்தான்! எங்களுக்குச் சமாதி கட்ட எங்க முதலாளி ஆள் தேடிக்கிட்டிருக்கார். அதுக்குத் தான் நீ இங்கே வந்திருக்கே! நாங்க பல பேரு! எங்க வயித்திலே அடிக்கிற இந்த உழைப்பு உனக்கு வேணும்! இனிமேல உன் இஷ்டம்!'' மீசைக்குக் கீழே அபாய அறிவிப்பாகப் பீடி ஒளிர்ந்தது.

''தம்பி! தெருக் கோடியில இருக்கற ரைஸ் மில் ஓடிக்கிட்டிருக்கா? நீ அந்த வழியாத்தானே வாரே?''

அத்தொழிலாளர் காலனியில் 'பி' டைப் வீடு ஒன்றின் கேட்டில் நின்று கொண்டிருந்த பெண்மணி சுகுமாரைக் கேட்டாள்.

''ஓடுதும்மா!''

''என்ன உதவி செய்வியா தம்பி?'' இன்னும் அரை மணியிலே நெல் அரைக்கிறதை நிறுத்திடுவாங்க. எங்க வீட்டுக்காரரை எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்.... அவர் வரமாட்டார் போலே! சைக்கிள் இருக்குது தம்பி. நெல் மூட்டையைச் சைக்கிளிலே வச்சு மில்லுக்குக் கொண்டார முடியுமா? நானும் கூட வாரேன்! அரைச்சு வீட்டிலே கொண்டாந்து இறக்கிடு தம்பி!''





அருள்வாக்கு

● வேத அத்தியயனம், யோகம், தியானம், பூஜை இவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியசிப்பதால் கிடைக்கிற ஈசுவரானுபவத்தைத் தெய்விகமான ஸங்கீதத்தின் மூலம் நல்ல ராக, தாள ஞானத்தின் மூலம் சுலபமாகவும், சௌக்கியமாகவும் பெற்று விடலாம். இப்படி தர்ம சாஸ்திரம் எனப்படும் ஸ்மிருதியைத் தந்திருக்கும் யாக்ஞவல்கிய மகரிஷியே சொல்லியிருக்கிறார். வீணா கானத்தை அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

'அப்ரயத்னேன' — கடுமையான பிரயாசை இல்லாமலே ஸங்கீதத்தால் மோக்ஷ மார்க்கத்தில் போய் விடலாம் என்கிறார். நம் மனதைத் தெய்விகமான ஸங்கீதத்தில் ஊற வைத்து, அதிலேயே கரைந்து போகச் செய்தால் கஷ்டமில்லாமல் ஈசுவரனை அனுபவிக்கலாம். நாம் பாடி அனுபவிக்கும் போதே, இந்த ஸங்கீதத்தைக் கேட்கிறவர்களுக்கும் இதே அனுபவத்தைத் தந்து விடலாம். வேறு எந்தச் சாதனையிலும் பிறத்தியாருக்கும் இப்படி ஸமமான அனுபவ ஆனந்தம் தர முடியாது. சங்கீதம் என்ற மார்க்கத்தின் மூலம் தங்கள் இருதயங்களைப் பரமேசுவரனிடம் சமர்ப்பணம் செய்த தியாகராஜர் போன்ற பக்தர்கள் சங்கீதமே சாக்ஷாத்காரத்தைத் தரும் என்பதற்குச் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

அம்பாள் தான் பிரம்மத்தின் சக்தி. நாதம் ஈசுவரன் அல்லது பிரம்மம். அம்பாள் சங்கீதத்தில் சொக்கி ஆனந்தமாயிருக்கிறாள் என்றால் பிரம்மமும் சக்தியும் வேறு வேறாக இல்லாமல் ஒன்றிய அத்வைத ஆனந்தத்தையே குறிக்கும். அம்பாள் தன் இயற்கையான கருணையைப் பொழிந்து ஸங்கீதத்தின் மூலம் அவளை உபாஸிப்பவர்களது ஆத்மா பரமாத்மாவிலேயே கரைந்திருக்குமாறு அருளுகிறாள்.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

"ரொம்ப நன்றி தம்பி! இதை வச்சுக்க!'' அப்பெண்மணி கொடுத்த இரண்டு அரை ரூபாய் நாணயங்களை வாங்கித் தன் அன்னையை எண்ணிக் கண்களில் ஒற்றிக் கொண்டான் சுகுமார். அவன் வாழ்க்கையில் அவன் ஈட்டிய முதல் சம்பளமல்லவா அது!

''டேய்... யார்ரா அவன்? யாரைக் கேட்டுக்கிட்டு இந்த ஏரியாவுக்குச் சம்பாரிக்க வந்திருக்கே?''

மின்னலென உள்ளே புகுந்தவனைப் பார்த்து விவரம் புரியாமல் சுகுமாரன் விழித்தான்.

அவன் கையிலிருந்த அந்த இரண்டு அரை ரூபாய் நாணயங்களைப் பறித்துக் கொண்டான் அவன்!

''லட்சுமியம்மா! நெல் அரைக்க ஒண்ணரை ரூபா வேணுமின்னு நான் ரேட்டை உசத்திட்டதினாலே இந்தக் காய்ஞ்ச போன பயலை வச்சுக்கிட்டு என் வயித்திலே அடிக்கிறீங்களா?''

''செங்கோடா! உனக்கு ஒண்ணரை ரூபா தொடுக்க எனக்குப் பிரியமில்லேங்கிறது உண்மை! என் வீட்டுக்காரரை எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன்! இந்நேரமுட்டும் பார்த்தேன்... வரல்லே... கரண்ட் நின்னிடும்னுட்டுத்தான் இந்தத்தம்பியை அழைச்சுக்கிட்டுப் போனேன்!''

''உங்க வீட்டுக்காரரை அழைச்சுக்கிட்டுப் போனா நான் ஏன் இங்கே வர்ரேன்? எங்க சங்கத்து ரேட் இது! இந்த ஏரியாவிலே வேறே ஆளுகிட்டே எந்த வேலையும் யாரும் கொடுக்கக் கூடாது! டேய்! இனிமே இந்த ஏரியாவிலே நுழைஞ்சே உன் உடம்போட திரும்ப மாட்டே! இன்று உன் கூலியிலே பாதி உனக்கு அபராதம்!''

ஒரு அரை ரூபாயைச் சுகுமாரின் முகத்தில் எறிந்து விட்டு வெளியேறினான் செங்கோடன்!

''இந்தா, தம்பி இதை வச்சுக்க! இந்த அபராதம் உனக்கில்ல, எனக்குத்தான்'' சுகுமாரிடம் இன்னொரு அரை ரூபாயைக் கொடுத்தாள் அந்தப் பெண்மணி!

''அம்மா! இந்தப் போட்டோவில உங்க பக்கத்திலே இருக்கிறவரு...'' புகைப்படத்திலிருந்த இருகூர் மீசைக்காரரைக் காட்டிக் கேட்டான் சுகுமார்.

''என் பக்கத்திலே வேறே யாரு தம்பி இருப்பாங்க..., அவரு என் வீட்டுக்காரரு தான்! அவரைத் தெரியுமா தம்பி உனக்கு?''

''இன்னைக்குக் காலேலதாம்மா தெரிஞ்சுக்கிட்டேன்! இப்போ இந்தச் செங்கோடன் அவருக்கு உரிமையான வேலையை நான் பார்த்தேன்னிட்டு என் கிட்டேயிருந்து அபராதம் வாங்கிட்டுப் போனானில்லே, அதே மாதிரி, ரத்னா மில்லிலே வேலைக்கு ஆள் எடுக்கிறாங்கன்னிட்டு, இன்னைக்குக் காலேலே நான் போனப்போ, அந்த மில்லிலே நான் வேலைக்குச் சேர்ந்தா அபராதம் கட்டணும்னு சொன்னாரு... நான் பயந்துக்கிட்டு ஓடிவந்திட்டேன்!''

''அபராதம் கட்டச் சொன்னாரா? எவ்வளவு ரூபா?''

''எங்கிட்ட ஏதம்மா பணம்? எனக்குச் சொந்தமாயிருக்கிறது என் உயிரு ஒண்ணு தான். அதைத்தான் அபராதமா எடுத்துக் கிடுவேன்னிட்டு உங்க வீட்டுக்காரர் சொல் ஞரு! பணம்னு கொடுத்திடலாம். ஆனா... உயிரைக் கொடுத்திட்டேன்னு எங்கம்மா வுக்குத் துணை யாரும்மா? அதான் ஓடிவந் திட்டேன்!

''வாங்கய்யா! அதோ உங்க வீட்டுக் காரரே வந்திட்டாரே! உங்க வீட்டிலேயும் நீங்க சொன்னது போல் கல்யாண மண்டபம் கட்டற வேலை எனக்குக் கிடைக்கல லீங்க...''

''நீ என்னடா பேத்தறே! இங்கே ஏன் வந்தே?''

''நான்தானுங்க நெல்லு அரைக்கக் கூட்டிக்கிட்டுப் போனேன். செங்கோடன் தான் அநியாயமா ஒண்ணரை ரூபா கேக்கி ருனே! அதுக்காக அந்தச் செங்கோடன் இங்கே வந்து கூச்சல் போட்டு, அரை ரூபா வாங்கிட்டுப் போயிட்டான்... அபராத மாம்!''

''அபராதமா? எதுக்கு?''

''அண்ணே! நான் விளக்கமாச் சொல்றே னுங்க. உங்க நெல்லை நீங்க வேணும்னு எடுத்துக்கிட்டுப் போய் அரைச்சுக்கிட்டு வர லாம். கூலிக்கு ஆளை மாத்தலாமா? நீங்க இந்த ஏரியாவிலே இருக்கிற வரை யிலே, அந்தச் செங்கோடன் கேட்கிற கூலியைக் கொடுத்து அவர்கிட்டேதான் அந்த வேலையைக் கொடுக்கணும்...''

''நல்லாயிருக்கே நியாயம்! எங்க வீட்டு நெல்லை நான் யாரை வச்சு அரைச்சா அவனுக்கு என்ன? அதுக்காக உழைக்காமலே அரை ரூபாயைத் தட்டிப் பறிச்சுக்கிட்டுப் போயிடறதா? இந்தப் பழனிச்சாமியைப் பங்கறைப் பயல்னு நினைச்சுப்போட்டானு?''

''அ ண் ணே, பழனிச்சாமியண்ணே! கோபப்படாம, நான் சொல்றதைக்கொஞ் சம் கேளுங்க! காலேலே நீங்க என்கிட்டே என்ன சொன்னீங்களோ அதையே தான் செங்கோடனும் எங்கிட்டே சொல்லியிருக் காரு... வார்த்தைகள் தான் வேறே!'

''உங்க கோரிக்கைகளை வச்சு நீங்கஸ்டிரைக் செய்யற போது, உங்க முதலாளிகிட்டே நான் வேலை பார்க்கிறது நியாயம் இல் லேன்னு, நீங்க முதலாளியா இருந்து, ஒண்ணரை ரூபாக் கூலிகேட்டுச் செங் கோடன் வேலை நிறுத்தம் செய்யறபோது அந்த வேலையை நான் செய்யறது மட்டும் எப்படி நியாயமாகும் அண்ணே! அரை ரூபா அவரு வாங்கிட்டுப் போனது மட்டும் எப்படி அநியாயமாகும்?''

விரைந்து வெளியேறிய குமாரனையே வெறித்துப் பார்த்த நிலையில் நின்று கொண் டிருந்த பழனிச்சாமியின் முகத்தைப்பார்த்து நின்று கொண்டிருந்தாள் அவன் மனைவி முறுவலித்தபடி!

படுக்கையின் ஓர் அங்கமாகிக் கிடந்த தன் அன்னையின் வற்றிய கரத்தில் அந்த ஒரு ரூபாயை வைத்தான் குமார்.

''என் முதல் சம்பளம் அம்மா! பெரிய போராட்டத்துக்குப் பின்னாலே சம்பாதிச் சது!'' என்றான் அவன்.

மாமனிதன் யார்?

இந்த 1983—ஆம் ஆண்டில், ஆணோ பெண்ணோ எத்தனையோ மனிதர்களைப் பற்றி நாளிதழ்களில் எத்தனையோ செய்திகளைப் படித்தீர்கள். இவர்களில் யார் மிக அதிகமாக உங்கள் மதிப்பில் உயர்ந்திருக்கிறார்? ஏன்? கீழே உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப் புங்கள். பிரசுரமானால் பரிசு உண்டு. தவிர அதிகபட்ச வோட்டு அடிப்படை யில் 1983—ம் ஆண்டின் மாமனிதர் தேர்ந்தெடுக்கப்படுவார். முடிவு தேதி: டிசம்பர் 26. உறையின் மேல் 'மாமனிதர்' என்று குறிப்பிடவும்.

என் கருத்தில் 1983—ஆம் ஆண்டின் மாமனிதர் :

....

காரணம்:

என் பெயர் : ....

விலாசம் : ....

....

நாங்கள் பயிர்த்தோழில் புரிய குறைந்த
வட்டியில் கடனுதவி, தரமான விதைகள்,
இரசாயன உரம் போன்ற இடுபோருட்கள்
நியாயவிலையில் குறித்த காலத்தில்
கிடைக்கிறதே, எப்படித்தெரியுமா!
கிராம விவசாய சேவைக்கூட்டுறச் சங்கங்கள்
தேவையறிந்து சேவை செய்கின்றன.



எங்கும் எதிலும் கூட்டுறவு
வளம் போங்கப் போலிவதும் கூட்டுறவு.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

''நீ என்ன சொல்றேன்னே எனக்குப் புரியல்லே... சரி... காலையிலே இந்தக் கவர் வந்தது!''

தாய் நீட்டிய கவரை வாங்கிப்பிரித்துப் படித்த சுகுமார் வாய்விட்டுச் சிரித்தான்.

''பயப்படாதேம்மா! எனக்கு ஏதும் ஆயிடல்லே! நான் நார்மலாத்தான் இருக்கேன்! இனிமே எனக்கு மாசாமாசம் அபராதம் அம்பது ரூபா தர அரசாங்கம் ஒத்துக்கிட்டிருக்கு!''

''அபராதமா? அரசாங்கமா?''

''ஆமாம்மா! நான் பட்டம் வாங்கி ஆறு வருஷம் ஆயிட்டது. இந்த ஆறு வருஷத்தில எனக்கு ஒரு வேலை கிடைக்கிற மாதிரி சூழ்நிலையை உருவாக்க முடியலேங்கிறதை அரசாங்கம் ஒத்துக்கிட்டு, அதுக்குத் தண்டனையா இனிமே ஒவ்வொரு மாசமும் எனக்கு ஐம்பது ரூபா அபராதம் தரப்போகுதும்மா அரசாங்கம்!'' தொடர்ந்து சிரிக்க ஆரம்பித்த, தன் மகனை நிறைவுடன் பார்த்தாள் அந்தத் தாய்! தன் மகனுக்கு ஏதும் ஆகிவிடவில்லை என்ற நிறைவா? இனி மாதந்தோறும் ஐம்பது ரூபாய் நிச்சயம் என்கிற திருப்தியா?

''ஏண்டா சுகுமார்! அரசாங்கத்திலே அப்பப்போ சம்பளத்தை உசத்தற மாதிரி இந்த அம்பது ரூபாயை எழுபத்தஞ்சு, நூறுன்னு உசத்துவாங்களா?''

''நிச்சயம் உசத்துவாங்கம்மா! கொஞ்சம் பொறுத்துக்க! தேர்தல் வரட்டும்!'' மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தான் சுகுமாரன்!

வாரம் ஒரு புத்தகம்

கண்ணீரில் முடியும் காதல் கதை



இந்துமதியின் இந்த நாவலுக்கு, பாரதியாரின் பாடல்வரி ஒன்று தலைப்பு—''சின்னஞ்சிறு கிளியே''. ஆனால் இத்தலைப்பு குறிப்பிடுகிற மாதிரி, இது ஒரு குழந்தையின் கதை இல்லை; குழந்தைத்தனமான கதையும் இல்லை.

இன்னும் சில இல்லைகள்; பாராட்டுக்குரிய இல்லைகள்:

பெரும்பாலும் திரையுலக மாந்தர் உலவும் கதையாக இது இருப்பினும் மலிவான சினிமாத்தனம் இல்லை.

ஆசிரியையின் முந்திய கதைகள் சிலவற்றில் வீசிய தற்கால அமெரிக்க நாவல்களின் வாடை இதில் இல்லை.

நம்ப முடியாத நிகழ்ச்சிகள் இல்லை.

கதைப் பின்னலுக்கு இன்றியமையாத சிக்கல்கள் இதிலே உண்டுதான் என்றாலும், சொல்லும் விதத்திலோ நடையிலோ இல்லை.

அங்கங்கே ஆங்கிலச் சொற்களும் வாக்கியங்களும் கலந்திருப்பினும் அவசியத்துக்கு அதிகமாய் இல்லை.

மூன் தலைமுறை நடிகர்களான மது சூதனனும் சித்ராவும், கண்டதுமே காதல் கொண்டு கலப்புத் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஒரே மகன் ஸ்ரீநாத் பெற்றோரைப்போலவே காதல் வயப்பட்டு ஜூலி என்ற பெண்ணை மணக்கத் துடிக்கையில், தாயை மீறித் தந்தை குறுக்கிட்டு இளங்காதலர்களைப் பலவந்தமாய்ப் பிரிக்கிறார். ஆற்றாமையால் கஞ்சாப் புகையில் தன்னை மாய்த்துக் கொள்கிறான் இளைஞன். காதலால் அவனுடன் கூட முடியாத பெண் சாதலால் கூடுகிறாள்.

வேண்டுமென்றே மிகச் சிக்கனமாய் நான் கொடுத்துள்ள இந்தச் சுருக்கத்தைக் கண்டு, ஒரு சிறுகதை போலல்லவா தோன்றுகிறது எனக் கருத வேண்டாம். வீண் வளவளப்போ பக்கவாட்டுக்களோ இல்லாமல், 224 பக்கங்களில் வேகமாகவும் சீராகவும் ஓடும் முழு நாவலே இது. எழுபது வயதை எட்டியுள்ள நானே, இந்துமதியின் இந்த நாவலை ஒரு பிற்பகல் பொழுதில் தொடர்ந்து படித்தேன். படித்தபின் அதன் பதிவு மனத்திலே நிறைந்தது; அத்துடன் அதன் இறுதிக் கட்டம் ஒரு சோக இசையாய் நெஞ்சிலே இழைந்தது.

—சுந்தரா

(வெளியீட்டோர்: சங்கீதவாணி, 91, வி.எம். தெரு, மயிலாப்பூர், சென்னை—4. விலை ரூ. 14.50.)

7

கோடியூரிலும் ஜோலார்பேட்டை யிலும் பீடி சுற்றும் தொழிலாளிகள் அதிகம். அவர்களில் பலருக்கு ஹரியிடம் அறிமுகம் உண்டு. ஒருவர் மாற்றி ஒருவ ராகப் பீடித் தொழிலாளிகள், ரயில்வே ஊழியர்கள், பார்சல் பேட்டைக்காரர்கள் என்று ஹரியைப் பார்க்க வந்தார்கள்.

ரயில்வே ஆஸ்பத்திரியில் ஹரியின் படுக்கையைச் சுற்றி அன்று இரவும் மறு நாள் பகலும் யாராவது இரண்டு மூன்று பேர் இருந்து கொண்டேதான் இருந்தார்கள். ஹரிக்கு முழங்கையில் ஒரு கட்டு; முதுகில் இரண்டு கட்டு.



''ஒண்ணும் ஸீரியஸ் இல்லே மேன்! ஆறு முதுகுலே விழுந்த குத்து ஸ்க்ருட்ரைவர்லே விழுந்தது. ஒன் ஒடம்பு தாங்கிக்கிச்சு... இன்னும் ஒரு வாரத்திலே வூட்டுக்குப் போயிடலாம்.''

டாக்டர் நர்ஸின் கையிலிருந்த ஸிரிஞ்சை வாங்கித் தாமே அவனுக்கு ஊசி போட்டு விட்டுத் தேறுதல் சொன்னார்.

''நிதானமாவே போவேன், சார்! ஆறு ஆட்டிலே பொரு வளர்க்கறேன். அதுங்களுக்குத்தான் இனி இல்லாமே பூடும். அதனுலே எவ்வளவு ஜல்தியா அனுப்பறீங்களோ அவ்வளவு நல்லது.''

''ஆல்ரைட்... ஒனக்காக இல்லேன்னுலும் ஒம் பொருவுங்களுக்காக உன்னைச் சீக்கிரமா அனுப்பறேன்...'' என்று சிரித்துக் கொண்டே போனர்.

மத்தியானம் கால் சூப் வைத்துச் சாப்பாடு எடுத்து வந்தாள் ஜெயா.

''இந்த வேகற வெய்யில்லே என்னுலே ஒனக்குச் சிரமம் கொளந்தே!''

ஜெயாவை அவளது அம்மா செண்பகம் கொளந்தே என்று கூப்பிடுவாள். அது ஹரிக்கு அப்படியே தொற்றிக் கொண்டது.

''இந்தச் செரமத்தை மட்டுமா வச்சிருக்கே. எத்தினி பேருக்கு நான் பதில் சொல்லிச் சொல்லி ஓயறது. ஓட்டலுக்கு வர்ற அத்தினி பேரும் ஹரி ஏன் போலீஸ்லே ரிப்போர்ட் கொடுக்கலே.. ரிப்போர்ட் கொடுக்கலேன்னு கேட்டு என் உசிரை வாங்கறுங்க!''

''நீ இன்னு சொன்னே?''

அவள் ரொட்டி வைக்கும் ஷெல்ஃபின் மீது டிபன் கேரியரை வைத்தாள். ஷெல்ஃபைத் திறந்து ஒர் எவர்சில்வர் தட்டை எடுத்தாள். அதில் ஜக்கில் வைத்த தண்ணீரில் கொஞ்சம் ஊற்றி அதை அலம்பிக் கொண்டே பதில் சொன்னுள்.

''எங்கிட்டே கேக்காதீங்க. எல்லாத்தையும் அவரையே போய்க் கேளுங்கன்னு சொல்லிட்டேன்! சண்டை புடிக்க ரெண்டு விஷயம் இருக்கு. சூப் ஆறிடும்... மொதல்லே சாப்பிடு'' என்று நறுக்காகக் கத்தரித்தாள். அவன் இடது கையால் ஸ்பூன் பிடித்து ஒரு வாய் சூப் அள்ளிக்குடித்தான்.

''இன்னு கொளந்தே காரமே ஒறய்க்கிலியே...''

''நீயும் ஒங்க அண்ணுத்தையும் சேந்துகினு காரசாரமாத் துன்னுட்டு ஊர்லே ஒவ்வொர்த்தரையா சண்டை வலிச்சிகினு வாங்க... நானும் காரசாரமா சூப் வச்சு நீங்க கத்திலே குத்துப்பட்டு ஆஸ்பத்திரிலே படுத்துக்கினிங்கன்னு சோறு எடுத்தாரேன்!''

ஸ்பூனைத் தட்டு மேலேயே வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

''சாப்பிடச் சொல்லிட்டுத் தொடங்கினதுமே சண்டையை ஆரம்பிச்சுட்டியே...''

''பின்னே... டாக்டர்தான் இப்ப காரம் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லிக்கிருரே... கேக்கறியே. இந்தா... ஒணும்னு... உப்புத்தூளு கொஞ்சம் எடுத்தாந்து இறேன் போட்டுக்கோ'' என்று டிபன் கேரியரின் மேல் அடுக்கில் பொட்டலம் கட்டி மடித்து வைத்திருந்த உப்புத் தூளில் கொஞ்சம் அள்ளி அவனிடம் நீட்டினுள். ''த... தல்லோ போடு... ஆங்.. போதும்.''

அவன் ஸ்பூனில் கலந்து கொண்டான். மெதுவாக அவன் சாப்பிடச் சாப்பிட அவள் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

ஜெயாவிடம் ஹரிக்குப் பிடித்த அம்சங்கள் நிறைய உண்டு. அதில் ஒன்று. அவள் எப்போது பார்த்தாலும் சுத்தமாகப் பளிச்சென்றிருப்பது. அவள் தன்னைக் கவர்ச்சியாகக் காட்டிக் கொள்ள எந்த விசேஷ அலங்காரமும் செய்து கொள்வதில்லை. தலையை வாரி முகம் கழுவி ஒரு வாயில் சேலையைக் கட்டிக் கொள்வாள். நெற்றியில் ஒரு குங்குமம். பௌடர் கூடத் தோன்றினுல் தான் பூசிக் கொள்வாள்.

இப்போது பூசியிருந்தாள். மென்மையான நறுமணம். இந்த நேரத்தில் அவளைப் பார்க்கும் போது ஒரு சுதந்திரமாய்ப் பறக்கும் சிட்டுக்குருவி மாதிரியிருந்தது. நாளைக்கோ நாளை மறுநாளோ வில்வம் சிறையிலிருந்து வரப் போகிறுன். நீ அல்லது நான் என்ற வெறியோடு அவன் காசியைக் குறி வைத்துக் கொண்டிருக்கிறுன் என்று ஹரி கேள்விப்பட்டிருந்தான். ஹரிக்கு லேசான கவலை எழுந்தது. எந்த வகையிலும் காசி பாதிக்கப்படுவான். அப்போது இவள் எங்கே போவாள்?

''அண்ணுத்தை வந்து சாப்டுட்டுப் போச்சா கொளந்தே?''

கேரியர் அடுக்கிலிருந்து தோல்சீவி நறுக்கி வைத்திருந்த மாம்பழத் துண்டுகளை எடுத்துத் தட்டில் போட்டான்.

பழனியில் மட்டும் 1 பைசா, 2 பைசா, 3 பைசா காசுகளுக்கு மதிப்பு இருக்கிறது.

பழனிக்கு வரும் பக்தர்கள் அங்குள்ள பிச்சைக்காரர்களுக்கு ''பிச்சை'' போட இந்த பைசா காசுகளை, குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு ஒரு விலை வைத்துச் சிலரிடம் வாங்குகிறார்கள். செல்லாத பைசா காசுகளை ''பிச்சை''யாகப் பெறும் பிச்சைக்காரர்கள், அவற்றை மறுபடி செல்லாக் காசுகளை விற்கும் நபர்களிடமே விலைக்கு விற்று விடுகின்றனர்!

—கமுதி திராவிடமணி.



''அப்படியே ஸ்பூன்லே எடுத்துச் சாப்பிடு. ஓங்க அண்ணுத்தை சாப்பிட, வர்றப்ப வாங்கியாந்தாரு. அவருதான் தோலைச் சீவி வச்சாரு. குமாவி.''

ஹரி ஸ்பூனில் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். பின்பு கையலம்பத் தண்ணீரையும் வாய் துடைக்கத் துண்டையும் நீட்டினுள்.

''சரிம்மா கொளந்தே... சாப்டுட்டேன். ஒன் சண்டையை ஆரம்பி.''

''நீ ஏன் போலீஸ்காரங்க ரிப்போர்ட் குடுக்கச் சொன்னு மாட்டேன்னுட்டியாம்?''

''குடுத்திருந்தா இன்னு ஆவும்னு நெனக்கிறே?''

அவனுக்குக் கோபம் வந்தது.

''அந்த ரவுடிப் பசங்க கடையேறி வந்து கலாட்டா பண்ணிக்கருங்க. இன்னு ஆவும்னு கேக்கறியே... ஓட்டல் தெருவிலே அத்தினி ஜனம் நின்னுதே. ஆராவது வந்து சாட்சி சொல்ல மாட்டாங்க...?''

ஹரி அவள் கோபத்தை ரசித்து அவளை வேடிக்கை பார்த்தான். பின்பு மெதுவாகச் சொன்னுன்.

''அவனுங்க எல்லாத்துக்கும் துணிஞ்சிட்டாங்க கொளந்தே. அதுனுல தான் பட்டப் பகல்லே கடையிலே நொளஞ்சி அடிக்கிற அளவுக்குப் பூட்டாங்க. நான் காசி அண்ணுத்தையைத் தடுக்கிற மாதிரி புடிச்சுக்கினு நிக்கல்லேன்னு அவுருரெண்டு பேரைத் தீர்த்துட்டு இருப்பாரு. இப்பிடியே இது எதுலே போயி முடியும்?''

காசியின் கோபத்தைக் குறித்து நன்கு அறிந்த ஜெயா அதன் விளைவுகள் என்னவாயிருக்கும் என்ற கற்பனையில் கண் உருள உருள விழித்துக் கொண்டு ஹரியையே பார்த்தாள்.

''கேஸுலே அவுனுங்க எதுத்து வாதாடுவானுங்க... அட... அப்படியே ஜெயில் தண்டனை கெடைக்குது, கதை அத்தோட முடியுமா? பகையும் வெறுப்பும் வளரும். காட்டிலே நெருப்புப் புடிச்ச மாதிரி ஒண்ணைத் தொட்டு ஒண்ணு வம்பு வளர்ந்துக்கினே போகும்...''

ஜெயா கவலையோடு குறுக்கிட்டாள்.

''அதுக்கு? கடையேறி அடிச்சதுக்கே இவுனுங்க ரிப்போர்ட் குடுக்க மாட்டேனுட்டாங்க; பயந்துட்டானுங்கன்னு நெனச்சி தனியா வர்றப்ப மடக்கினுனுங்கன்னு...''

ஹரி சிரித்தான்.

''அவனுங்களுக்கு அந்தத் தைரியம் இனிமே வராது. போலீஸ் அவங்களைப்பாத்திருக்குது. நெறைய ஜனங்க பாத்திருக்காங்க... எனக்கோ காசி அண்ணுத்தைக்கோ ஏதாவது நடந்தா அவங்கதான் பண்ணுனுங்கன்னு புரூப் ஆயிடும்... அது ஒரு பக்கம் இருக்கட்டும். அவுனுங்களும் மனுசங்கதானே கொஞ்சம் யோசிக்கட்டுமே.... அதுக்கு ஒரு சான்ஸ் தர வாணும்?''

ஜெயா அவன் என்ன சொன்னுன் என்பதை நறுக்கென்று புரிந்து கொண்டாள்.

கொலைவெறியும், பழிவாங்கலும் உறுமி மோதுகின்ற அந்த ஜங்ஷனில் அதில் சற்றும் சம்பந்தப்படாத ஆயிரக்கணக்கானவர்களின் மனிதத் தன்மைக்கு அவன் ஒரு மாதிரி காட்டுகிருன். இது அந்த ரவுடிகளுக்குப் புரியுமா?

அவள் வாய் திறக்குமுன் அவள் கேட்கவிருந்த கேள்வியைப் புரிந்து கொண்டவன் போல ஹரி பதிலளித்தான்.

''அவுனுங்களுக்கு இது புரியாதுன்னு நெனக்கிறியா கொளந்தே... நீதானே சொன்னே. ஓட்டலுக்கு வந்தவங்கல்லாம் நான் ஏன் ரிப்போர்ட் குடுக்கல்லேன்னு கேட்டாங்கன்னு. ஒன்னைக் கேட்டவனுங்க அவுனுங்களைக் கேக்காமயா பூடுவானுங்க.''


அவள் ஹரியையே பார்த்தாள்.

''அவங்களே கேக்கட்டும். அப்பாலகூட அவுங்களுக்கு ஒறைக்கலேன்னு இன்னொரு சான்ஸ் வேணும்னுலும் எடுத்துக்கட்டும். என்னைத் தாக்கினவங்க யாருன்னு எனக்கு நல்லாத் தெரியும். ஆனு அவங்களை எதுத்து நான் ரிப்போர்ட் குடுக்கவும் மாட்டேன். பழிக்குப் பழி வாங்கவும் மாட்டேன்.''

ஜெயாவின் கண்களில் குபுகுபுவென்று கண்ணீர் பெருக்கெடுத்தது.

''இதிலே பெரிய மனுஷத்தனம் ஒண்ணும் இல்லே கொளந்தே! பழி வாங்கணும்னு நெனைக்கிறது பலவீனமானவங்களுக்குத் தான் வருது. இவ்ளோ பெரிய ஒடம்ப வச்சுக்கிட்டு நான் ஏன் பழி வாங்க நெனைக்கணும். நீயே சொல்லு.''

ஜெயாவுக்குச் சிலிர்த்தது. முகத்தில் வழிந்த கண்ணீரை முந்தானைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். அவன் ஜெயா



★ ஆங்கிலப் பெருங்கவி மில்டன் தாம் யாத்த அத்தனை கவிதைகளையும் ஒரு வரி விடாமல் எப்போது சொல்லச் சொன்னாலும் சொல்வாராம்.

★ ஜூலியஸ் சீசர் தம் படை வீரர்களில் முக்கியமான 1000 நபர்களின் பெயர் நினைவில் வைத்திருந்தாராம். பெயர் சொல்லி அழைப்பாராம்.

★ அமெரிக்க தாவரவியல் நிபுணர் டாக்டர் ஹே 25 000-க்கும் மேற்பட்ட தாவர வகைகளின் பெயர்களை ஞாபகத்தில் வைத்திருந்தார்.

- வி. பாலகிருஷ்ணன்

வின் கண்ணீரையும் அது துடைக்கப்பட்டதையும் பரிவோடு பார்த்தான்.

''அப்புறமா இன்னொரு சண்டை புடிக்கணும்னியே. அதை ஆரம்பி.''

''ஆமா... நீயும் ஒங்க அண்ணாத்தையும் சேர்ந்துக்கிணு ஏன் எனக்கு மாப்பிள்ளை பாத்துக்கிட்டுத் திரியிறீங்க?''

ஹரியின் முகம் தெளிவாயிற்று.

''ப்பூ... இதானா விஷயம்? நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன் ஒனக்கு வயசு ஆய்ப் போச்சு. நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு அளகா குடும்பம் நடத்தறதைப் பார்க்கணும்னு எங்களுக்கெல்லாம் ஆசை இருக்காதா?''

''ஆசைப்படறதிலே தப்பு இல்லே. தேடறதிலே தான் தப்பு இருக்கு!''

ஜெயா அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை. ஹரி துணுக்குற்றான். இவள் எதைச் சொல்ல வருகிறாள்? தேட வேண்டாம் என்றால் என்ன பொருள்?

இருவரும் அமைதியாகி விட்டனர். அதற்கு மேல் சொல்லப் போவதில்லை என்று அவள். அதன் பொருள் என்ன என்று ஒரு பெண் உள்ளத்தின் ஆழத்தில் குதித்து இதுவா அதுவா என்று தேடித் துழாவிக் கொண்டு அவன்.

அந்த அறையின் ஜன்னல் மீது அதன் கம்பிகளின் வெளியே தெரிந்த நீலவானத்திலிருந்து முளைத்து வந்த மாதிரி ஒரு சின்னஞ் சிறிய மஞ்சள் குருவி சிவ்வென்று பறந்து வந்து ஒரு கம்பி மீது உட்கார்ந்தது. தன் மணிக்கண்களைச் சாய்த்துச் சாய்த்து அந்த அறையையும் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தது.

பின்பு கிக்கிட்... கிக்கிட் என்று இரண்டு மூன்று முறை இனிமையாகக் கூவிவிட்டு விர்ரென்று உள்ளே பறந்து வந்தது. அறைக்குள் தன் சிறகுகள் படபடக்க இடமும் வலமுமாக இரண்டு ரவுண்டு வந்தது. அதற்குப் பிறகு நேற்று காசி கொண்டு வந்து சுவரிலிருந்த ஆணியில் மாட்டியிருந்த பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியின் மீது படபடவென்று சிறகடிக்க ஏறிற்று.

ஜெயாவும் ஹரியும் அதையே பார்த்தனர். இருவர் மனசிலும் வேறு யோசனை கனத்தது.

கிக்கிட், கிக்கிட் என்று கத்திக் கொண்டே அது மீண்டும் மீண்டும் கொத்திற்று. கண்ணாடியைப் பிடித்திருந்த கம்பி ஆடத் தொடங்கிற்று. எங்கே அது கீழே விழுந்து விடுமோ என்று பயப்படுகிற மாதிரி ஒரு கடிகாரப் பெண்டுலத்தைப் போல் இடமும் வலமுமாக வேகமாக ஆடிற்று.

''உஷ்'' என்று அதை ஒட்டிவிடுவது போல் கையை ஓங்கினாள். அது நகர்வதாக இல்லை. ஜெயா எழுந்து கைவீசிக்கொண்டு அதை நெருங்கினாள்.

கிக்கிட், கிக்கிட் என்று இருமுறை கத்திவிட்டு அது பறந்தது. அந்த அசைவில் அவன் மௌனம் கலைந்தது.

''தேடறதுலே என்ன தப்பு கொளந்தை''

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''இல்லாததைத் தானே தேடணும். இருக்கறதை எதுக்குத் தேடணும்?'' என்று நறுக்கென்று கேட்டாள்.

ஏதோ புரிகிறமாதிரி இருந்தது ஹரிக்கு. 'சொல்வதை வெளிப்படையாக மனசைப் பிட்டு எப்போதும் பேசுவது போல் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்ல மாட்டாயா ஜெயா' என்று அவன் மனசிற்குள் தடுமாறினான்.

''சொல்றது எனக்குப் புரியலே ..''

ஜெயா அதற்கு மேல் பேசவில்லை. டிபன் கேரியரை எடுத்து பிளாஸ்டிக் பைக்குள் வைத்துக் கொண்டாள்.

''நான் பொறப்படறேன்...'' என்று அறை வாசலில் கழற்றி விட்டிருந்த செருப்பில் காலை மாட்டிக் கொண்டு விடைகேட்டாள்.

''சொல்ல மாட்டியா கொளந்தே?''

ஜெயா திரும்பி அமைதியாக அவனைப் பார்த்தாள்.

''ஒனக்குப் புரியல்லேன்னா ஒங்க அண்ணாத்தையைக் கேளு...'' என்று பளிச்சென்றுசொல்லிவிட்டுத்திரும்பிப்பார்க்காமல் வெளியேறினாள் ஜெயா.

'அண்ணாத்தையைக் கேட்பதா?'

ஹரிக்கு இப்போது பளிச்சென்று புரிந்தது.

(தொடரும்

ஏதேது நம்நாடு தேவலாம் போலிருக்கே!

திருடு போய்விட்ட தனது சைக்கிள் பற்றிப் புகார் செய்ய ஜாம்பியாவிலுள்ள காவல் நிலையத்திற்குஒருவர் வந்தார். வந்தவரைக் காவல் நிலைய அதிகாரி பொருட்படுத்தாமல் ஏதோ செய்து கொண்டிருந்தார்.

புகார் செய்ய வந்தவர் அலுத்துப் போய்த் திரும்ப, சிறிது நேரம் கழித்து காவல் நிலைய அதிகாரியும் வெளியே வந்தார்.

வராந்தாவில் வைத்திருந்த அவருடைய சைக்கிளைக் காணவில்லை.

புகார் செய்ய வந்தவரே கோபத்தில் அந்தச் சைக்கிளைத் திருடிக் கொண்டு போய் விட்டார்!

—ஏ. நிர்ச்சலாதேவி.

ஆதாரம்: நியூடைம்ஸ்.





வட்டமேஜை

● அட்டைப்படம் அதியற்புதம் —புகைப் படச் சிறப்பிதழுக்காகத் தராக பதில்கள் பகுதியைக் கபளீகரம் செய்தது அநீதி.
சென்னை—61. கே. நிர்மலா.

*

● ஜெயமன்மதனின் குதிரை ரேஸ் பாணி விமர்சனம் முடிந்ததும் அடுத்து பொங்க லுக்கு ஜல்லிக்கட்டு பாணியில் விமர்சனம் எழுதுவார் என்று எதிர்பார்க்கலாமா?
அயன்புரம். த. சத்தியநாராயணன்.

● ஆரவாரமில்லாமல் அமைதியாகத் தேசத் தொண்டும், இலக்கியத் தொண்டும் புரிந்து எளிமையாக வாழ்ந்து மறைந்த மங்கையர் திலகம் திருமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி அவர்களைப் பற்றி ஆசிரியர் கி. ராஜேந்திரன் அவர்கள் எழுதிய கட்டுரை நெஞ்சைத் தொடும்படி அமைந்துள்ளது.
சென்னை—4. டாக்டர் ந. சுந்தரமூர்த்தி.

● புகைப்படச் சிறப்பிதழ் பிரமாதமாய் இருந்தது சரி. ஆனால் சிறுகதைகளுக்கு அற்புத மான புகைப்படங்களை எடுத்தளித்தவர் களின் பெயர்களைக் குறிப்பிடவில்லையே?
வேலூர். கமலா.

[கவனக்குறைவால் விட்டுப்போயிற்று வருந்து கிறோம். உறவு சிறுகதையானால் -
திரு. எச்.வி. ராமச்சந்திரன்
ரேஸ் ரேஸ் கரேஷ் - திரு. எச்.வி. ராமச்சந்திரன்
பெற்றவள் - திரு ஆர். ராமமூர்த்தி

தவிர 'அந்து பிலிம் முந்துகிறது' கட்டுரையின் இறுதி யில், 'கறுப்புப் புள்ளிகள் இருப்பதாகவும் லாரியில் அலட்சியமாகத் தூக்கிப் போடுவதாகவும் தெரிவிக்கப் பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தக்க பதில் தந்தார் ராதா கிருஷ்ணன்' என்றிருக்க வேண்டும். அச்சில் உள்ளது போலல்ல.
—ஆர்.]

● பிலிம் வேகத்தை ASA ((American Standards Association) என்றுதான் குறிப்பிடுவார்களே தவிர, சாருகேசி குறிப் பிட்டுள்ளது போல் ACA என்று அல்ல.
மதுரை—1 டி. ஆர். சங்கரநாராயணன்.

● புகைப்படங்கள் பலவிதம் பகுதி சும்மா சொல்லக்கூடாது ஏ.கிளாஸ். பல்வேறு வித மான புகைப்படங்களுக்கு சாம்பிள்களும் கச்சிதமான விளக்கங்களும் ரொம்பப் பயனுள்ளதாயும் ரசிக்கும்படியும் அமைந் திருந்தன. அதிலும் புரூஸ்லீயின் நிலைகுத்திய இயக்கமும் சாரியின் செய்திப்படங்களும் பிரமாதம் போங்கள்.
பம்பாய் ராகவன்

● கல்கி 'புகைப்படச் சிறப்பிதழ்' வியப் பில் ஆழ்த்தும் அற்புதமாக அமைந்து விட்டது. பொருத்தமான அட்டைப்படம்! புதுமையாக இருந்ததுடன், சிறப்பிதழின் சிறப்பை அட்டைப்படமே நன்கு பிரதி பலித்து விட்டது!
குத்தாலம். க. ராஜேந்திரன்

● 'மிஸ் அமெரிக்கா' அழகியை வண்ணத் தில் அளித்த முதல் தமிழ்ப் பத்திரிகை 'கல்கி'யாகத் தான் இருக்க வேண்டும்!
குடியாத்தம் (வ. ஆ.) ஆர். அரிகோபி.

● புஷ்பா தங்கதுரை 'திகில் சக்கர வர்த்தி''யாகி விட்டார். மௌலியின் 'ஜிராக்ஸ்' குறிப்புகளும் 'எல்'போர்டுக் குறிப்புகளும் எல்லாமே பிரமாதம்.
காட்பாடி. எம். சி. திலகவதி.

● கடைசிப் பக்கத்தில் வெளியான லாஸ் ஏஞ்ஜல்ஸில் நடக்கவிருக்கும் ஒலிம் பிக்கின் நீச்சல் குளத்தின் கலர் படமே அட்டகாசமாய் இருந்தது.
வேலூர். வேணுகோபால்.

● ''பண நாயகப் பண்பாடு'' தலையங் கத்தைப் படித்து எந்த ஓர் இந்தியக் குடி மகனும் வேதனை அடையாமல் இருக்க முடி யாது.
சென்னை—45. கணபதி சுப்பிரமணியன்.

● நடுப்பக்கங்களில் புகைப்படச் சிரிப்பிதழ் அட்டகாசம் போங்கள்! அதிலும் ஜனதா மீல்ஸ் சோவும் மறதி எம்.ஜி.ஆரும் ரொம்ப டாப்!
ஸ்ரீபெரும்புதூர் கிரிதாரி

● இந்த இதழ் தலையங்கம் உண்மை பூர்வமானது. பணநாயகம் ஜனநாய கத்தை அழித்துவிடுமோ, என்ற நிலை கர் நாடகத்தின் வாயிலாகக் காட்டப்பெறு கின்றது.
சென்னை—15. கோ. கவிவரதன்.

● வாசகர்கள் அனுப்பியிருந்த பொக்கிஷ மாய்ப் பாதுகாக்கப்பட வேண்டிய புகைப் படங்கள், அவர்கள் மட்டுமல்லாமல் நாங் களும் பொக்கிஷமாய்ப் பாதுகாக்கப்பட வேண்டிய புகைப்படங்கள்.
திருநெல்வேலி. எஸ். கணேசன்.

● வையவனின் ஜங்ஷனிலே ஒரு மேம் பாலம் பயங்கர வேகத்தில் செல்கிறது.
விருத்தாசலம். சிவா. ராவணன்.

உலாவரும் உலகம்

பாரீஸை நோக்கி

வாஸந்தி



5

ஜெனிவாவை விட்டுப் பிரிந்து பாரீஸை நோக்கி விமானம் கிளம்பியதும் என்னுள் புதிய பொறுப்பு ஏற்பட்டாற்போல் பிரமையேற்பட்டது. இத்தனை நாட்களும், ரோமிலிருந்து ஜெனிவா வரை நான் ஒரு சாதாரண டூரிஸ்டாகச் சுற்றி வந்ததற்கும் இனிமேல் அடுத்த பதினைந்து நாட்கள் ஃப்ரான்ஸ் தேசத்தில் இருக்கப் போவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு என்று அறிவார்த்தமாகப் புரிந்தது.

ஃப்ரெஞ்ச் அரசாங்கத்தின் விருந்தினர்களாக, இந்திய அரசாங்கத்தின் டெலிகேட்களாக நானும் திரு. ஸந்துவும் செல்கிறோம் என்கிற விஷயம் ஒரு கனமான கோட்டை மாட்டிக் கொண்டாற் போல் என்னைப் பாரமாய் அழுத்திற்று.

திரு. ஸந்துவிற்கு ஏகக் கவலைகள். எங்களை வரவேற்க யாராவது வந்திருக்க வேண்டுமே என்று. பாஷை தெரியாத ஊரில் தனியாக மாட்டிக் கொண்டால் என்ன செய்வோம் என்று பயந்தார். அவருடைய கவலைகள் அனாவசியம் என்று நான் நினைத்துக் கொண்டேன். நாங்கள் 27-ம் தேதி பாரீஸுக்கு வரப் போவதாகப் பல இடங்களிலிருந்து பாரீஸிலிருக்கும் இந்திய தூதரகத்திற்குத் தகவல் தெரிவித்திருந்தோம். இருந்தும் ஸந்துவிற்குக் கவலை — ''பாதி இடங்களில் தூதரகங்களும் உள்நாட்டு அரசாங்க அலுவலகங்களும் ஒத்துழைக்காது. டில்லியில் பார்த்தீர்களே, ஃப்ரெஞ்ச் கான்ஸலேட் ஒன்று சொன்னால், நம் மினிஸ்ட்ரி இன்னொன்று சொல்லும்'' என்று முணுமுணுத்தார்.

'கவலைப் படாதீர்கள். யாராவது நிச்சயமாக வருவார்கள். நீங்கள் என்ன சாதாரண ஆசாமியா?'' என்று நான் சமாதானக் கிண்டல் செய்தேன். எதைப்பற்றிய கவலையும் எனக்கு இருக்கவில்லை.

சார்ல்ஸ் டி காால் விமான நிலையம் பிரும்மாண்டமாக இருக்கிறது. விமானத்துடனேயே இணைத்தாற்போல் ஒரு பெரிய பஸ் வந்து இணைக்கப்பட்டு, எங்களை அழைத்துச் சென்றது நிலையத்தின் பிரதான கட்டிடத்திற்கு. கட்டிடத்தை அடைந்ததும் மறுபடி பஸ்ஸின் ஒரு பகுதி திறந்து கட்டிடத்துடன் இணைந்து வெளிக்காற்று கொஞ்சம் கூடப் படாமல் கட்டிடத்துக்குள் காலடி வைத்தோம்.

டில்லியில் பாக்கி எதற்கெல்லாமோ செலவழிக்கிறார்கள், இந்த வசதி செய்யக் கூடாதோ என்று நான் நினைத்துக் கொண்டேன். எத்தனை குளிரும் காற்றுமாக இருந்தாலும் விமானத்திலிருந்து ஹைதர் கால வழக்கத்துடன் படி இறங்கி நடந்து பிறகு வண்டியில் ஏற நேரிடுகிறது. ரோமில் கூட விமானத்திலிருந்து நேராக நிலையக் கட்டிடத்திற்குள் காலடி வைக்கும் வசதியிருக்கிறது.

டிகால் விமான நிலையத்துக்குள் நீள நடந்தோம் — ஸ்வெட்டரோ கோட்டோ தேவைப்படாமல் வெதுவெதுப்பாக இருந்தது. சட்டென்று ஒரு கொடி தென்பட்டது. ஒரு பெண்மணி பிடித்துக் கொண்டு நின்றிருந்தார். அதில் Welcome to Madame Vaasanthi & Monsieur G. S. Sandhu என்று எழுத்துக்கள் இருந்தன. நாங்கள் முன்னால் சென்று எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். எனக்கு அந்தப் பெண்மணியைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. 'டூட்ஸி' என்ற படத்தில் டஸ்டின் ஹாஃப்மன் போட்ட பெண்வேஷம் மாதிரியே இருந்தார்.

''என் பெயர் ஆன் ரெனோ'' (Ann Renaud) என்று அவர் புன்னகைத்து எங்கள் கைகளைக் குலுக்கினார்.

''வெல்கம் டு பரீ'' என்றார் — (ஃப்ரெஞ்சுக்காரர்கள் பாரீஸை பரீ என்று வேகமாகச் சொல்கிறார்கள்.)

''நான் ஃப்ரெஞ்ச் அரசாங்கத்தின் எக்ஸ்டர்னல் ரிலேஷன்ஸ் மினிஸ்ட்ரியிலிருந்து வருகிறேன். அடுத்து வரும் நாட்களில் உங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு. வாருங்கள்.''



ஆன் வெகு வேகமாக ஃப்ரெஞ்சைப் போலவே ஆங்கிலத்தைப் பேசினார்.

பேச்சைப் போலவே நடையும் வேகம். கவனிப்பும் வேகம் — நடக்கும்போதே இடையில் என்னைத் திரும்பிப் பார்த்து, ''உங்கள் டிரஸ் ரொம்ப அழகாக இருக்கிறது. அதைவிட நீங்கள் அழகாய் இருக்கிறீர்கள்'' என்றார்.

''வாஸந்தியின் கண்களைப் பார்த்தீர்களா, அதற்குப் பிறகு என்னுடைய தாடியை நீங்கள் கவனிக்க மாட்டீர்கள்!'' என்றார் ஸந்து தம் பங்கிற்கு.

''உங்கள் ஸர்தார்ஜி ஜோக்கைக்கொஞ்ச நாட்களுக்கு மூட்டை கட்டி வையுங்கள், மிஸ்டர் ஸந்து'' என்றேன் நான் என் கூச்சத்தை மறைத்துக் கொண்டு.

ஆன் கலகலப்பாகப் பேசிக் கொண்டு காருக்கு நடந்து நிமிஷமாகக் கிளப்பி வழியிலிருந்த செக்போஸ்டில் நாணயத்தைப் போட்டு (எல்லாம் ஆட்டோமாட்டிக், மனிதர்களே கிடையாது. நாணயத்தைப் போடாவிட்டால் வழியும் விடாது!) ஏர் போர்ட்டின் எல்லையைத் தாண்டி பாரீஸ் நகரத்துக்குள் செல்ல வேண்டிய மிக நீண்ட பாதையில் வண்டியைச் செலுத்தினார். செலுத்திக் கொண்டே எங்கள் இருவரிடமும் அச்சிட்ட சில காகிதங்களைக் கொடுத்தார்.

''அடுத்து வரும் நாட்களுக்கான உங்களது ப்ரோக்ராம் ஷீட்'' என்றார்.

நான் பிரித்துப் பார்த்தேன்.

முழுக்கஃப்ரெஞ்சிலேயேஇருந்தது. எனக்குச் சுமாராக ஃப்ரெஞ்ச் தெரியுமாதலால் ப்ரிண்டில் இருந்ததைப் புரிந்துகொண்டேன். ஃப்ரெஞ்சில் பல எழுத்துக்களுக்கு ஒலி வடிவங்கள் முற்றிலும் வேறு — 'ர'வை 'அ' என்று உச்சரிப்பார்கள். 'Ch' 'ஷ' ஆகிவிடும் — அப்படியிருக்க திரு. ஸந்து ஒவ்வொரு எழுத்தையும் ஹிந்தியில் உச்சரிப்பது போல் உச்சரித்து எழுத்துக் கூட்டிப் படிக்க ஆரம்பிக்கையில் ஆனுக்குச் சிரிப்புப்பொத்துக் கொண்டு வந்தது. ப்ரோக்ராமை ஆங்கிலத்தில் விளக்கி, ''கவலைப்படாதீர்கள். உங்களுக்கு உதவ நான் இருக்கிறேன்'' என்றார்.

''நீங்கள் இப்பொழுது முதலில் உங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஹோட்டலுக்குச் சென்று இளைப்பாறுங்கள். மூன்றரை மணிக்கு மாடம் ஆப்பில்பீயைப் பார்க்கப் போக வேண்டும். நான் மறுபடி வந்து அழைத்துப் போகிறேன்.''

திருமதி ஆப்பில்பீ தான் அவர்களது மினிஸ்ட்ரியின் முக்கிய ஆபீஸர். எங்களை வரவேற்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் என்று நாங்கள் தெரிந்து கொண்டிருந்தோம். பாரீஸ் நகரத்து எல்லைக்குள் நுழைந்தவுடன் நான் மிகுந்த பரபரப்புடனும் உற்சாகத்துடனும் வெளியில் பார்க்க ஆரம்பித்தேன்.

வியன்னா ஜெனிவா போல் இல்லாமல் பாரீஸ் தெருக்கள் மிக சுறுசுறுப்பாக உயிரோட்டத்துடன் தென்பட்டன. நிறைய வாகனங்கள் படு வேகத்துடன் பறந்தன. எனக்கு வேகத்தைக் கண்டால் மிகுந்த உற்சாகம். இந்தியாவில் எந்த வாகனத்தில் சென்றாலும் ரொம்ப நிதானம் என்று எனக்கு எரிச்சல் ஏற்படும்.



ந ந ந ந ந ந

க க க க க க

ர் ர் ர் ர் ர் ர்

வ வ வ வ வ வ

ல ல ல ல ல ல

ம் ம் ம் ம் ம் ம்

- வள்ளுவர் கோட்டத்தில் அ. இ. கூட்டுறவு வார விழா. அத்தனை நாளும் நல்ல கூட்டம் — விழா ஆரம்பிக்கும் போது இல்லை. முடியும் சமயத்தில். காரணம் தினமும் விழாவுக்குப் பின் தானே நாடகம் அல்லது இசைநிகழ்ச்சி இருந்தது!

- பல்கலைக்கழகங்கள் 'டாக்டர்' பட்டம் என்று ஒன்று கொடுக்கின்றன என்ற செய்தியே கோடிக்கணக்கான பாமர மக்களுக்கு எம். ஜி. ஆருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கப்பட்ட பிறகு தான் தெரியும் — அமைச்சர் ஹண்டே, மயிலை சாஸ்திரி ஹாலில் நடந்த விழாவில்.

- டெலிவிஷனில் கணேஷ், குமரேஷ் என்று இருஇளம் சிறுவர்கள் வயலின். இரண்டு பேரும் படுசுட்டி. நன்றாக வாசித்தார்கள். ஆனால் குமரேஷ் வாயில் 'சூயிங் கம்' மென்று கொண்டிருந்தது என்னவோ போலிருந்தது.

- "நான் இரட்டைக் குதிரையில் சவாரி செய்கிறேன். ஆம்! ஒரு குதிரை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை. இன்னொரு குதிரை. என் மனச்சாட்சி இப்படிச் சொன்னவர் எம். ஜி. ஆர்.

- "கலைஞர் முற்பிறவியில் கரிகால் பெருவளத்தான். அதனால்தான் இந்தப் பிறவியில் கேள்விகளுக்கு 'கரிகாலனாக' பதில் சொல்கிறார். கலைஞர் ஆட்சிக் காலம் பொற்காலமில்லை. அதனினும் உயர்வான பிளாட்டினம் காலம்."
—மதுரை ஆதீனம் அருணகிரி அடிகளார். (அது சரி பிளாட்டினம் காலம் என்பதை கலைஞர் ஏற்றுக் கொள்ளலாம். முற்பிறவி சங்கதிகளை...?)

-சின்ன கொலம்பஸ்



"நீங்கள் எழுதும் கதைகளுக்கும் உங்கள் பர்ஸனலிட்டிக்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது!" என்றார் ஆன் திடீரென்று என்னைப் பார்த்து.

நான் திடுக்கிட்டு அவரைப் பார்த்தேன். இவர் எங்கே படித்தார் என்ற ஆச்சரியத்துடன்.

"உங்களது சில கதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பை நீங்கள் மினிஸ்ட்ரிக்கு அனுப்பியிருந்தீர்கள் அல்லவா? — அவற்றையெல்லாம் படித்தேன். உங்களை வரவேற்பதற்கு முன் உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள" என்றார் ஆன். என் வியப்பை மறைத்துக் கொண்டு நான் சிரித்தேன்.

"எது அதிக ஏமாற்றமளிக்கிறது, என் கதைகளா, நானா?"

"இரண்டும் ஏமாற்றமளிக்கவில்லை. உங்கள் கதைகள் ரொம்ப கனமானவை. என்னைச் சோகப்படுத்துகின்றன. (They make me feel sad). நீங்கள் அதற்கு மாறாகச் சின்னப் பெண்ணாக உற்சாகமாக இருக்கிறீர்கள்!"

நான் மறுபடியும் சிரித்தேன்.

"அதிகமாகச் சிரிப்பவர்கள் தான் அதிகமாகச் சோகத்தை உணர்ந்து கொள்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா ஆன்?" என்றேன்.

"தெரியும். ஷேக்ஸ்பியரின் வார்த்தைகளை மறக்க முடியுமா என்ன?"

ஆனை அந்த க்ஷணத்திலிருந்து எனக்குப் பிடித்துப் போயிற்று.

பாரீஸின் நெருக்கமான பல தெருக்களில் இருந்த பயங்கர டிராஃப்பிக்கில் அசகாய சூரத்தனத்துடன் காரை நுழைத்து வெளிவந்து ஒரு பெரிய சதுக்கத்தைத் தாண்டும் போது. "இதற்கு 'கான்கார்ட்' என்று பெயர். மிக முக்கியமான தெருக்கள் எல்லாம் இங்கு சேருகின்றன. பாரீஸின் பிரதான சதுக்கம் இது. இதற்கருகில் தான் உங்களுடைய ஹோட்டல் இருக்கிறது" என்றார் ஆன்.


"ஹோட்டல் ட்வில்லரி" முன் நிறுத்தினார்.

"எங்கள் விருந்தாளிகளாக வந்திருக்கும் உங்களுக்கு ஒரு டிப்பிகல் ஃப்ரெஞ்ச் ஹோட்டலைக் காண்பிக்க வேண்டும் என்று இங்கே ஏற்பாடு செய்திருக்கிறோம். உங்களுக்குச் சௌகர்யமாக இருக்கும் என்று நம்புகிறேன். மூன்றேகால் மணிக்கு வருவேன். தயாராயிருங்கள்" என்று விட்டு ஆன் கிளம்பினார்.

ஹோட்டலின் மானேஜர் ஒரு பெண்மணி. பம்பளிமாஸ் பழம் போல் செக்கச் சிவக்க கஷ்குமுஷ்குவென்றிருந்தாள். நல்லவேளையாக ஆங்கிலம் பேசினாள். பணிப் பெண்கள் எல்லாம் நீக்ரோக்கள். சுத்தமாக ஆங்கிலம் புரியவில்லை. தயாராக இருந்த எங்கள் அறைகளுக்குச் சென்றோம்.

கடச்சுட குழாயில் வந்த நீரில் 'டப்'பில் அமர்ந்து அலுப்புத் தீரக் குளித்து மூன்று மணிக்கு நான் தயாரானேன். பாரீஸ் பயணத்திற்கென்று வாங்கியிருந்த பிரத்தியேகமான புது ஷூவை அணிந்து கொண்டேன்.

அன்று எப்படிப் பிடித்தோம்



சென்னையின் சுற்றுப்புறங்களில் இப்போது நடந்ததைப் போன்ற கொள்ளைகள் 1968—லும் நடந்தது. அன்று செங்கல்பட்டு மாவட்ட போலீஸ் அதிகாரியாக இருந்த வி. ராதாகிருஷ்ணன் (இன்று டைரக்டர் ஜெனரல்) கிட்டத்தட்ட ஒரு மாதம், தூக்கம் இன்றி, சரியான உணவு இல்லாமல் சுற்றினாராம், கொள்ளையரைப் பிடிக்க. ''கிட்டத்தட்ட, 2000 பேர்களுக்கு மேல் விசாரித்தோம். கொள்ளையடித்தவர்கள் பிடித்த பீடி வடநாட்டைச் சேர்ந்தவர்கள் பிடிப்பதாக இருந்ததால், அது ஒரு சிறிய துப்பாக இருந்தது. கொள்ளைக்காரர்கள் உடுத்தியிருந்த துணி, மற்றும் இந்தி பேசியது பற்றி வீட்டுக்காரர்கள் சொல்லியிருந்தனர். மூர்மார்க்கெட் அருகே இந்தி பேசும், சந்தேகப்படும்படியான ஒரு கூட்டம் இருந்ததாகத் தகவல் வந்தது. அவர்களைப் பிடித்து விசாரித்தபோது மாட்டிக் கொண்டார்கள். அவர்கள் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த 'பவுலயா' இனத்தவர்கள். ஒரு வருடத்திற்கு ஒருமுறை கொள்ளையடித்து விட்டு ஊருக்குப் போய் விடுவார்கள்'' என்றார் டைரக்டர் ஜெனரல். ஓர் ஆச்சர்ய ஒற்றுமை என்னவென்றால் இப்போது கொள்ளைக்காரர்கள் மாட்டிக்கொண்ட பூந்தமல்லி மாந்தோப்பில் 1968—ல் ஒரு இரவு முழுவதும், கண் விழித்துக் கொள்ளையர்களைப் பிடிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தாராம் ராதாகிருஷ்ணன்!

-நமது நிருபர்

விநாடி பிசகாமல் ஆள் வந்து விட்டார். மறுபடி என் புடவையின் அழகைக் கண்டு வியந்தார். நாங்கள் சரியாக மூன்றரை மணிக்கு External Relations Ministry யின் கட்டிடத்திற்குள் நுழைந்தோம். அதன் அலுவலகங்களை ஒரு வேக நோட்டம் விட்ட என் கண்களுக்குப் பளிச்சென்று ஒரு விஷயம் பட்டது. அங்கு வேலை பார்க்கும் அவ்வளவு பேரும் பெண்கள்! பெரிய ஆஃபீஸர்களிலிருந்து ரிஸப்ஷனிஸ்ட் வரை! ப்யூன் என்று யாருமே இல்லை. எல்லோரும் அவரவர்களே எழுந்து தங்களுக்கு வேண்டியதைக் கவனித்துக் கொள்கிறார்கள்.

திருமதி ஆப்பில்பீ மிக கம்பீரமான அழகுடையவராக இருந்தார். சுத்தமான ஆங்கிலம் பேசினார். வார்த்தைக்கு வார்த்தை சிரித்துக் கொண்டே பேசினாலும் அனாவசியமாக ஒரு வார்த்தை இல்லை. மழுப்பல் இல்லை. வழவழா இல்லை. அவரிடம் இடையில் பேச வந்த மற்ற பெண் ஆஃபீஸர்கள் எல்லாம் மிக்க மரியாதையாக இருப்பதைக் கவனித்தேன். மிக நேர்த்தியாக இயங்கும் இயந்திரங்கள் போல் அத்தனை பெண்களும் தங்கள் வேலைகளைக் கவனிப்பதை நான் கவனித்தேன். அனாவசியப் பேச்சோ சிரிப்போ இல்லை.

ஸ்ரீமதி ஆப்பில்பீயுடன் பேசும்போது ஒரு பெண்மணியுடன் பேசுகிறோம் என்கிற எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. இந்தியாவில் எந்த அலுவலகத்துக்குச் சென்றாலும் (ஸிண்டிகேட் பாங்கைத் தவிர!) பெண்கள் பெருவாரியாக வேலை செய்யாததால் ''இது ஓர் ஆண் உலகம்'' என்கிற பிரமை எனக்கு எப்பவும் ஏற்படும். இங்கு இந்தக் கம்பீரமான, திறமையான பெண்களைப் பார்த்து எனக்கு ரொம்ப சந்தோஷமாயிற்று. பாரீஸில் நாங்கள் தங்கும் காலத்தில் எங்கேயெல்லாம் போகலாம், யாரையெல்லாம் பார்க்கலாம் என்று திருமதி ஆப்பில்பீ எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

திரு. ஸந்து அவரை ஞாபகப்படுத்துகிற மாதிரி கேட்டார்.

''உங்கள் ப்ரோக்ராமில் நாங்கள் நீஸில் (NICE) கலந்து கொள்ளப் போகும் உலக எழுத்தாளர் மகாநாட்டைப் பற்றி ஒன்றுமே இல்லையே?''

திருமதி ஆப்பில்பீ ஒரு வெற்றுப்பார்வையுடன் நிதானமாகச் சொன்னார்:

''அந்த மாதிரி ஒரு மகாநாடு நடக்கப் போவது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். அதைப்பற்றி எங்கள் மினிஸ்ட்ரிக்கு ஒரு தகவலும் இல்லை.''

எங்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

(தொடரும்)

அன்னம் தலையை உயர்த்திப் பார்த்த போது மாணிக்கம் உள்ளே வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'அதுக்குள்ள மணி மூணு ஆயிடுத்தா?' என்று தனக்குள் சொல்லியபடி எழுந்து உட்கார்ந்தாள்.

''இந்தாங்க பெரியம்மா!...'' என்றவன் பால் செம்பை அவளுக்கு முன் வைத்து விட்டுச் சென்றான்.

அன்னம் அதைக் கையிலெடுத்துக் கொண்டு எழுந்தாள். அடுக்களையை நோக்கி நடந்தாள்.

அடுப்பைப் பற்ற வைத்தாள். பாலைக் காய்ச்சி, காப்பி டிகாக்ஷன் போட்டு, சர்க்கரையை அளவோடு சேர்த்து அப்படியும் இப்படியுமாக இரண்டு ஆற்று ஆற்றிக் குடித்தபின் அந்த அறுபது வயதுச் சரீரத்திற்குள் புதுத் தெம்பு வந்து குடியேறிவிட்டாற்போலிருந்தது.

மாணிக்கம் சற்றுமுன் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனானே ... பால் செம்பு அதில் எவ்வளவு பால் இருந்தது? காலையில் எவ்வளவு கறந்தது? பகலில் எவ்வளவு கறந்தது? என்றெல்லாம் கணக்கா பார்த்தாள்? இல்லையே!

அன்னத்தின் சித்தாந்தமே வேறு.

'ஒருத்தனிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கும்போது அவனிடம் முழு நம்பிக்கை வைத்து அந்தப் பொறுப்பைத்தா; உன்னை அவன் மோசம் செய்ய மாட்டான்!'

''நீ எல்லாரையும் சீக்கிரத்துல நம்பிடறே. ஒருநாள் யாராவது சரியா உன் தலையில மிளகாய் அரைச்சிடப்போறாங்க.''

''எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்க. உங்களுக்கே என் கிட்ட எந்த விஷயத்துக்காவது பொய் சொல்லணும்னு தோணியிருக்கா? சொல்லியிருக்கீங்களா?'' சிரிப்பாள்.

''உன் முகத்தை நேருக்கு நேர் ஒரு தடவை பார்த்தா உன்னை ஏமாத்தணும்னு எப்படிம்மா தோணும்?...''

தம் கணிப்பிலிருந்து விலகித் தாமே சரிந்து தான் போவார் சாம்பசிவம்.

பத்து வருடங்களுக்கு முன் சாம்பசிவம் ஒரு வீட்டையும், ஒரு பெண்ணையும் பின்னையையும் விட்டுச் சென்ற போது, 'இப்படி நிராதரவா விட்டுட்டுப் போயிட்டாரே!' என்று அவள் மூன்று நாள் அழுதாள் என்பது வாஸ்தவம் தான். அதன்பிறகு தெம்பையும், தைரியத்தையும் மனத்தில் காலூன்ற வைத்துக் கொண்டு, அவரோடு வாழ்ந்த நாட்களின் சுகமான பகுதிகளை மட்டும் நினைவில் தக்க வைத்துக்கொண்டு ரொம்பவும் சீக்கிரம் வாழப் பழகிக் கொண்டு விட்டாள்.

புருஷன் செத்ததால் கிடைத்த பணம், வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்குவிட்டு மாதா மாதம் கிடைக்கும் குடிக்கூலி.... தவிர, ஒரு பசு மாட்டை விலைக்கு வாங்கினாள். இவள் பாசத்தைப்' பொழிகையில் அது வஞ்சனையில்லாமல் பாலைப் பொழியக் கேட்கவா வேண்டும்?

தன் பெண் பங்கஜத்துக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்தாள். அவளும் புக்ககம் போய்ச் சேர்ந்தபின் அன்னமும், அவளுடைய மகன் ராஜாமணியும் மட்டும் தான்.

அந்த ராஜாமணி என்ன செய்தான்?

ஒருநாள் இவள் வெந்தய டப்பாவில் போட்டு வைத்திருந்த சில்லறையையும், பெட்டியில் ஒரு புடவை மடிப்பிற்குள் சின்ன பிளாஸ்டிக் உறையில் மடித்து வைத்



திருந்த கொஞ்சம் நோட்டையும் எடுத்துக் கொண்டு ஓடிப் போனான்.

அவள் வாய் திறக்கவில்லை.

அவன் எங்கே எப்படியிருக்கிறான் என்பது தெரியவில்லை. இவளும் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. ''மெட்ராஸ்ல அவனை ஒரு கடை வாசல்ல பார்த்தேன். சினிமாக் கொட்டகையில பார்த்தேன். ஓட்டல்ல பார்த்தேன்'' என்று யாராவது தகவல் கொண்டுவந்தால் ''அப்படியா?...'' என்று ஒற்றைச் சொல்லோடு நிறுத்திக் கொள்வாள்.

இன்று வயசு அறுபதாகிறது.

ஊருக்கு உபகாரி. கல்யாணம், கார்த்திகை என்று விசேஷ காலங்களில் ஒத்தாசை செய்கிற மனுஷி.

பெத்த பிள்ளை எக்கேடு கெட்டுப் போனால் என்ன? தறிதலையாய் ஓடிப் போனவன் செழிப்பாய் இருந்தாலும் ஒன்றுதான். தரித்திரனாய்த் தெருத் தெரு வாய்ச் சுற்றிக் கொண்டிருந்தாலும் ஒன்றுதான்.

அன்று தபால்காரர் ஒரு ரிஜிஸ்தர் தபாலைக் கொண்டுவந்து, ''பெரியம்மா! இந்தத் தாள்ல கையெழுத்து போடுங்க...'' என்று சொன்னபோது, அன்னத்திற்குப் புரியவில்லை.

இன்ஷூர் செய்யப்பட்ட தபால் அது. அரக்கில் சீல் வைத்துக் குறுக்கும் நெடுக்கும் நீலக்கோடுகள்.

''யாரு தம்பி, அனுப்பியிருக்கிறது?...''

''வேறு யாரும்மா. ராஜாமணித் தம்பி தான். உங்க பிள்ளை. பணம் அனுப்பி யிருக்கார் போலிருக்கு...''

''செத்திட்டான்னு திருப்பிவிட்டிடு...''

''ஏம்மா அப்படிச் சொல்றீங்க? என்னதான் ஓடி ஒளிஞ்சு நின்னுக்கிட்டாலும், ஒரு பிள்ளைக்குத் தாய்ப்பாசம் இல்லாமப் போயிடுமா?''

''இத்தனை வருஷமா இல்லாத தாய்ப் பாசம் இப்ப எங்கேருந்து முளைச்சது? கையில காசைப் பார்த்தப்புறமா?....''

''முதல்ல இதுல ஒரு கையெழுத்துப் போடுங்க. தாய் - பிள்ளை விவகாரம் அவசரம் அவசரமாத் தீர்க்கிறப்போல விஷயம் இல்லேம்மா. தயவு பண்ணிக் கையெழுத்து போடுங்க...''

ரொம்ப நாளைக்குப் பிறகு கண்கள் ஏதோ பாவம் செய்து விட்டாற்போல் கலங்கின.


உறையைப் பெற்றுக் கொண்டு உள்ளே வந்தவள் ரொம்ப நாளாக உபயோகிக் காமலே மேசையின் இழுவறைக்குள் தூக்கிப் போட்டிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டாள். உறையைப் பிரித்தாள்.

ராஜாமணி அவளுக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பியிருந்தான். கூடவே ஒரு கடிதம்.

ஒரு சின்னக் கம்பெனியில் கொஞ்சநாள் வேலை பார்த்தானாம். அதிர்ஷ்டவசமாக வாய்ப்புக் கிடைத்து இப்போது மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறானாம். வருஷப் பிறப்பிற்கு ஒரு படம் வெளிவரப் போகிறதாம். அட்வான்ஸ் வாங்கிய தொகையில் ஆயிரம் அனுப்பியிருப்பதாக வும், கூடிய சீக்கிரம் அவளைச் சென்னைக்கு அழைத்து ஒரு பெரிய பங்களாவில் குடி வைக்கப் போவதாகவும் விஸ்தாரமாக எழுதியிருந்தான். இருபதாம் தேதி அந்த ஊர் ரயில்வே ஸ்டேஷனிலேயே ஷூட்டிங் நடக்கப் போகிறதாம். 'வருவேன்; உன் கையில் மோர் சாதமாவது சாப்பிட வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது' என்று அவன் எழுதியிருந்தான்.

இருபதாம் தேதி நெருங்க நெருங்க அன்னம்மாளுக்குப் படபடப்பு அதிகமாகிக் கொண்டு வந்தது.

இத்தனை நாள் கண்ணில் படாத பிள்ளை இப்போது முக தரிசனம் தர வரப்போகி



ரூன். இருக்கிருளா, செத்து விட்டாளா என்ற கவலை கிஞ்சித்தும் இல்லாமல் பல வருடங்களை விழுங்கி விட்டு இப்போது எங்கேயோ தொலைத்துவிட்டிருந்த பாசத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அந்தப்பாசத்திற்குத் தற்போதைய விலையாய் ஆயிரம் ரூபாய் நிர்ணயித்திருக்கிருன்!

மூன்றும் நாள் பங்கஜம் தன் கணவரோடு வந்தாள்.

''அம்மா! ராஜாமணிகிட்டேருந்துலெட்டர் வந்ததா?...'' என்று கேட்டாள்.

''கடுதாசு மட்டுமில்லே பணமும் வந்தது...''

''ஆயிரமா...?''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கும் அனுப்பியிருக்கானே! அதோட இதைப் பாத்தியா? இந்தப் புத்தகத்துல அவனோட பேட்டியும், போட்டோவும் வந்திருக்கு. படிச்சுக் காட்டவா?...''

''படியேன்... அப்படி என்னதான் சொல்லியிருக்கான்னு பார்ப்போம்...''

ராஜாமணி சொல்கிருன்:

''இன்றைக்கு நான் இந்த அளவுக்கு வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறேன் என்ருல், அதற்கு என் தாய்தான் காரணம். ஒவ்வொரு கல்லாகப் பக்குவமாக எடுத்து அடுக்கி இந்த மாளிகையை எழுப்பியிருப்பவள் என் தாய். அவள்தான் என் தெய்வம்''

''போதும், நிறுத்து. ஏண்டி! பேட்டியைப் படிக்கச் சொன்னு, வேற ஏதோ கதையைப் படிக்கறே!...''

அந்த இருபதாம் தேதி நாளைக்குத்தான்.

செய்தி ஊர் முழுக்கப் பரவிப்போயிருந்தது.

ஒரு சினிமா நடிகர் வரப்போகிருர் என்பதை விட, 'அன்னம்மாளோட பிள்ளை ராஜாமணி வராளும்' என்றுதான் பேசிக்கொண்டார்கள். எல்லாம் விலாவாரியாக அன்னம்மாளின் காதில் விழுந்தது.

''இன்று மாலையே காரில் வந்துவிடுவாராம். டி. பி.ஙல தான் தங்கப் போகிருர்களாம். கூட வரப் போறது யாருடி? அவளும் புதுமுகம்தானு?...''

அன்னம்மாவின் வீட்டுத்திண்ணையிலேயே இத்தனை பேச்சுக்களும்.

அந்தப் பேச்சுக்கள் அன்னம்மாவின் செவிகளை மட்டும் ரணமாக்கவில்லை, தூக்கத்தையும் கெடுத்தன.

இரவு எட்டு மணியளவில் அவள் கண் விழித்தபோது, ஒரு கூட்டமே அந்த அறையில் குடியேறியிருந்தது.

அவள் முகத்தருகே அவன் ராஜாமணி!

''உடம்புக்கு என்னம்மா செய்யறது?..''

அப்படிக் கேட்டவனைப் பார்த்துஏதேதோ கேள்விகள் கேட்கவேண்டும் என்று மூன்று நாட்களாக ஒத்திகை பார்த்து வந்ததெல்லாம் மறந்துபோயிற்று. வாய் திறக்கவில்லை. உதடுகள் மட்டும் லேசாகப் பிரிந்து... மூடி... பிரிந்து... மூடியது.

சிறிது சிறிதாக வலுவை ஓர் அசாத்திய முயற்சியில் வரவழைத்துக் கொண்டு அன்னம் கையை உயர்த்தி அந்த மேசையைச் சுட்டிக் காட்டிஞள்.

ராஜாமணி அதைப் புரிந்து கொண்டவனாக எழுந்து மேசையை நெருங்கி இழுவறையைத் திறந்தான்.

ஒரு மாசத்துக்கு முன் அவன் அனுப்பிய அந்த ரிஜிஸ்டர் தபால்! உள்ளே அந்தக் கடிதமும், ரூபாய் ஆயிரமும் அப்படியே இருந்தன.

'அம்மா என்ன சொல்கிருள்? எதற்காக இதைக் குறிப்பாக, கண் விழித்த மறுகணமே உணர்த்திக் காட்டுகிருள்?'

விழித்தான். திகைப்பைச் சடுதியில் ஒரு காட்சி மாற்றம் போல் மாற்றிக் கொண்டு டாக்டரைப் பார்த்தான்.

''மெட்ராசுக்கு அழைச்சிட்டுப்போறதே பெட்டர்னு நினைக்கிறேன். இந்த ஊரை விட மெடிக்கல் ஃபெஸிலிட்டீஸ் அங்கே நிறைய... இல்லையா?...''

புதிதாய்க் கற்றுக் கொண்ட சில ஆங்கிலச் சொற்களை, புதிதாய்க் கற்றுக் கொண்ட சில சேட்டைகளோடு கலந்து டாக்டரிடம் பேசினுன்.

நான்கு நாட்களுக்குப் பின் ஒருநாள் காலை.

காலைத் தினசரிகள் இரண்டு மூன்றில் அன்னம்மாவின் படம்!

''பரவாயில்லே, கூடிய சீக்கிரம் உங்க போட்டோவும் பத்திரிகையில வரும், ஒரு ஹீரோவோட அம்மாவாச்சே!...''

ஒரு குறும்புக்காரப் பெண் என்ருே ஒருநாள் அன்னம்மாவிடம் சொன்னது அங்கே நிதர்சனமாகிக் கொண்டிருந்தது!

அடுத்த வருடம் ராஜாமணி ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்ததும், 'அன்னம்மாள் மூவீஸ்' என்று தன் தாயின் பெயரையே அந்தக் கம்பெனிக்குச் சூட்டியதும் தனிக் கதை!

''ஐநூறு ரூபாய் கொடுத்து, ஐந்து வருடம் முன் ஒரு மாடு வாங்கினேன். தினமும் நிறைய பால் கறக்குது...''

''அதுக்கென்ன இப்போ...?''

''நாற்பதாயிரம் ரூபாய் கொடுத்து, நாலு வருஷம் முன் ஒரு மாப்பிள்ளை பெற்றேன்... அவரும் இன்னும்நிறைய கறந்துண்டிருக்கார்...!''

—பட்டாணி.



இதோ எம்.எ:ப். 245 –
உன்னத நம்பிக்கைத்திறனும், சிக்கனமும் இணைந்து தரவல்லது



- மிகவும் சிறப்பாக டீசல் சிக்கனம் தரும் 47 எச்.பி. இஞ்சின்
- 8 முன் இயங்கும், மற்றும் 2 பின் இயங்கும் ஸ்:பீடு கியர்பாக்ஸ்
- சீல் செய்த டிஸ்க் பிரேக்குகள் (தேவைப்பட்டால்)
- நம் நாட்டிலே வேறெந்த டிராக்டரிலும் இல்லாத பவர் ஸ்டீரிங் வசதி
- பிரெஷர் கண்ட்ரோல் ஹைட்ராலிக்ஸ்
- நாடெங்கிலும் 200க்கும் மேற்பட்ட ஸ்பேர்பார்ட்ஸ் மற்றும் சர்வீஸ் நிறுவனங்களின் மூலம் உயர்தர பராமரிப்பு வசதி

MAC/T/80 TAM/A

MF
Massey-Ferguson

TAFE


டிராக்டர்ஸ் அண்டு :பார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட்

சென்னை

வேளாண்மை வளர்ச்சியில் புதிய பாதைக்கோர் வழிகாட்டி.

யூகோப்ளான் — உங்கள் வளமான வாழ்விற்கோர் திறவுகோல்!

உங்கள் சேமிப்பு பாங்க் உங்களை என்னவென்று நினைக்கிறது?





கற்றுக்குட்டியென்று? கற்றுத்தேர்ந்தவர் என்று?

ஊஹூம்—எல்லா பாங்குகளும் ஒரு மாதிரி இருப்பதில்லை. உங்கள் டெபாஸிட்டுகளுக்கும் எல்லா பாங்கும் ஒரே விதத்தில் வட்டி தரலாம். ஆனாலும் வாடிக்கையாளரான உங்களை எப்படி நினைத்து நடத்துகிறார்கள் என்பதில்தான் வேறுபாடு காணலாம்.

யூகோபாங்க் வாடிக்கையாளர்களை யூகோப்ளான் வழியில்நடத்திச் செல்கிறது. தொழில்ரீதியான ஆலோசனை மூலம் உங்கள் டெபாசிட் எப்படி விரைவில் அதிகமாக வருமானம் சேர்க்கமுடியும் என்பதை விளக்கிச் சொல்கிறது. யூகோப்ளான் வெறும் சேமிப்பு திட்டம் மட்டுமல்ல-பலவகையில் வட்டி அளிக்கும் ஒரு அற்புத சூத்திரம்! நீங்கள் உங்களால் முடிந்ததை சேமித்தால்—உங்கள் டெபாஸிட் பலனளிக்க பலவழிகளை நிர்ணயிப்பது யூகோப்ளான்!

சாதாரண மாதாந்திர டெபாஸிட்டான ரூ. 150 வாடிக்கையாளருக்கு எப்படி விரைவில் அதிகமான வருமானத்தை சேர்க்கிறது என்று படித்துப் பாருங்கள். உங்கள் டெபாஸிட்டின் பேரில்.

தொழில் ரீதியான ஆலோசனைகளை தரும் யூகோபாங்க். சேமியுங்கள். யூகோ பாங்க் மட்டுமே அளிக்கும் யூகோப்ளான்மூலம்.

யூகோப்ளான்

ஒரே சேமிப்பு. பலவகை வட்டி...

டெபாசிட் (ரூ)	காலம்	மொத்த வருமானம் (ரூ)
மாதம் 150.00 வீதம் 120 மாதங்கள்	36-ஆம் மாத முடிவில்	3,366.40
	72-ஆம் மாத முடிவில்	5,162.20
	120-ஆம் மாத முடிவில்	17,228.40
மொத்தம்		25,757.00

வட்டி விகிதங்கள் ரிசர்வ் பாங்கின் உத்தரவிற்குட்பட்டது.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

உங்கள் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

UCO/CAS-128/83 TAM



விழுப்புரம் வேதனைகள் பற்றி இந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரையைச் சுட்டிக் காட்டி, வி. கிருஷ்ணமூர்த்தி ஒரு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார். திரு. வி.க. வீதி பற்றி அவர் எழுதியிருப்பது உருக்கமாக இருக்கிறது.

விழுப்புரம் போலவே பல ஊர்களில் இதே நிலை! தெருக்களில் "கூவம்" பெருக்கெடுத்து ஓடுவதை நகராட்சி தான் செம்மை செய்ய வேண்டும். ஆனால் தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் பொறுப்பிலே நகராட்சியோடு, பொதுமக்களாகிய நமக்கும் ஒரு கணிசமான பங்கு இருக்கிறது.



குப்பை வண்டிகள் பல ஊர்களில் ஒரு திட்டப்படி வந்து போகிறதில்லை என்று நேயர்கள் கூறுகிறார்கள். நகராட்சியின் செயல் முறையிலே இது ஒரு மிகப் பெரிய குறைதான். ஆனால் இந்தக் குப்பை கூளங்களை வீதிகளில், நடுத்தெருவிலே கூட, எறிவது யார்? நகராட்சியா?

ஒருசமயம் நானும் இன்னொரு இந்திய நண்பரும் எடின்பரோ வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தோம். என்னோடு வந்த நண்பர் வெளி நாட்டுக்குப் புதியவர். 'ஸ்லாட்' இயந்திரத்தில் காசு போட்டு, ஒரு சிகரெட் பெட்டியை எடுத்தவர், தமது வெள்ளிப் பேழையிலே சிகரெட்டுகளைக் கொட்டிக் கொண்டு, அந்தஅட்டைப் பெட்டியை நம்மூர்ப் பழக்கத்தில் அப்படியே தெருவிலே எறிந்துவிட்டு, "ஜோராக" மேலே நடந்து கொண்டிருந்தார். அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு பள்ளிச் சிறுமி 'விறுவிறு' என்று எங்கள் பக்கம் ஓடிவந்தாள். நான் திடுக்கிட்டு நின்றேன். ஓசைப்படாமல் குனிந்து அந்தப் பெட்டியை எடுத்தவள், நடைபாதையில் சற்று நடந்து போய் அங்கே வைத்திருந்த தொட்டியில் அதைப் போட்டுவிட்டு மேலே நடந்தாள், மௌனமாக! எனக்கும் நண்பருக்கும் வியப்பினால் மெய்சிலிர்த்ததோடு, அவமானத்தால் உடல் குறுகியது! இப்போதும் அந்தச் சிறுமியை மனசினால் பார்த்தால் அதே மெய்ப்பாடு மீண்டும் ஏற்படுகிறது!



சிறுமிகள் இருக்கட்டும். பெரியவர்களாகிய நாமே குப்பை கூளங்களை என்ன செய்கிறோம்? வீட்டைவிட்டு வெளியே கூட வராமல், உள்ளே இருந்தபடியே மதிற்சுவருக்கு அப்பால் தூக்கித் தெருவீதியிலே விசிறி அடிக்கிறோம் அல்லவா?

வண்டிப் போக்குவரத்து அதிகமில்லாத பல தெருக்களில், சிறுவர்கள் 'கிட்டிப்புள்' விளையாடுகிறார்கள். சில இடங்களில் 'கிரிக்கெட்' மாட்சுகளே நடக்கின்றன! காற்றாடிப் பட்டம் பறக்க விடுகிற அபாய விளையாட்டைச் சொல்லவே வேண்டாம்!

தொலைபேசியும், மின்சார வாரியமும் தங்கள் பங்கைச் செவ்வனே செய்து, தெருக்களில் குறுக்கும் நெடுக்குமாகப் பள்ளம் தோண்டுகிறார்கள்! மின் இணைப்பும் தொலைபேசிக் கேபிளும் சீராகின்றனவோ, இல்லையோ, தாங்கள் தோண்டிய பள்ளங்களைத் தாங்களே நிரப்ப வேண்டும் என்ற கடமை உணர்ச்சி அவர்களுக்கு இருப்பதால், பாவம், அந்தக் கடனுக்காக அதையும் செய்கிறார்கள்! ஒவ்வொரு காரும் அங்கே வரும்போது 'ப்ரேக் இன்ஸ்பெக்ட'ரைச் சந்திக்க வேண்டியிருக்கிறது!

நடைபாதைகளைப் பார்த்தால் அவை கடை. வீதிகள்! இவற்றுக்கு மத்தியிலே,

சில பல

மீ.ப.சோமு

வயது வந்த ஆடவரும், பெண்டிரும் ஆளுக்கு ஒரு வாக்கு என்ற விகிதத்தில் அங்கங்கே குடித்தனமே போட்டுவிடுகிறார்கள்! பங்களாக்கள் 'மளமள' என்று எழுந்து வருகிற வட்டாரங்களில், கட்டட ஊழியர்கள் எல்லாம் எங்கே வசிப்பார்கள்? நடைபாதையை விட்டால் அவர்களுக்கு வேறு இடம் வேண்டாமா? கருணை மிகுந்தவர்கள் அல்லவா நாமும் நமது அரசும்!

மக்கள் கதை இருக்கட்டும். வீடுகள் கட்டி முடிகிற வரை, செங்கற்குவியல், சிமெண்ட் குழைப்பு, கட்டுமானப் பொருட்கள் இவற்றையெல்லாம் வைப்பதற்குப் பாவம், தெரு வீதி மட்டும் இல்லாவிட்டால் அவர்கள் எங்கே போவது? மனிதாபிமானத்தோடு, சிமெண்ட் அபிமானத்தையும் சேர்த்துக் குழைத்துச் சிந்தித்துப் பாருங்கள்!

சரி; சிறிய தெருக்களிலே இப்படி;பெரிய அரச வீதிகளிலோ? இரண்டு ஓரங்களிலும் அல்லாமல், கார்கள், லாரிகள், ஸ்கூட்டர்கள், ரிக்ஷாக்கள் முதலியவற்றை வேறு எங்கே நிறுத்துவது? கண்பார்வையில் காரை நிறுத்திவிட்டுக் கடைக்குள்ளே போகும் போதே, வண்டியைக் கொண்டு போய் விடுகிறார்களே! மனத்தில் மனிதர்களுக்கும் அவர்களுடைய வண்டிகளுக்கும் சேர்த்து இடம் கொடுத்துக் கருணையோடு சற்று யோசித்துப் பாருங்கள்!

அரசாங்க பஸ்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? அவை அனைத்தும் மக்களின் சொத்து. எனவே வீதி முழுவதும் அந்தப் பஸ்களுக்குச் சொந்தம். 'பஸ் நிற்கும் இடம்' என்று போட்டிருக்கிற இடத்திலே தான் நிறுத்த வேண்டும் என்று யார் சொன்னது?

'வேகக் கட்டுப்பாடு' என்று ஒன்று முடியாட்சியில் இருந்திருக்கலாம், குடியாட்சியிலுமா அது? முன்னேறுவது என்றால் அதன் பொருள் என்ன? முன்னால் போகிற வண்டியை இடது புறமாகவோ அல்லது வலது புறமாகவோ முந்திக் கொண்டு அப்படியே பறக்க வேண்டும் என்பதுதானே?

பஸ்கள் இருக்கட்டும். லாரிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? லாரி வைத்திருப்பவர்களில் சிலருக்கு 'ஷெட்' கிடையாது என்று கேள்வி. ஏனென்றால் இரவுகளில் லாரிகளை நிறுத்தி வைப்பதற்கு என்றே பொது உடைமையான பெரிய பெரிய தெருக்களும் வாகான சந்துகளும் இருக்கின்றனவே! 'ஒர்க் ஷாப்' வைத்திருப்பவர்கள் கூடத் தெருவிலேயே வண்டிகளை நிறுத்தி வைத்துக் கொள்ளலாமே? கேட்பது யார்?

'ஆப்ஸ்டகிள் ரேஸ்' என்கிறார்களே அப்படி வழிநெடுகிலும் உள்ள பல ''தடை''களையும் தாண்டி வண்டியை ஓட்டிச் செல்கிறோம். திடீரென்று மழை வருகிறது. மழை பெய்யாவிட்டால் பெருந்தொல்லை என்பது உண்மை. மழை பெய்து விட்டாலோ?

பெரிய பெரிய பெரியோர்களின் பெயரைச் சூட்டிக் கொண்டு நெளிகிற நெடுஞ்சாலைகளில் எல்லாம் முட்டளவுத் தண்ணீர்! தெருக்களின் நெஞ்சம் குளிருமட்டும் அந்தத் தண்ணீர் அந்த இடத்தை விட்டு அகலாது! ஓட்டி வந்த காரை அப்படியே பேசாமல் அங்கங்கே நிறுத்தி விட்டு, நடையைக் கட்டுவது தான் புத்திசாலித்தனம். இல்லையென்றால் தண்ணீரே காரின் அடிக் குழாய்க்குள் புகுந்து நமக்கு அறிவு புகட்டிவிடும்.

இரவு நேரங்களில் கார் ஓட்டிச் சென்றால், இன்னொரு அனுபவம்: எதிரே வருகிற லாரியோ, பஸ்ஸோ, காரோ பெரும்பாலும் விளக்கை மங்கச் செய்வதில்லை. தெருக்களோ ஒரே இருட்டு. கண்ணும் கூச ஆரம்பித்தால் என்ன ஆவது? போக்குவரத்து நெரிசலுக்குள் இதுவும் சேர்ந்து கொண்டால்? அது மட்டுமில்லை. ஆகாய விமானங்களை ஓட்ட வேண்டியவர்கள் பலர், இப்போது கார் ஓட்டுகிறார்கள். நீங்களும் நானும் ஓட்டும்போது, நம்மை முந்திக் கொண்டு பறந்து, தலையைத் திருப்பி ஒரு பார்வை பார்ப்பார்! ''மாட்டு வண்டி ஓட்ட வேண்டியவனப்பா நீ!'' என்று சொல்லும், அந்த நெற்றிக்கண் பார்வை!

இது ஒன்றையும் காதிலோ, கண்ணிலோ போட்டுக் கொள்ளாமல், பச்சை சிவப்பு விளக்குகளை மட்டும் காட்டிக்கொண்டே தெருச் சந்திகளிலே மௌனமாக நிற்கிறது அந்த வழிகாட்டிக் கம்பம்! சில சமயங்களில் அதற்கு ஏற்படுகிற அதிர்ச்சியிலே எரிவதையும் நிறுத்தி விடுகிறது! 'பெரிய இடத்து வம்பு நமக்கு எதற்கு?' என்று அது வாய் மூடிப் பணி செய்கிறது. ஏனென்றால் அது காவல் துறையின் ஒரு ஜனநாயகக் கம்பம்!

'ஜினடிக் என்ஜினியரிங் மூலம் நாம் இஷ்டப்படும் குணங்களும், அறிவுக் கூர்மையும், திறமையும் அடையக்கூடிய மனிதக் குழந்தைகளைச் சிருஷ்டிக்கலாம். உதாரணமாக ஐன்ஸ்டைன் போன்ற விஞ்ஞான மேதை தேவையென்றால் அந்த மேதாவிலாசம் அடையக் கூடிய குழந்தைகளைச் சிருஷ்டிக்கலாம். ஹிட்லர் மாதிரி குணங்களை அடையக் கூடிய குழந்தையையும் சிருஷ்டிக்கலாம்! மனித செல்களில் உள்ள ஜீன்களை ஆராய்ந்து மாற்றி அமைக்கும் இந்த விஞ்ஞானம் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது.

-ரிஸர்ச் அண்டு ரெஃபரன்ஸ்





O எஸ். எஸ். நாகராஜன், சென்னை 88.

? வருமான அடிப்படையில் பிற்பட்டோருக்கு மட்டுமே இட ஒதுக்கீடு என்னும் போது அதில் வறுமை நிலையில் உள்ள பின்தங்கிய வகுப்பினரும் பழங்குடி வகுப்பினரும் அடங்கத்தானே செய்வர்? பின் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்றதுமே திராவிடக் கழகத்தினரும் அவர்களது கூட்டாளிகளும் கூக்குரல் இடுவது ஏன்?

! பின்தங்கிய வகுப்பினரை முன்னேற்றுவதை விட முன்னேறியதாகக் கருதப்படும் வகுப்பினரை மேன்மேலும் வருத்துவதில் தான் அவர்களுக்கு இன்பம் என்பதால்.

O திருமதி. ராஜலட்சுமி, சென்னை 33.

? ஆவியுலக ஆராய்ச்சி பற்றிய நூல் படித்திருக்கிறீர்களா? உங்கள் கருத்து என்ன?

! சிறுவனாக இருந்த போது இரவில் சிறுநீர் கழிக்கத் தனியே எழுந்து சென்று திரும்பினேன். விளக்குப் போட கை எட்டாது. அதனால் இருட்டிலேயே போய் வந்தேன். துணி உலர்த்தும் கொடியில் காயப்போட்டிருந்த ஒரு வெள்ளை 'வேய்ஸ்ட் கோட்' காற்றில் இலேசாய் அசைந்து பிசாசாகப் பயமுறுத்தியது. 'ஓ!' வென்று அலறினேன். என் அப்பா ஓட்டமாய் ஓடிவந்து விளக்கைப்பொருத்தினார். ஓர் ஆடையைப் பிசாசு என்று நினைத்துப் பயந்ததை உணர்ந்தேன். அந்தக் கணத்திலிருந்து பேய், பிசாசு, ஆவிகள் பற்றிய பயமும் போயிற்று; நம்பிக்கையும் இழந்து விட்டேன்.

O ராஜ சௌந்திரன், ஈரோடு 10.

? பெங்களூர் சாவித்திரியைப் போட்டி போட்டுக் கொண்டு பத்திரிகைகள் விளம்பரப்படுத்துவது குறித்து...?

! சாவித்திரியை விட சாவித்திரி தீட்டிய நிர்வாண ஓவியங்களை விளம்பரப்படுத்துவதில் தான் இவர்களுக்கு அக்கறை அதிகம். அதிலும் தாங்கள் என்னவோ ஆபாச எதிரிகள் போலக் காட்டிக் கொள்கிற மோசடி வேறு!

ஆவியுலக ஆய்வில் நம்பிக்கை உண்டா?

O எஸ். ரமேஷ், மதுரை 16.

? அட்ரஸ் இல்லாத ஆசாமியாகப் பார்த்துத்தான் பரிசு கொடுப்பீர்களா?

! ஸாரி, நீங்கள் விலாசம் எழுதாமலிருந்த போதிலும் உங்களுக்குப் பரிசும் இல்லை; உங்கள் முழு விலாசம் தேவையுமில்லை!

O லலிதா சீனிவாசன், சென்னை 4.

? டி. வி. செய்தி வாசிப்பவர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? ஏன்?

! ஷோபனா ரவி, உச்சரிப்பு சுத்தமாக இருப்பதால்!

O பி. ப. சுந்தர்சன், கொச்சின் *

? வருமான வரி வசூலிக்கப் பல்வித கெடுபிடிகள் உருவாக்கி வைத்திருந்தும் எந்தெந்த வகையில் சட்டப்படி இலாகாவின் கண்களில் மண்ணைத் தூவலாம் என்று எடுத்துக்கூற ஆலோசகர்களையும் அனுமதிக்கும் முரண்பாடு இந்தியாவில் மட்டும்தானா?

! இந்தியாவில் மட்டும் என்று கூற முடியாது. ஆனால் இந்தியாவில் தான் வரி விகிதங்களும் அதிகம்; வரிச் சட்டங்களும் அதிகம் என்பதால் இத்தகைய ஆலோசகர்களுக்கு இங்கே கிராக்கி அதிகம்.

O வி. சந்திரசேகரன், வீரராக்கியம்.

? சமீப காலம் வரையில் அடிக்கடி படத்தில் தோன்றாத சோ ஜனதாவில் சேர்ந்த பிறகு தொடர்ந்து நான்கைந்து படங்களில் நடித்து வருவது பற்றி...?

! ஏதேனும் ஒரு விதத்தில் மக்களைக் கவர்ந்து அரசியலில் உயர்ந்து அதன் மூலம் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமானால் சரிதான். ஆனால் சோ அவரது பறையறிவிக்கப்பட்ட ஆபாச எதிர்ப்புக் கொள்கைக்கு முரணாகச் செயல்படும் போது இடிக்கிறது. விளம்பரம் கூட செக்ஸியாக இருந்தால் பிரசுரிக்க மாட்டேன் என்று கூறுரைப்பவர் துபாய் உடையில் ஜெயமாலினியுடன் சேர்ந்து 'அத்தை மகன் வந்தானே, அத்தனையும் தந்

நீங்கள் கேட்டவை



தானே' என்கிற பாடலுக்கு நைட்கிளப் நடனம் ஆடுவதை எப்படி சகிப்பது?

○ க. பி. கந்தையா, மதுரை.

? அந்தக் காலத்தும் பெண்ணைக் கண்டால் கவிதை எழுத வரும். இந்தக் காலத்தும் பெண்களைக் கண்டால்....?

! புதுக்கவிதை எழுதத் தோன்றும்.

○ அ. கஸ்குல் ஜமால், திருமங்கலக்குடி.

? சுஜாதா தொடர்கதைகள் எழுதுவதை நிறுத்தியதன் நோக்கம் என்ன?

! முற்றுப்புள்ளியல்ல, கமா தான் போட்டிருக்கிறார். பாட்டரி ரீசார்ஜ் ஆகிறது. 84 ல் முழு வேகத்துடன் இயங்குவார்.

○ ஏ. ராஜேந்தர், நாகப்பட்டினம்.

? இந்தியாவைப் பொறுத்தவரை ஒருவர் குறிக்கோள் எதுவாக இருக்க வேண்டும்?

! 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள், ஆட்சியிலுள்ள போதே சுருட்டிக்கொள்' என்ற இன்றைய லட்சியத்தை மாற்றி அமைப்பதாக இருக்க வேண்டும்.

○ வி. நாராயணசுவாமி, திருப்பூர்.

? ஜெயலலிதா தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திப் புதிய கட்சி ஆரம்பித்தால் எம். ஜி. ஆர். நிலை என்னவாகும்?

! இதென்ன ஸார் கேள்வி? இன்றுள்ள கட்சியே அவருடையதாக இருக்கும் போது அவர் ஏன் ஸார், புதுகட்சி தொடங்கப்போகிறார்? ஒருவேளை ஜெயலலிதாவின் செல்வாக்கு மிக அதிகமாக, எம். ஜி. ஆர். பிரிந்து வந்து புதிய கட்சி ஆரம்பிக்க அவசியமேற்படலாமே யொழிய....

○ ஏ. எஸ். பி. விசுவநாதன், செந்தாரப்பட்டி.

? விலைவாசி உயரக் காரணம் அரசியல்வாதிகளா?

! இல்லை. ஆட்சியிலுள்ள கட்சி கடைப்பிடிக்கும் கொள்கைகளே காரணம். எந்த அரசாங்கம் மக்களை நம்பாமல் கட்டுப்பாடுகளை அதிகரித்து அவர்களுடைய உழைப்புக்கும் ஊக்கத்துக்கும் முன்னேற்ற ஆர்வத்துக்கும் முட்டுக்கட்டைகளைப் போடுகிறதோ, எந்த அரசு உற்பத்திக்கு உதவாத ஊதாரிச் செலவினங்களை அதிகரித்துக் கொண்டே போகிறதோ அந்த அரசின் ஆட்சியில் விலைவாசிகள் உயரவே செய்யும்.

○ கா. அ. கிருஷ்ணன், சென்னை 87.

? ஒரு பள்ளி விழாவில்,' பச்சையப்பன் தியாகராஜர் கல்லூரிகளில் படித்தவர்கள் அரசியல்வாதிகளாகச் சமூக சேவை செய்கிறார்கள். லயோலா போன்ற கல்லூரிகளில் படித்தவர்கள் குமாஸ்தாக்களாகப் பணிபுரிகிறார்கள் என்று ஒருவர் பேசினார். இதைப் பற்றி.....?

! இன்றுள்ள அரசியல்வாதிகளின் தரத்தைப் பார்க்கும்போது அந்தப் பேச்சாளர் பச்சையப்பன், தியாகராஜர் கல்லூரிகளைப் பாராட்டவில்லை! பரிகசித்திருக்கிறார்.

○ எஸ். தண்டாயுதபாணி; கரூர்.

? முதலமைச்சர் ஆறுதும் நடித்துக்கொண்டே இருப்பேன் என்றார். நடிப்பை இப்படிக் கைவிட்டுவிட்டாரே, நியாயமா?

! யார் சொன்னது அவர் நடிப்பைக் கைவிட்டு விட்டார் என்று! பஞ்சாயத்து தேர்தல் வரப் போகிறது. மதுவிலக்கு வரப்போகிறது. பொன்னியின் செல்வனைப் படம் பிடிக்கப் போகிறேன் என்றெல்லாம் வசனம் பேசி நடித்துத்தான் வருகிறார். அரசியல்வாதிகளை விடச் சிறந்த நடிகர்கள் யாருமில்லை.

○ கமாலி, மேலப்பாளையூர்.

? பத்திரிகைக் காகிதத்தின் விலைதான் குறைக்கப்பட்டுள்ளதே, பத்திரிகைகள் விலையைக் குறைக்குமா?

! ஒட்டகத்தின் முதுகில் ஏகப்பட்ட சுமை ஏற்றி, கடைசியில் ஒரு சிறு பொருளை நீக்கி அதன் கண்ணெதிரே தரையில் வீசி சுமையைக் குறைத்து விட்டது போல் பாவனை செய்து ஏமாற்றப் பார்ப்பார்களாம்... அது போலத்தான் இன்றைய பத்திரிகைக் காகித விலை ''குறைப்பு.''

○ ஆர். வி. கமலா விஜயராகவ், சென்னை.

? 13.11.83 கல்கி இதழில் ஒரு மாணவர் அவரது கல்லூரித் தேர்வும் நட்டக்க மேல்நிலைத் தேர்வும் ஒரே நாளில் வருவதுபற்றி வருந்தி எழுதியிருந்தார். என் மகள் பி. எஸ்ஸி படித்துக் கொண்டிருந்த போது இதேபோல் இரண்டு தேர்வுகள் ஒன்றாக வந்து வேலை கிடைத்தால் போதும் என சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதித் தோல்வியுற அதே கவலையில் எல்லா அரியர்ஸ்களும் ஒன்றாகச் சேர்ந்து படித்து இரவு பகல் கண்விழித்து, கல்லூரித் தேர்வு எழுதி மூன்று ஜுரம் கண்டு இரண்டு நாளில் தேர்வு முடிவு பார்க்காமலே இறந்து விட்டாள். என் மகளை அரசு மீட்டுக் கொடுக்குமா? இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

! எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் உங்கள் துயரை கல்கி வாசகர்கள் அனைவருமே பகிர்ந்து கொள்ள இதோ வழி செய்து இருக்கிறேன் என்பதையும்தவிர, வேறு என்னதான் கூற இயலும்! ''பரீட்சை என்னும் மாபாதகம்'' என்று அமரர் கல்கி எழுதியது தான் நினைவு வருகிறது. அடிப்படைக்கோளாறு கல்வித் திட்டத்தில் உள்ளது. எல்லோருக்குமே பட்டப்படிப்பு, உத்யோக வேட்டை... அனைத்துக்கும் பரீட்சை என்ற நிலை மாற வேண்டும். மாணவர்களின் 'மன இயல்பு, அறிவாற்றல் ஆகியவற்றைக் கணித்து அதற்கேற்ப உயர் படிப்போ அல்லது தொழில் கல்வியோ போதித்து, அவர்கள் கஷ்டப்படாமல் வாழ்க்கை நடத்த வகை செய்ய வேண்டும்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
பி. ப. சுந்தரேசன்,
வெளிக்காவுது இல்லம்,
34/113, கர்ஷகா சாலை,
எர்ணாகுளம்,
கொச்சின் 682 016.

பம்பாய் டெஸ்ட்



ரிச்சர்ட்ஸ்

பம்பாயில் வென்றும் தான் இந்தியா வுக்கு இத்தொடரைக் கைப்பற்ற வாய்ப்பு உண்டு என்பது தெள்ளத் தெளிவா யிருந்தது. இந்தியர்கள் அஹமதாபாத் தோல்வியின் பாதிப்புகளை உதறித் தள்ளி விட்டுத் துடிப்புடன் விளையாடியிருக்கவேண் டும். நடந்ததோ நேர்மாறானது. சாவதான மும் அலட்சிய பாவமும் இந்திய அணியை ஆட்கொண்டன. நல்வாய்ப்புகள் நழுவி விளைவின. ஆட்டத்தின் இறுதி நாட்களில் அழுத்தம் இழக்கக்கூடிய பிட்சில் முதலில் விளையாடும் சந்தர்ப்பம் இந்தியாவுக்குக் கிடைத்தும் பயனில்லாமல் போய்விட்டது.

வெங்ஸர்க்கார் வெளுத்து வாங்கிய முதல் நாளன்று ஆட்டம் அற்புதம். பின்

வீரம் எங்கே போயிற்று?

னல் ஆடியவர்களோ தானத்தில் சிறந்தது நிதானம் என்ற நோக்கில் ஆடினர்.

இந்த நிதானம் சிறிய குறைதான். தொடர்ந்து நடந்தது குற்றம். மேற்கிந்திய அணி விளையாடிய பொழுது விக்கெட்டில் சில குறிப்பிட்ட இடங்களைப் பயன்படுத்தி இந்திய ஸ்பின்னர்கள் அவர்களைத் திண றடித்திருக்கலாம். பேடி அல்லது பிரஸன்னா இந்த பிட்சில் பந்து வீசியிருந்தால் நடந் திருக்கக் கூடிய கதையே வேறு. தரக் குறைவான ஃபீல்டிங் பந்து வீச்சாளர்களின் பிரச்சினையை அதிகரித்தது. மூன்றும் நாள் கூட்டாக 271 ரன்கள் எடுத்த ரிச்சர்ட்ஸ் டுஜான், லாயிட் ஆகியோர் காட்சுகளும், ஸ்டம்பிங் சந்தர்ப்பமும் கைநழுவியதால் உயிர்ப் பிச்சை பெற்றவர்கள்.

முதல் இன்னிங்ஸில் இந்தியா 70 ரன்கள் அதிகமாக எடுத்திருந்தது. நேரத்தை வீணாக்காமல் ஆடி, இறுதி நாள் வெற்றி பெற முயல்வதே குறிக்கோளாய் இருக்க, ரவி சாஸ்திரியும் அஷோக் மல்ஹோத்ராவும் ஆட்டத்தில் வேகம் காட்டினர். மதிய இடைவேளையின் பொழுது எதிராளியைவிட கிட்டத்தட்ட 200 ரன்கள் அதிகமாக எடுத்திருந்தது இந்திய அணி. இத்தருணத் தில் கபில்தேவ் 'டிக்ளேர்' செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்வதில் ஓரளவு அபாயம் இருந்தாலும் அதுவே வெற்றிக்கு ஒரே வழி. மாறாக இடைவேளைக்குப் பிறகு அரை மணி நேரம் இந்திய அணி தொடர்ந்து ஆடியதானது 'வீரம் எங்கே போயிற்று?' என்று கேட்கத் தூண்டியது.

மேற்கிந்திய அணி வெற்றிபெற 95 நிமி டங்களும் 20 மாண்டேட்டரி ஓவர்களும் இருந்தன. 244 ரன்கள் எடுக்க வேண்டிய நிலைமை. அம்முயற்சியில் இறங்காமலே அவ்வணியினர் டிரா செய்யும் நோக்குடன் அவசரமின்றி ஆடினர். தேநீர் இடை வேளைக்குப் பிறகு மேற்கிந்திய அணி மூன்று விக்கெட்டுகள் இழந்த பொழுது கபில்தேவ் தாம் செய்த தவற்றுக்கு நிச்சயம் வருந்தி யிருப்பார். மீதமிருந்த விக்கெட்டுகளை எடுக்க இந்திய அணிக்கு நேரம் போதவில்லை.



வெங்சர்க்கார்

• • •

வெங்ஸர்க்காரும் ரிச்சர்ட்ஸும் எடுத்த சதங்களே அழுது வடிந்த இந்த 'டெஸ்'டில் சுவாரஸ்யமான நேரங்கள். வெங்ஸர்க்கார் ஆரம்பம் முதலே பந்து வீச்சைத் தாக்கி விளையாடினார். ஃபீல்டர்கள் திணறிப் போயி னர்.

ரிச்சர்ட்ஸின் சதம் நிதானமாகத் திட்ட மிட்டு எடுக்கப்பட்டது. அவரது 'ஸ்ட் ரோக்கு'கள் உயர் தரமாய் இருந்தபோதும் அவர் ஆட்டத்தில் வழக்கமான கலகலப்பு இல்லை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டுத்திருப்திகரமாகப் பந்து வீசினார் யாதவ். ஆனாலும் மொத்தத்தில் இந்திய ஸ்பின்னர்களிடம் ஒரு சாதகமான பிட்சைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை இல்லை என்பது வெளிச்சமாயிற்று.

'மான் ஆஃப் தி மாட்ச்' பரிசு ரிச்சர்ட் ஸுக்கு வழங்கப்பட்டது. ஆட்டத்திறனில் அவரை விஞ்சிய வெங்ஸர்க்காரே அதைப் பெற்றிருக்க வேண்டியவர்.

பி. என். சுந்தரேசன்

ஆங்கிலக் கட்டுரையின் தமிழ்வடிவம்:
சிதா ரவி



○ உடைந்த இருக்கைகளும் விளக்கில்லா கம்பமும்



○ பூங்காவின் நுழைவாயில் அருகே குப்பை கொட்டியிருக்கும் கண்கொள்ளாக் காட்சி

நகரத்தில் ஒரு நரகம்

கன்னியாகுமரியின் தலைநகர் நாகர் கோவில். மாவட்டத்தின் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் இங்கே அமைந் துள்ளன. இங்கு—

கல்லூரிகளுக்குவரும் மாணவ-மாணவிகள் கூட்டம்! வழக்கு மன்றங்களுக்கு வருவோர் கூட்டம்! பொருட்கள் வாங்கவும் திரைப் படம் பார்க்கவும் வருவோர் கூட்டம்!

இப்படிப்பட்ட எண்ணிலடங்கா கூட்டம் காலையில் 9 மணி முதல் இரவு 9 மணி வரை இந்த நகரின் எல்லா முக்கியப்பாதை களின் வழியாகவும் வருவதும் போவதுமாக இருக்கிறது. ஆனால், இவர்கள் சற்று அமைதியாக எங்காவது அமர்ந்திருக்கலாம் என்றால் அதற்கான ஓர் இடம் கூட இந்த நகரில் இல்லை! நகரில் 'பாதாளச் சாக் கடைத் திட்டம்' என்று பல தடவை திடீர் பல்லவி தோன்றித் தோன்றி மறைகிறது. தேர்தல்கள் வந்தால் இன் னும் கொஞ்சம் அதிகமாக ஒலிக்கும். பின்னர் ஓய்ந்து போகும்;

'முதல்நிலை நகரசபை' என்று சொல்லப் படும் இந்த நாகர்கோவில் நகர் மன்றத் திற்கு வருவாய்க்கும் குறைவில்லை, வளர்ச்சியிலும் முன்னேற்றமில்லை! சரி, புதிதாக ஏதும் உருவாக்காவிட்டாலும் இருக்கின்ற பூங்காவையாவது பொலி வோடு வைக்க முயலக் கூடாதா?

இந்நகரின் மையத்தில் நகர்மன்றப் பூங்கா. சும்மாச் சொல்லக் கூடாது. தமிழக அரசு நல்ல திரைப்படத்துக்குப் பரிசு கொடுப்பது போல் நல்ல பூங்கா விற்குப் பரிசு கொடுப்பதாக இருந்தால் நாகர்கோவில் நகர பூங்காவிற்குத் தான் முதல் பரிசு நிச்சயமாகக் கிடைக்கும்! இங்கு எந்த வசதியும் இல்லாமலில்லை.

இதனைப் பறவைகளின் சரணாலயம் என்று கூறுவோரும் உண்டு.

சாக்கடையின் சங்கமம் என்று வர்ணிப் போரும் உண்டு.

இரவு ராணிகளின் இன்ப லோகம் என்று எக்காளமிடுவோரும் உண்டு.

இப்படிப்பட்ட சீரும் சிறப்பும் வாய்ந்த ஒரு பூங்காவைத் தமிழ்நாட்டில் வேறு எங்கு பார்க்க முடியும்?

மாலையாகி விட்டது, மனைவியோடு சிறிது நேரம் அமர்ந்துபேசிவிட்டு வரலாம் என்று சென்றால், எல்லாக் கண்களும் சந்தேகத்தோடு பார்க்கின்றன. அமருவதற் காகப் போடப்பட்ட' இருக்கைகளோ பறவை எச்சங்களால் பன்னீர் தெளிக்கப் பட்டிருக்கின்றன!

பூங்காவின் வடபகுதியில் தான் நகரில் உள்ள எல்லாச் சாக்கடைகளும் சங்கமம் ஆகின்றனவோ என்ற எண்ணம் தோன்று மளவு சாக்கடை நாற்றம். இரவு 6மணிக்கு மேல் அந்தப் பகுதியிலுள்ள குற்றுச் செடிக் கும்பலுக்குள்ளேதான் இரவு ராணிகளின் இன்ப இரவுகள் நடைபெறுகின்றன. அதற்கு ஒத்தாசையாக அங்கே மின்விளக்கு களும் எரிவதில்லை!

இப்படிப்பட்டவர்களுக்குப் புகலிடம் வேண்டுமென்பதற்காகத் தான் நகரசபை யினர் அந்தப் பகுதியைச் சீர்ப்படுத்தாமல் இருக்கிறார்களோ?

காவலர்களும் கடமை ஆற்றுவதில் தாங்கள் குறை வைக்கவில்லை என்பதற்காக இரண்டு மாதங்களுக்கொரு தடவை, கேரள அழகி பூங்காவில் கைது! வாலி பரை அழைத்தபோது வளைத்துப் பிடித் தனர் என்று வழக்கு மன்றத்தில் வழக்குப் போடுகின்றனர்! ஆனால், குற்றங்கள் குறையவில்லை!

'உதயதாரகை'யிலிருந்து 'பானுமணாளன்'

புகைப்படங்கள்: அற்புதம் ஸ்டுடியோ நாகர்கோவில்.

அர்ச்சனா
வண்ணப்படம்: பாலு மகேந்திரா

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Editor: K. Rajendran

